ரிஜிஸ்டர் நெ. 2041. தனிப்பிரதி விலை ஒரு அணா.

குடி அரசு

வருட சந்தா முன் பணம்	— ரூ.	3—0
6-மாத சந்தா ,,	— ,,	1--12
வெளி நாட்டிற்கு ,,	— ,,	5—0

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 8. | ஈரோடு, ஆங்கிரஸ-ஞு வைகாசி-மீ 2-உ (15—5—1932) | மலர் 3.

தாதுபுஷ்டிக்கு

பழநி சி. எம். சாமி

மன்மத குளிகை

யை உபயோகியுங்கள்.

நீங்கள் என்றும் எதிர்பாராத ஆனந்தமும், மன உறுதியும், தேகவலிமையும், இல்லற சுகமும் அடைவீர்கள்.

புட்டி 1க்கு ரூ. 2. தபால் சார்ஜ் வேறு.

பழநி சி. எம். சாமி

குருதாம்பர பஸ்பம்

சகல வியாதிக்கும் கைகண்டது.

தீராத திமிர், குஷ்டம், சூலை, மதமதப்பு, தடிப்பு பத்து, கிரந்தி; ஆராத குழிப்புண், குறை நோய், ரணங்கள் முதலிய சகல வியாதிகளும் கண்டிப்பாய் தீரும். 50 வேளை பஸ்பம் விலை ரூ. 25. 25 வேளை 12-8-0. ஏழைகளுக்கு பாதிவிலை.

ஏராளமான சற்சாட்சிகளை கேட்லாக்கில் பார்க்கலாம்.

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால் பழனி. S. I.

தாது புஷ்டிக்கு

"கெய்ரோடைன்"

சாப்பிடுங்கள்.

இந்தியா கவர்ன்மெண்டில் ரிஜிஸ்தர் செய்தது. நபும்சகர்களுக்கும் அளவு மீறிய தாதுபுஷ்டி தரும். உண்மையான நற்சாட்சிகளடங்கிய பெரிய புத்தகம் இனாமாக அனுப்புகிறோம். விலாசம்:

ஆர். எஸ். பதி அன்கோ (ரிஜிஸ்டர்டு) மதுரை.

ஆனந்தரின்

இந்திய பற்பசை (டூத்பேஸ்ட்)

பற்களைப்பளிங்கு போலாக்கும். எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்.

தமிழ் வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி,
சென்னை.

புதுவை முரசு

ஆசிரியர்:-
அ. பொன்னம்பலனர், அவர்கள்.

24 பக்கங்களோடு அழகிய முறையில் திங்கட்கிழமைதோறும் வெளிவரும் சுயமரியாதைச் செந்தமிழ் வாரப் பத்திரிகை. வருட சந்தா ரூ. 3. வெளிநாடு ரூ. 5. மாதிரிப்பிரதி இனாம்!

மானேஜர்,
"புதுவை முரசு"
புதுச்சேரி (F. இந்தியா)

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1.	இயற்கைமதம் ...	0—8—0
2.	சிதம்பர ரகசியம் ...	0—8—0
3.	சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை	0—4—0
4.	பகுத்தறிவேவிடுதலே அல்லது ஜீவாத்மா இல்லே (சித்திரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் உள்ளது) ...	0—6—0
5.	மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை	0—8—0
6.	ஆராய்ச்சி அணிகலம் ...	0—12—0
7.	சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ...	2—0—0
8.	மோட்டாக்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ...	2—0—0
	சுயராஜ்யம் யாருக்கு ...	0—1—0
	சாமிகளின் அடிமைகள் ...	0—12—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிறயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணுவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு', 'ரிவோல்ட்' மாலேகள்.

குடி அரசு மாலேகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களேத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக் வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலே கிரயம்	ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒருவருஷமாலே பைண்ட் செய்தது கிரயம்	ரூ. 4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.

பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனுர் அவர்களியற்றிய

மாதர் சுதந்திரம் அல்லது
பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலே அணு 8. (எட்டு)

கிடைக்குமிடம்:—"குடி அரசு" புத்தகாலயம் ஈரோடு,
இம்பீரியல் பிரஸ், மாயவரம்.

"தமிழன்"
மலாய் நாட்டு சுயமரியாதை தமிழ் தினசரி.

உள்நாடு மாத சந்தா $ 1, 00.
வெளிநாடு ,, இந்தியா $ 1, 50,
ஆசிரியர்:—சுவாமி அற்புதானந்தா.
விலாசம்:—மானேஜர் "தமிழன்"
10, ஜெல்ப்ரோட், ஈப்போ.

Read.
The 'Citizen'
and become a True Citizen.

The only Monthly Magazine in India purely devoted to the civic, Social and economic Interests of the Indians. Annual Subscription Rs. 2—0—0.

For advertisement please apply to:—

The Publisher
The Citizen
86, East Andar Street,
Teppakulam, Trichy.

சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற் கண்ட 6—9—31 ந் தேதி "குடி அரசு"ல் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலேயங்கத்தை புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை விநியோகிக்க விருப்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன்பணமனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம். 100 புஸ்தகம் விலே ரூ. 0—12—0.

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினல் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும். மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

சுயமரியாதை இயக்கப்பிரமுகர்கள்.

திருவாளர்கள், 1. ஈ. வெ ராமசாமி, 2. W. P. A. சௌந்திரபாண்டியம், 3. ஆர். கே. ஷண்முகம், 4. எஸ். ராமநாதன் 5. கைவல்யசாமியார், 6. ஈ. வெ. ரா. நாகம்மாள், 7. இந்திராணி பாலசுப்பிரமணியம். 8. சிவகாமி, சிதம்பரனுர், 9. குருசாமி குஞ்சிதம், 10. நீலாவதிராம சுப்பிரமணியம் 11. சுலோசனு பொன்னம்பலனுர், 12. சிவானந்தம், 13. அருணகிரிசுந்தரி, ஆகியவர்களின் போட்டோ படங்கள் $6\frac{1}{2}$ X $4\frac{3}{4}$ சைஸ்படம் 1-க்கு 0—8—0. ஈ. வெ. ரா. $8\frac{1}{2}$ X $6\frac{1}{2}$ 1-க்கு 1—0—0. மொத்தமாய் வாங்குகிற வர்களுக்கு 100க்கு 6—4—0 வீதம்கமிஷன் கழித்துக்கொடுக்கப்படும்.

தனிகாப்பி வேண்டியவர்கள் விலேக்குமேல் 4 அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். விலாசம்:—

பாலு & Co.,
No. 3 ஒப்பணக்காரத்தெரு,
ஈரோடு

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

'தமிழன்'
வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0
ஆசிரியர்: ஜி, அப்பாதுரையார்,
விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P. O.
கோலார் தங்கவயல் (S. I.)

முன்னேற்றம்.
வாரப்பதிப்பு.
சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $. 5—0—0
இந்தியாவுக்கு ரூ. 8—0—0
ஆசிரியர்:- கோ. சாரங்கபாணி.
விலாசம்:—
மானேஜர்: "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்.

"போர் முரசு"
வாரப்பதிப்பு.
ஆசிரியர் ச. ம. சி- பரமசிவம்
தனிப்பிரதி காலணு.
வருட சந்தா ரூ. 1—8—0.
"போர் முரசு"
19, பெரிய செட்டி தெரு,
உறையூர்—திருச்சி.

"சன்மார்க்கன்"
தமிழ்மாதப்பத்திரிகை.

பல அரிய கட்டுரைகளுடன் கைவல்யம்கட்டுரையும் தொடர்ச்சியாக வருகின்றது.

ஆண்டுசந்தா.
உள்நாடு ரூ. 1—0—0.
வெளிநாடு ரூ. 1—4—0.
ஆசிரியர்: —
சுவாமி சிவநேசம்,
"சன்மார்க்கன்" பழனி.

LEPROSY, LEUCODERMA PATCHES SYPHILITIC ERUPTIONS, ECZEMA, etc.

No Matter Hereditary or self-acquired. No risk of injection. Cured absolutely. For particulars please write with detailed descriptions of the disease in English.

Post Box No. 11413,
Calcutta.

சேலம்ஜில்லா, சுயமரியாதைத்தொண்டர் மகாநாட்டுத் தலைவர் ஜோலார்பேட்டை தோழர் V. பார்த்தசாரதி அவர்களின் சொற்பொழிவு.

8-5-32ல் கூடிய சேலம் ஜில்லா முதலாவது சுயமரியாதைத் தொண்டர் மகாநாட்டுத் தலைவர் தோழர் வி. பார்த்தசாரதி அவர்களின் சொற்பொழிவின் சாரம்:—

அன்புமிக்க சகோதரிகளே!

தோழர்களே!!

இம்மகாநாட்டிற்குத் தலைமை வகிக்கும் சந்தர்ப்பம் எனக்களித்தது குறித்து நான் பெரிதும் மகிழ்வுறுகின்றேன். உங்கள் எல்லோரைக்காட்டிலும் நான் அதிகம் தெரிந்தவனென்றோ, ஆற்றலுடையவனென்றோ எனக்கிப்பதவி அளிக்கப்படவில்லை யென்பது எனக்கு நன்றாகத்தெரியும். ஆனால் இன்னும் ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் வேலை செய்வதற்காக என்னை தயார் செய்ய நீங்கள் விரும்புகின்றீர்கள் என்பதை அறிய நான் மிகுந்த சந்தோஷப்படுகின்றேன்.

தோழர்களே! தொண்டர்கள் என்றபதத்தைக் கேட்டவுடன் தலைவர்கள் என்பவர்களுக்குக் கீழ்பட்டவர்கள் என்ற பொருள் கொண்டுவிடமாட்டீர்களென நம்புகின்றேன். சுயமரியாதை இயக்கத்தில் தொண்டர்களெனவும், தலைவர்களெனவும் எவருமிருக்க முடியாது. ஆனால் இங்கு தொண்டர்கள் யாவர் எனின் தொண்டு செய்கின்றவர்கள், அதாவது மக்கள் நலங்குறித்து நம்சுயமரியாதை இயக்கத்திற்குழைக்கும் தோழர்கள் என்றுதான் பொருள்கொளளல் வேண்டும். நமதியக்கங்கண்ட தோழர். இராமசாமியாரும் "பொருளாதார நிலையில் சற்று குறைந்தவர்களைத்தொண்டரெனவும், போதுமானதையுடையவர்களாகவிருப்பவர்களைத் தலைவர்களெனவும் கருதப்படுவது வழக்கமாகி விட்டது" எனத் திருவாரூரில் நடந்த மாகாணத் தொண்டர் மகாநாட்டின் தலைவர் தேர்தல் காலத்தில் கூறியுள்ளாரென்பதை உங்களுக்கு நினைப்பூட்டக்கருதுகின்றேன். ஆகையால் சுயமரியாதை இயக்கத்தைப் பொருத்த வரையில் தொண்டர் தலைவர் என்ற வித்தியாசமே கிடையாதுஎன்பதை மறந்துவிட வேண்டாம்.

எந்த நாட்டிலும், எந்த இயக்கத்திலும் தொண்டர்கள் உழைப்புத்தான் பெரிதும் பயன்பட்டிருக்கின்றதென்பது வெளிப்படை. உதாரணத்திற்கு வேறெங்கும் செல்லவேண்டியதில்லை. நமதியக்கத்தை எடுத்துக் கொண்டாலே போதுமானதாகும். தொண்டர் தம் இடைவிடா உழைப்பின் பயனால் தான் இன்று நமதியக்கம் ஓங்கி வளர்ச்சி பெற்றுவருகின்றதென்பதை எவரும் மறுக்க முடியாத உண்மையாகும்.

நமதியக்கம்.

நமது இயக்கம் பற்பல கஷ்டநஷ்டங்களுக்கு மத்தியில் நின்று வளர்ந்து வருகின்றது. இவ்வியக்கத்தின் விதையை ஊன்றி, நீர் வார்த்து, வளர்த்து வந்த நமது தோழர் இராமசாமி அவர்கள் இன்று ஐரோப்பா சுற்றுப்பிரயாணம் செய்து வருகின்றார். இந்நிலையில் நமது கடமை என்ன வென்பதையும் யோசித்தல் வேண்டும். தோழர் இராமசாமியவர்கள் எந்நிலையில் நமதியக்கத்தை நம்மிடத்தில் நம்பி விட்டுச் சென்றனரோ அதைவிட சற்று மேலான நிலையில் அவர் திரும்பியவுடன் அவரிடத்தில் ஒப்புவிக்கவேண்டியது நமது முதற் கடமையல்லவா? இப்பொழுது நமதியக்கம் சற்று மந்தமான நிலையயடைந்திருப்பதுபோல் கருதப்படுகின்றது. இது உண்மைக்குமாறானதே யெனினும், பிறர் அவ்வாறு கருதுவதற்குச் சந்தர்ப்பங்களில்லாமற் போகவுமில்லை. இம்மாதிரியான நிலைக்குக் காரணங்களெவையெனச் சற்று ஆழ்ந்து சிந்தித்தால் விளங்காமற்போகாது. தேசிய மோகம், தேர்தல் ஆரவாரம், தலைவர்களென்போர் கவனமின்மை இவைகளெல்லாம் ஏககாலத்தில் ஒன்று கூடியதின் பயனே இன்றைய நிலைக்குக்காரணமாகும்.

தேசியப் புரட்டைப்பற்றி நாம் பல தடவைகளிலும் நமது இயக்க முக்கியப்பத்திரிக்கை யாகிய குடிஅரசு மூலம் தெள்ளத் தெளியக் கூறியுள்ளோம். அதுமாத்திரமல்லாமல் இத்தமிழ் நாடெங்கும் பிரசாரமும் செய்துள்ளோம். மத நடுநிலை, தனிமனி தப்பாது காப்பு, புராதனகலை, பாஷை இவைகளுக்குப் பாது காப்புகள்இவைகளை காங்கிரஸ் திட்டத்தினின்று எடுத்து விட்டால் சுயமரியாதைக்காரர்கள் காங்கிரசில் சேரத் தயார். எனும் பொருள் பட சுயமரியாதைக் காரருக்கும், சுயமரியாதை இயக்கத்திற்கும், பரிந்து பேசுவது போல் ஓர் தமிழ் தினசரிப்பத்திரிக்கை தனது தலையங்கத்தில் சென்ற மாதமெழுதி இருந்ததென்பதை நீங்கள் யாவருமறி வீர்கள். இதிலிருந்தே அப்பத்திரிகை சுயமரியாதை இயக்கத்தின் மூலாதாரக் கொள்கைகளை தெளிவாயுணரவில்லை யென்பது வெளிப்படை யாகின்றது. காங்கிரஸ் திட்டத்திலிருந்து, மதநடுநிலை, கலை, பாஷை, தனிமனி தப்பாது காப்புகள் இவைகளை எடுத்து விட்டால் எஞ்சி நிற்பது, ஜன நாயக ஆட்சியாகும். இந்தஜன நாயக ஆட்சி என்பதின் பொருள் என்னவென்பதை அப்பத்திரிகை யோசித்திருக்குமாயின் அவ்வாறு எழுதியிருக்கமுடியாது. மதநடுநிலைமையும், மற்றவைகளும் எடுபட்டு போனால், ஜாதிப்பாகுபாடுகள் ஒழியலாம், வைதிகம் வீழ்ந்திறக்கலாம், பிறப்பு, சமூகம், மதம் இவைகளாலின்றேற்பட்டிருக்கும் உயர்வு தாழ்வு ஒழியலாம். இவைகளெல்லாம் ஒழிந்தாலுங்கூட ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசம் ஒழிவதெங்ஙனம் என்பதே எனது கேள்வியாகும். சாதி பேதமற்று, உயர்வு தாழ்வற்று நிலவும் ஜன நாயக ஆட்சியால் பணக்காரத்தன்மை ஏழ்மைஎன்ற வித்தியாசம்எஞ்சி நிற்குமல்லவா? இப்பொழுதுயோசித்துப்பாருங்கள்பணக்காரர்ஏழைகள் மீது ஆதிக்கம் செலுத்துவதுதான் ஜன நாயக ஆட்சியென்பது விளங்கவில்லையா? உதாரணமாக அமெரிக்காவை எடுத்துக்கொள்ளுங்கள். அங்கும் இன்று ஜனநாயக ஆட்சி நடைபெறுவதாகத்தான் கேள்விப்படுகின்றோம். ஆனால் அங்கு நடைபெறுவதென்ன? ஏழைகள் நசுக்கப்படுவதும், வேலையில்லாத்திண்டாட்டத்தால் மக்கள் வாடுவதும். பணக்காரர்கள் தங்களது சௌகரியத்திற்காக கோடானகோடி டாலர்களை வீசி எறிந்து சுகிப்பதுவுமாகத்தானே இருக்கின்றது. இது மாத்திரமா? 1928-ம் ஆண்டில் எவ்வித காரணமுமின்றி போதிய சாட்சியங்களுமின்றி ஏழு வருடங்களுக்கு முன்பு எங்கோ கலகம் செய்ததாக பொய்யான வழக்கை ஏற்படுத்தி ஜாக்கோ, வான் ஜெட்டி என்ற இரு தொழிலாளத் தோழரை உலகமே விடுவிக்கப் போராடியும் தூக்கி லிட்டுக் கொன்று விட வில்லையா? சமீபத்தில் இங்கிலாந்தில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டவுடன், பிரிட்டன் அமெரிக்காவின் பெடரல் பாங்கியின் உதவியை நாடிய பொழுது, இங்கிலாந்தில் தொழிலாளர்களுக்குக் கொடுத்து வரும் உபகாரச் சம்பளம், கல்வி வசதி, சம்பள உயர்வு, வீட்டு வசதி இவைகளில் சிக்கனக் கொள்கையைக் கையாண்டாலல்லது தங்களால் உதவி செய்ய முடியாது என பதிலளித்ததின் பயனாய் அவ்வாறே ஏழை மக்கள்வாயில் மண்ணை யள்ளிப் போடச் சம்மதித்ததின் பயனாய்த் தான் தொழிலாளர் மந்திரி சபையை விட்டு தோழர் மாக்டனால்டு விலகியதும், அம்மந்திரி சபை ராஜிநாமாச் செய்ததும், தேசிய மந்திரி சபை சிருஷ்டிக்கப்பட்டதும், இங்கிலாந்தின் ஆதிக்கம் கன்சர்வேடிவ்கள் அதாவது பணக்காரர்கள் கையில் வந்து விடவுமில்லையா? இங்கிலாந்தின் தொழிற்சக்காரை அடியோடு கவிழ்த்து, கன்சர்வேடிவ்கள் (பணக்காரர்கள்) கையில் ஆதிக்கம் சிக்குமாறு செய்தது ஜனநாயகக் கொள்கையோடு கூடிய அமெரிக்காவல்லவா? அதிக தூரம் போவானேன் இன்று நமது நாட்டில் ஜனநாயகக் கொள்கையை ஸ்தாபிப்பதற்குப் பாடுபடுபவர்களிலொருவராகிய தோழர் பண்டித மாளவியா அவர்கள் கூறியுள்ளதையும் உங்களுக்கு நினைப் பூட்டுகின்றேன். தோழர் காந்தி அவர்களுக்கு பேட்டியளிக்க மறுத்த வெல்லிங்டன் பிரபு அவர்கள் செய்கையைக் கண்டிக்கும் பொழுது இனி வரப்போகும் ஜனநாயக ராஜியத்தில் ஓர் கவர்னர்ஜெனரலாய் வரப்போகும் நிலையிலுள்ளவருக்கு பேட்டியளிக்க மறுத்ததென்பது பெரும் தவறாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு வேளை துர்அதிர்ஷ்ட வசமாக இந்தியாவிற்கு சுயராஜியம் வரினும் தோழர் காந்தியவர்கள் தலைமைப் பதவி வகிக்க முடியாதபடிதான் சுயமரியாதைக்காரர்கள் கிளர்ச்சி செய்து தீருவார்கள். தீரவேண்டும். காரணமென்ன? குஜராத் விவசாயிகள் கூட்டத்தில் தோழர் காந்தியவர்கள் "நீங்களெல்லாம் பம்பாயிலுள்ள பணக்காரர்களைப்போலாக வேண்டுமெனப்பிரயத்தனப்படக்கூடாது" என்று கூறியவார்த்தைகளை சுயமரியாதைக்காரரெவரும் அவ்வளவு எளிதில் மறந்து விடுவதிற்கில்லை. ஒருபுறம் ஏழைகளை நாள் ஒன்றுக்கு 0—8—0 சம்பாதிப்பதை விட்டு 0—2—0 அணாவிற்குக் கைராட்டினம் சுற்றச்சொல்லிப் போதித்து அதன்பேரால் அந்நியத்துணி பகிஷ்கார ஆரவாரத்தை ஆரம்பித்து இந்திய மில் முதலாளிகளுக்கு மறுபுறம் சலுகைகாட்டி அதன் பயனாய் லட்சக்கணக்கில் லாபம்பெறும் சந்தர்ப்பத்தை அவர்களுக்களித்துக்கொட்டின ஏழைகள் வாயிலும், கைத்தறித்தொழிலாளர்கள் வயிற்றிலும் அடித்ததைஎச்சுயமரியாதைத்தோழரும் மறந்துவிட்டிருக்க மாட்டார்களல்லவா? இத்தகைய மனப்பான்மையுடையவர்கள் கூறும் ஜனநாயகஆட்சி எத்தகையதாக விருக்குமென்பதையும் யோசித்துப்பாருங்கள்.

ஆகவே ஜனநாயக ஆட்சியென்பது பணக்கார ஆட்சி என்றுதான் பொருள்படுமென்பது விளங்கவில்லையா? எவ்வாறு கடவுள் மதம் இவைகளின் பேரால் போப்புகளும், சங்கராச்சாரிகளும் இது மக்களை அடக்கி ஆண்டு வந்தாரோ, வருகின்றனரோ. அவ்வாறே ஜனநாயகம் என்ற பேரால் பணக்காரர்கள் ஏழைகளை அடக்கி ஆளப்பார்க்கின்றனரென்பது வெளிப்படை. இத்தகைய ஜனநாயகத்தை அடையப்பாடுபடும் காங்கிரசுடன் ஒரு நாளும் சுயமரியாதை இயக்கம் ஒத்துப்போகாது என்பது திண்ணம்.

ஆகையால் யாரும் இம்மாதிரியாக கொள்கைகளை விளங்கிக்கொள்ளாமல் திரித்துக்கூறும் செய்திகளுக்கு

தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க

சேலம் ஜில்லா சுயமரியாதைப்
பெண்கள் மகா நாடு.

தலைவர் திருமதி
எஸ். நீலாவதி அவர்களின்
தலைமைப்பிரசங்கம்.

சேலம் ஜில்லா பெண்கள் மகாநாட்டில் 7-5-32உ தலைமை வகித்த திருமதி எஸ். நீலாவதி அம்மையாரின் முன்னுரையின் சாரம் வருமாறு:—

சகோதரர்களே! சகோதரிகளே!!

நமது நாட்டில் பெண்கள் சமூகம் துக்கப்படக் கூடிய நிலையிலிருந்து வருகிற விஷயம் நாம் அறிந்ததேயாகும். இம்மாதிரி நிலையில் பெண்கள் மகாநாடுகள் கூட்டி முன்னேற்றமடைய வேண்டியவற்றை செய்ய வேண்டுவது ஒவ்வொரு பொது நலவாதியின் கடமையுமாகிறது. அந்த முறையில் இம்மகாநாடு கூட்டப்பட்டிருப்பது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். ஒரு பெண் உருவம் பிறக்கும் பொழுதே அது தனக்கு ஒரு இகழ்ச்சிப் பட்டத்தையும் கூடவே பெற்றுக் கொண்டு வருவதற்கேதுவான முறையில் நமது நாட்டு மதம் அமைந்திருக்கிறதென்பது நாம் பல முறைகளில் கண்ட உண்மையாகும். பெண் பிறந்தது முதல் இறக்கும் வரை அடிமையாக இருந்து, சகல சுதந்திரங்களையும் இழந்து, வாழ்வதற்கு வேண்டிய சகல சட்ட திட்டங்களையும் இந்து மத சாஸ்திர புராணங்கள் விஸ்தாரமாக தெளிவு படுத்துகின்றன. அதிகமாகச் சொல்ல வேண்டுவதேன்? பெண்கள் சமசுதந்திரத்தைப் பெற யோக்கியதையற்றவர்கள்; பாவஜென்மம், பேதைகள் என்று தாங்களே எண்ணிக்கொண்டு நடக்குமாறு ஆக்கப்பட்டிருக்கின்றனர் எனில் இந்து மத சாஸ்திர புராணங்களால் பெண்களுக்கு ஏற்பட்டிருக்கும் நன்மை தானே விளங்குகிறதன்றோ! பெண் பேதை என்று மதத்தின் மூலம் ஆண்களால் கூறப்பட்டது மனித உருவத்தை மனித உருவம் பேதை என்று சொல்லி இழிவு படுத்திக் கொண்டதிலேயே ஆண் சமூகத்தின் பேதமைத் தோற்றம் ஜொலிக்கிறதன்றோ! பெண்களைப் பிற் போக்கடையச் செய்த ஆண் சமூகத்தின் விளைவு என்ன என்று ஒரு கேள்வி பிறப்பின், தற்பொழுது நாட்டிற்கு ஏற்பட்டிருக்கும் திண்டாட்டங்களே என்றவிடை தான் பெறவேண்டியது உண்மையாகும். கண்களிரண்டினில்ஒன்றைக் குத்திக் காட்சி கெடுத்த மாதிரி இன்று ஆண்களாக இருந்து பெறவேண்டிய பயனையும் அடைய முடியாது தவிக்கிறீர்கள். எழுதுகோல் கையிலிருந்தது, எழுதத்தெரிந்தது, முடிந்த வரையில் திட்டினார்கள். அதன் விளைவை இப்பொழுதுதான் அறிந்து சிறிது சிறிதாக உணர்ந்து இம்மாதிரி பெண்கள் மகாநாடுகளைக் கூட்டுவித்து பெண்களுக்கும் சுதந்திர உணர்ச்சியை ஊட்டுவித்து நீங்களும் இதில் நன்மை இருக்கிறதென அறிய ஆரம்பித்திருக்கிறீர்கள். நாங்கள் உங்களிடமிருந்து என்ன சுதந்திரம் பெற்ற போதிலும் சரி, தோழர் சிங்காரவேலு அவர்கள் கூறியது போல் சொத்து சுதந்திரம் பெறாத வரையில் எவ்விதமான குறிப்பிட்ட நற்பயனும் விளையாதென்பதை நான் வற்புறுத்தாமலிருக்க முடியவில்லை. சொத்து சுதந்திரமில்லாவிடில் மற்ற எல்லா சுதந்திரங்களையும் நினைத்த நிமிடத்தில் கண்டிப்பாய் பறிமுதல் செய்யப்படுமென்று நான் திடமாக நம்புகிறேன். இன்று நடைபெறும் பெண்கள் மகாநாட்டைப் போல் அடுத்த ஆண்டில் ஒன்று கூட்ட வேண்டுமானால் பெண்களுக்குச் சொத்துரிமை இல்லாத நிலையில் ஆண்கள் தான் கூட்ட வேண்டும். ஆண்களுக்கு மனமில்லாவிடில்பெண்கள் சுதந்திரக் கதைமுடிந்தது என்று தான் சொல்ல வேண்டும். பெண்கள் முன்னேறி விட்டார்கள் என்ற சொல்லை நான் ஒப்புக் கொள்வதே இல்லை. அது பெண்களை ஏமாற்றப்படுவதற்கு உபயோகப்படுத்தும் சொல் என்று தான் நான் எண்ணிக் கொள்ளுகிறது. கைசுடின் கந்தையை பிடித்துக் கொள்ளுகிறோம், கால் சுடின் மிதியடியை போட்டுக் கொள்ளுவோம் என்று கூட தைரிய உணர்ச்சி வராத பெண்களா முன்னேறிவிட்டார்கள்! இருபத்தியொரு வயது கூட நிரம்பப் பெறாது தனியே ஒரு கண்டத்திலிருந்து மற்றொரு கண்டத்திற்கு விமானத்தில் பாயும் ஆமி ஜான்சன் நாட்டில்பெண்கள் முன்னேற்றமடைவார்களா? "பெண்ணாகி வந்தொரு மாயப்பிசாசு பிடித்திட்டென்னை கண்ணால்வெருட்டுதே" என்று அசட்டு மொழிபுகன்ற பட்டினத்தாரையும் இன்னும் அவர் போன்றவரையும் போற்றும் மனப்பான்மை கொண்ட நமது நாட்டில் பெண்கள் முன்னேற்றமடைவார்களா? என்று உங்களை யோசித்துப் பார்க்க வேண்டுகிறேன். பெண்களும் மனிதர்கள் தான்; அவர்களுக்கும் மனித உணர்ச்சி உண்டு; சகல சுதந்திரமும் உண்டு; உலகில் பேர் பாதி பங்கு உண்டு; அதை அனுபவித்தே தீருவோம் என்று முன் வரும் காலை மதங்கள் முட்டுக்கட்டை போடுகின்றன; சாஸ்திரங்கள் ஓலமிடுகின்றன, வைதீக வெறியர்கள் அலறுகின்றார்கள்; பெண்களிடம் கற்பு என்று சொல்லி விட்டு ஆண்கள் செய்யும் அயோக்கியத்தனத்திற்கு அளவேயில்லை, மற்றோர்புறம் விதவை என்று பட்டம் சூட்டி மூலையில் குந்திக் கொள்ளுமாறு சொல்லப்படுகிறது. இவ்வாறு சொல்லும் ஆண்களை மொட்டையடித்து காவி வேட்டி கட்டி, மாவரைக்கச்சொல்லி ஏற்பாடு செய்யும் பொழுது தான் அவ்வாண்கள் உணருவார்கள் என்று நம்புகிறேன். கொடூரத் தன்மை நிறைந்த இம்மாதிரி மானிடர்களை ஒழிப்பது தான் நமது முன்னேற்றத்திற்கு முதல் வேலையாகும் என்று கருதுகிறேன். இப்பொழுது இருக்கிற இந்து மத சாஸ்திர புராணங்கள் ஒழிந்தால் நாம் முன்னேற்றத்திற்கு செய்ய வேண்டிய வேலையில் முக்கால் பாகம் நிறைவேறியதாகும் என்றும் நான் அபிப்பிராயப் படுகிறேன். நமது நாட்டில் பழமொழிகள் ஓர் புறம் எல்லாவற்றிற்கும் வழங்கப்படுகின்றன. அதுவும் ஓர் முட்டுக்கட்டை என்று தான் கூறுவேன். "பெண்டிற்கழகெதிர் பேசாதிருத்த" லாம் இது ஒரு பழமொழியே! போதும், பெண்ணுரிமையை பறிமுதல் செய்வதற்கு பெண்களிடம் சீர்திருத்தத்திற்கான முறைகளை சொன்னால் அவர்கள் "பாபஞ் சேனசிகட்டலு" இதெல்லாம் நமக்கெதுக்கம்மா என்று நவிலுகிறார்கள். ஆதிதிராவிட வகுப்பினர் தாங்கள் தீண்டப்படாதவர் என்று எப்படி தங்களையே எண்ணிக் கொண்டிருக்கிறார்களோ அதே மாதிரி தான் பெண்களும் தாங்கள் பாபஞ் செய்தவர்களென்றும், ஒன்றுக்கும் உதவாதவர்களென்றும், எவ்வித சுதந்திரமும் பெற அருகதை அற்றவர்கள என்றும் மனதில் உறுப்போட்டு ஊறிப் போயிருக்கிறார்கள். பெண்ணுலகம் படிக்காதது ஓர் பெருங் குறையாகும். படிக்காத ஓர் பெண்ணிடம் பத்திரிகையை நான் காண்பித்து அதைப்பற்றி என்ன தோன்றுகிறது என்று கேட்ட பொழுது வெள்ளைக் கடுதாசியில் கரியை தெளித்திருக்கிறது என்றும் அந்த வீண் வேலை ஏன் செய்திருக்கிறதென்றும் என்னைக்கேட்டது. இந்த விஷயத்திற்கு கோபப்படுவதா? இறங்குவதா? இறங்கத்தான் வேண்டும். இம்மாதிரி பெண் சமூகத்தில் சீர்கேடுற்று அடிப்படையில் பலமிழந்து கிடக்கிறது. சிறுவயதிலேயே கல்விக்கான ஏற்பாடுகள் செய்யவேண்டுவது முக்கியமாகும். இது விஷயத்தில் எனது சகோதர சகோதரிகளை உதவி செய்யுமாறு வேண்டுகிறேன்.

மதத்திற்கு ஆபத்து.

பாதிரியார் வாழ்த்து.

சமீபத்தில் ஆக்ஸ் போர்டிலுள்ள செயின்ட் பீட்டர் மண்டபத்தில் கிறிஸ்துவர்கள் மகாநாடொன்று கூடியது. அப்பொழுது ஆக்ஸ்போர்டு பிரதம மந்திரிகளில் ஒருவரான ரெவரண்டு ஜே. கிரான்ஸ்டன் டூஸ்பரி பேசிய போது குறிப்பிட்டதாவது:—

கிறிஸ்து மதத்தை நேருக்கு நேராக எதிர்த்து நிற்பது தற் பாது பொதுவுடைமைக் கட்சியாரேயாவர். மதத்திற்கும், அக்கட்சிக்கும் போராட்டம் அதிகரித்துக் கொண்டு போகலாம். ஆக்ஸ் போர்டிலும் அது வலுவடைந்து வருகிறது. பொதுவுடைமைக் கட்சியிலிருப்பவர்கள் முட்டாள்களென்று கருதிவிடுவதிற்கில்லை. அதில் கற்றவர்கள் ஏராளமாயிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் கொள்கையில் முற்றிலும் நம்பிக்கைவைத்திருக்கிறார்கள். அவர்கள் தங்கள் கொள்கைக்காக உயிரையும் தியாகஞ்செய்யத் தயாராகவிருக்கிறார்கள்.

சமீபத்தில் நான் ஒரு சிறுவனைச்சந்தித்தேன், அவன் ஒரு பொதுப்பள்ளிக்கூடத்தில் கல்வி கற்று வருகிறான். சிறுவனாயிருந்தும் அவன் பொதுவுடைமைக்கொள்கைகளை நன்கு அறிந்திருக்கிறான். அவனுடன் சுமார் 2மணி நேரம் விவாதஞ் செய்தேன். ஆனால் அச்சிறுவனின் கொள்கையை மாற்ற என்னால் முடியாது போயிற்று. நம்மில் எத்தனை பேர் அவ்வித வீரம் பொருந்தியிருக்கிறோம். காலப் போக்கை உத்தேசித்து பாதிரிகளும் நிதான புத்தியுடன் நடந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

மேற்கூறிய பாதிரி இவைகளைக்கூறியதும் மகாநாட்டுக்கு வந்திருந்தவர்கள் ஆச்சரியப்பட்டு திடுக்கிட்டனராம்.

த—நா

சுயராஜியம் யாருக்கு?

தோழர் ம.சிங்காரவேலு பி.ஏ., பி.எல்., அவர்களால் எழுதியது. இதில் ஜாதிமதக்கொடுமை, சமூக இன்னல்கள், அரசியல், பொருளாதாரக்கொடுமைகள், காங்கிரசின் போலி வேஷம், தீண்டாமைஒழிப்பதின் அவசியம் முதலியனபற்றி இனிய, எளிய நடையில் வெகு தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

பிரதி 1க்கு விலை 0—1—0.

கிடைக்குமிடம்:—

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

திருச்சி ஜில்லா ஆறாவது பார்ப்பனரல்லாதார் மகாநாடு.

தலைவர் சர். ஏ. பி. பாத்ரோ அவர்களின் சொற்பொழிவு.

திருச்சியில் 7-5-32ல் நடந்த திருச்சி ஜில்லா 6-வது பார்ப்பனரல்லாதார் மகாநாட்டில் தலைமை வகித்த சர். ஏ. பி. பாத்ரோ அவர்களின் சொற்பொழிவின் சாரம்வருமாறு:—

சகோதரர்களே! சகோதரிகளே!!

நெல்லூரில் மகாநாடு கூடிய போது நமது கக்ஷியின் லட்சியத்தைச் சீராக்கிப் புனர் நியமனம் செய்வதற்காக மற்றோர் மகாநாடு கூட்டப் படுமென்று கூறப்பட்ட துண்டு. ஆனால் ஏதேனும் ஒரு காரணத்தை முன்னிட்டு கூட்டப் படாமலே போயிற்று. நமது கட்சி செய்ய வேண்டிய வேலை இத்தன்மையதென்று நிர்ணயிக்கப் பட்டதாயினும், ஜில்லாக்களில் அந்நிர்ணயம் ஈடேற்படவில்லை. ஜில்லா ஸ்தாபனங்களோடு தலைவர்கள் அடிக்கடி நெருங்கிக் கலக்க வேண்டுவது முக்கிய கடமையாகும்; அப்படி கலகும் போது ஆங்காங்குள்ள பிரமுகர்களுடன் பொதுப் பிரச்சினைகளைக் குறித்து விவகரித்து ஆலோசனை செய்ய இடமுண்டாகும். 1930-ம் வருஷத்து எலக்ஷன்களில் நமது கட்சியாருக்கு வெற்றி யேற்பட்டதுடன், உத்தியோகம் பொறுப்பினை வகிக்கும்படி அழைக்கப் பட்டது பெரிதும் சிலாகித்ததற் குரியதே.

சட்டசபையில் நமது கக்ஷியைச் சேர்ந்தவர் பலர் இருக்கின்றனர். தேச க்ஷேமத்தைக் குறித்த ஒவ்வொரு விஷயத்திலும் நமது கட்சியார் போதிய அக்கரை கொண்டு ஆதரித்து வருகின்றார்கள்.

நமது இயக்கத்தின் பிரதம கொள்கை பட்சபாத மில்லாத நீதியே; எந்த வகுப்பினாலும், சாதியினாலும் அதிகாரத்தையாவது, செல்வாக்கையாவது முழுதும் ஸ்வீகரித்துக் கொள்வதை நமது கட்சியார் ஒருபோதும் ஏற்க மாட்டார்கள். பொது ஜன சேவையில் புத்தி கூர்மை மாத்திரம் இருந்தால் போதாது. அத்துடன் குண விசேஷமும், திறமையும், காரியத்தை ஆரம்பித்து நிறைவேற்றும் சக்தியும் அமைந்திருக்க வேண்டும். போட்டிப் பரீட்சைகளில் 'பாஸ்' பண்ணுவதைச் சிலர் ஸ்வீகரிததுக் கொண்டிருக்கிறார்கள். கேவலம் அப்படி 'பாஸ்' பண்ணுவது மாத்திரம் பொதுஜன சேவைக்குப் போதாது; அதைக்காட்டிலும் மற்ற குண விசேஷங்கள் பொருந்தி யிருக்க வேண்டும். பிரிட்டிஷ் கல்விக் கொள்கையினால் அதிக பலன் ஏற்பட்டதாகக் காணோம். கல்வி கீழிருந்து, அதாவது விவசாயிகளிட மிருந்தும் கிராமாந்தரங்களிலிருந்தும் ஆரம்பமாகிப் பலமான அஸ்திவாரமிட்டு எழும்ப வேண்டும். அப்படிக்கில்லாது உச்சியிலிருந்து ஆரம்பிக்கப் பட்டதனால் பிரிட்டிஷ் கல்வி லட்சியமானது அவ்வளவாகப் பலன் கொடுக்க வில்லை. நாம் பாமரர்களிடம் பழக வேண்டியவர்களா யிருக்கிறோம்; நமது இயக்கம் சாமானிய மக்களைச் சார்ந்ததாக விருக்கின்றது. அவர்களைப் படிப்பிக்கவும், ஒழுங்கான குடியாட்சிக்குரிய அரசியல் ஞானத்தையும் பெருக்குவிக்க நமது கட்சி வேலை செய்து வருகின்றது. ஜனங்களாகட்டும், தேச மன்னர்களாகட்டும், சொற்ப ஜனதி பாத்தியம் செலுத்துவதை நாங்கள் கண்டிக்கிறோம். அனுகூலமான நிலைமையில் உள்ளவர்களுக்கு யாதொரு முரண்பாடில்லாமல் போதிய கல்விப் பயிற்சி யில்லாத அனுகூலங்களினால் அவதியுறுவோர்க்கு உதவி செய்வதே நமது இயக்கத்தின் கொள்கை.

நாம் செய்ய வேண்டிய பிரதம வேலை யென்ன வெனில், பாமர ஜனங்களுக்கு கல்வியறிவு ஊட்டுவதே. ஆழ்ந்த தேசீயத்திற்கு அஸ்திவாரமாயிருப்பது ஜனங்கக் கல்வியே. புத்தியும், திறமையும் வாய்ந்த சிலர் மட்டும், அல்லது சர்வ கலா சபைகளிலிருந்து வெளியேறி இருக்கும் சிற்சிலர் மட்டும் ஜன சமூகத்திற்கு பிரதிநிதிகளாக முன் வருவது சாத்தியமல்ல. தேசத்து மகாஜனங்களுக்குத் தேவையான கல்வியை ஊட்டுவிக்கும் நம்பிக்கையை நிறைவேற்ற அவர்களால் முடியாமலிருப்பது பற்றி கிராமக் கல்வியையும், சீர்பாட்டையும் பெருக்குவிக்குமாறு நமது கட்சியார் விசேஷ சுறுசுறுப்பு காட்ட வேண்டுவது அத்யாவசியமாகும்.

சுதேசியம்.

ஒழுங்கான வழிகளைப் பின் பற்றி இந்தியக் கைத் தொழில்களை விருத்தி பண்ணுவதற்காக உள்ளபடி பொருளாதாரத்தையும், தொழிலூக்கத்தையும் நமது கட்சியார் கைக் கொண்டிருக்கும் லட்சியங்களில் சுதேசியமும் ஒன்று.

தேசத்தில் செய்யப்பட்டவஸ்திரங்களை மாத்திரமல்ல, மற்றும் ஜீவ வாழ்க்கைக்கு உரியஒவ்வோருவகையிலும் இந்திய சரக்குகள் சலீசாகக்கிடைக்கும் பட்சத்தில் அப்படிப்பட்ட சரக்குகளையே முன் வைத்து ஆதரிக்க வேண்டும். இத்தகைய விருப்பத்தை ஈடேற்ற கருதுகையில் அன்னிய நாட்டுச் சரக்குகளை நாம் வேண்டாமெனச் சொல்லி விடலாம். ஆனால் "பகிஷ்கார" மென்னும் அம்சத்தை தாங்கிப் பின் பற்ற வேண்டுமென ஜனங்கள் பலாத்கரிக்கப் படுவரேயானால், அது பொருளாதார முறையில் பெருந்தவறுதலாகும். உள்நாட்டுக் கைத் தொழில்களுக்கு அதைக்காட்டிலும் தீங்கு வேறெதுவுமில்லை. "மறியல்" என்பது பகிஷ்காரத்தினின்றும் எழும்பிய ஆர்த்தத் தன்மையாம், அது சுதேசியத்திற்கு முரண்பாடானது. அதனால் ஏழைக் குடியானவனுக்கு ஏற்படும் தொல்லை சாமன்யமானதன்று. அது சுதந்திரத்திற்கும், சுயேச்சைக்கும், சாந்தத்திற்கும் எதிரிடையாயிருப்பதால், அதை அவலம்பிப்பது சுத்தத் தவறாகும். "அமைதியான மறியல்" என்பதற்கு அர்த்தமேயில்லை. ஏனென்றால் மற்ற பிரஜைகளின் உரிமைகளோடும், சுதந்திரங்களோடும் "மறியல்" குறிக்கிடாதிருக்க முடியாது. இவ்விஷயமாக ஏற்பட்டுள்ள கடுந் தொல்லைகளை நான் உங்களுக்குச் சொல்லவும் வேண்டுமோ?

ஸ்தாபன அமைப்பு.

தவறுதல்களை வெளிப்படையாக ஒப்புக் கொள்வதனால் நமது லட்சியத்தில் அபிமானக் குறைவு ஏற்பட்டதெனச் சொல்லலாகாது. நமது வேலையைப் பூர்த்தி செய்வதற்காக நல்ல அவயவ அமைப்புகள் இருக்க வேண்டும். கடந்த 2, 3, வருஷங்களில் நமது தாலூகா ஸ்தாபனங்களும், ஜிலா ஸ்தாபனங்களும் உறக்கத்தில் விழுந்திருப்பதைக்காண எவருக்கும் விசனமுண்டாகக் கூடும். நமது கட்சியியக்க சரித்திரத்திலே இப்போதிருக்கும் நிலைமையானது மிகவும் நெருக்கடி கொண்டது; புரட்சி ஸ்தாபனங்களுக் கெதிராக நாம் ஒன்று கூடி வேலை செய்ய வேண்டிய கால மீது. 1916ம் வருஷத்திலிருந்து கிராமாந்திரங்களில் ஊழியம் செய்வதற்கான புதிய உற்சாகதை ஊட்டி யிருக்கின்றோம். நமது கட்சியானது உத்தியோகத்திலும், அதிகாரத்திலும் செல்வாக்குடனிருக்கும் இச்சமயத்தில் மந்திரிமார்களும், தலைவர்களும் சட்டசபையிலே தம் தினசரி தேவைகளுக்கு மேலாக பாராதிருப்பது பெரிதும் விசனிக்கத் தக்கது. கைங்கர்யம் செய்யக் காத்திருக்கிறனர் பலர், அவர்களுக்கு உதாரணங்காட்டி, உற்சாக மூட்ட வேண்டும்; தலைவர்களே முன்னின்று அவர்களை நடத்த வேண்டும். ஆனால் காங்கிரஸ் வகையைச் சேர்ந்த "வாலண்டியர்கள்" (தொண்டர்கள்) நமக்கு வேண்டாம். கலப்பற்ற பக்தியோடு உழைப்பவர்களே நமக்குத் தேவை. நடுமுடைய தாலூக்கா ஸ்தாபனங்களும், ஜில்லா ஸ்தாபனங்களும் இவ்வேலையை திரும்ப ஆரம்பித்து நடத்தும்படியான பொறுப்பை இம்மகாநாடு தட்சணமே ஏற்றுக் கொள்ளலாம்.

சடுதியில் ஆக வேண்டிய கூட்டமைப்பு வேலை, சமரிலை.

இந்தியாவில் மற்றோர் அகில இந்தியக் கட்சியிருப்பது அவசியமாகு மென்பது இந்தியாவிலுள்ள ஒவ்வொருவர்க்கும் தெளிவாகப் புலப்படக்கூடும். ஊன்றிப் பார்ப்போர் எவரும் நமது கட்சி இயக்கமானது இந்தியா முழுமைக்கும் ஏற்றதெனக் கூசாமற் சொல்லுவார்கள். ராஜகிய நிலைமையில் நமக்கிருக்கும் பரந்த லட்சியம் காரணமாக காங்கிரஸ் லட்சியத்திலும், நடவடிக்கைகளிலும் கலந்து கொள்ளாத ஒவ்வொருவரும் ஒழுங்கு முறையோடு கூடின கட்சி என்று நம்மவர்களோடு சேர்ந்து உறவாடிக் கைகுலுக்க வருவது திண்ணம்.

நமது விரிமனங் கொண்ட லட்சியங்களும், நீதியை நிலைநிறுத்தும் உறுதியும், கடந்த 18 வருஷ காலமாக நமது கட்சியார் தேசத்திற்குச் செய்துள்ள ஜனசமூகச் சேவையும், சட்ட வரம்பிற்குட்பட்ட அனைவரையும் நம்மோடு கூட்டுறவுடன் கலந்துழைக்கும்படிச் செய்திருக்கின்றன. பாமரர்களை முன்னேற்றுவதிலும், இந்தியாவில் ஜனங்க சுவாதி பத்தியம் ஸ்தாபனமாவதற்காகவும் நமது கட்சியார் புரிந்திருக்கும் உழைப்பு பெரிதும் பாராட்டத் தக்கது. இச்சந்தர்ப்பத்தில் விசேஷ ஸ்தாபனமொன்று அமைக்கப்படுவது அத்தியாவசியமாகும். அதைக்குறித்து இன்னும் உறுத்திச் சொல்ல என்னால் முடியவில்லை. "சட்ட மறுப்பு" இயக்கம் கூடாதெனக் கண்டிப்போர் அனைவருக்கும் இப்பொழுது நல்ல சமயம் வாய்த்திருக்கின்றது. தேசத்திற்குக் கூட்டமைப் போடு கூடின சேவை புரிவதனால் சுயராஜ்ய சித்தி அடையலாம்.

சட்ட மறுப்பு இயக்கம்.

தேசத்திற் காணப்படும் ராஜீய ஊடாட்டங்களில் தலை நிமிர்ந்து கண்ணெதிர்ப்படுவது "சட்டமறுப்பு இயக்கமேயாம். தேசத்திலுள்ள இதர காரியங்கள் இந்த இயக்கத்தினால் ஸ்தம்பித்துப் போய் விட்டன. நாங்கள் சட்ட வரம்பிற்கு உட்பட்டவர்களாதலின், தேச நிர்வாகஸ்தர்களை ஆதரிப்பவர்களாகின்றோம். தேசத்து அரசியல் அமைப்பில் அவசரமான மாறுதல்கள் இருக்க வேண்டுவதற்காக நாம் ஊடாடுகின்றோம். எனினும் ஜனங்க க்ஷேமத்திற்கு எதிரிடையாயிருப்பதாகஎமக்குத்தென்படுகின்ற ஒவ்வொன்றையும் நாம்கண்டிக்காதிருக்க முடியாது. பிரிட்டிஷ் அதிகாரவர்க்கத்தாருடைய கொள்

தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க.

சேலம் ஜில்லா சுயமரியாதைத் தொண்டர் மகாநாடு.

திறப்பாளர் 'திராவிடன்' ஆசிரியர் தோழர் டி. வி. சுப்பிரமணியம் அவர்களின் சொற்பொழிவு.

8-5-32ல் கூடிய சேலம் ஜில்லா முதலாவது சுயமரியாதைத் தொண்டர் மகாநாட்டுத் திறப்பாளர் தோழர் டி.வி.சுப்பிரமணியம் அவர்களின் சொற்பொழிவு:—

பிரியமுள்ள சகோதரர்களே!
எனது அருமைத்தோழர்களே!

சேலம் ஜில்லா சுயமரியாதைத் தொண்டர்கள் மகாநாட்டைத் திறந்துவைக்கும் பணியை எனக்கு அளித்தமைபற்றி பெரிதும் மகிழ்வெய்துகிறேன். இம்மகாநாட்டைத்திறந்து வைக்கும் பணியை ஆற்றுதற்குச் சுயமரியாதைத்துறையில் செவ்வனே கடனாற்றிவரும் உண்மைத்தொண்டர்கள் பலரிருக்க எனக்கு இக்கடனாற்றப் பணித்தது என்பால் இம்மகாநாட்டைக்கூட்டுவித்த வரவேற்புக்கழகத்தினர் கொண்டுள்ள பேரன்பையே காட்டுகின்றது. இம்மகாநாட்டைத் திறந்துவைக்கு முகத்தான், எனது பகுத்தறிவிற்கெட்டிய சிலவுரைகளைப்பகர அவாவுறுகின்றேன். அதனை இம்மகாநாட்டிற்குப் போந்துள்ள சுயமரியாதைப் பெரியார்களும், தொண்டர்களும், சகோதரிகளும், தங்கள் பகுத்தறிவிற் கேற்றதைக்கொண்டு ஏலாததை யகற்றிவிட உரிமை யுண்டென்பதைத்தெரிவித்துக்கொண்டு எனது சிலமொழிகளை இயம்புகின்றேன்.

தலைவரும் மகாநாடும்.

நமது சுயமரியாதை இயக்கத்தை இப்பெயருடன் இத்தென்னாட்டிற்கு நிறுவிய அரும்பெருந் தலைவராகிய உயர்திரு. ஈ. வெ. ராமசாமியாரவர்கள் இத்தொண்டர் மகாநாட்டிற்கில்லாதது ஓர் பெருங்குறையென்பதை இவண்போந்துள்ள தொண்டர்கள் யாவரும் மறுக்கமாட்டார்களென நினைக்கிறேன். நமது பெரியார் அவர்கள் தனது உழுவலன்பு வாய்ந்த இல்லக்கிழத்தியாராம் திருமதி நாகம்மாளவர்களையும், உடன் பிறப்பினரையும் உற்றாரையும் விட்டுப்பிரிந்து ஆண்டின் முதிய காலத்தில் தனது உடல் நிலையையும் ஒரு பொருளாகக்கருதாது ஐரோப்பா கண்டத்தைச் சுற்றிப்பார்த்து வந்து நமது சுயமரியாதை இயக்கத்திற்கு பேராக்கம் அளிக்கக்கொண்ட மனவுறுதியையும் அஞ்சாத வீரத்தையும் அறிவுடைய எவரும் போற்றாமலிருக்க மாட்டார்களென நினைக்கின்றேன். நமது பெரியாரவர்கள் இல்லாதபோழ்து இதுபோன்ற மகாநாடுகள் நடைபெறுவதொன்றே சுயமரியாதையியக்கத்தின் மறுவற்ற தன்மையையும், செல்வாக்கையும், ஆதரவையும் காட்டுவதாகும். மேலும் நமது எதிரிகட்கும் நல்லறிவை யூட்டுமென்பதும் நன்கு புலனாகும் என்பதில் ஐயமில்லை.

நமது கொள்கைகள்.

சுயமரியாதையின் கொள்கைகளைப்பற்றிய பலர் பலவித பொருள் கொண்டு உரையாடப்புகுந்திருக்கின்றனர். நமது எதிரிகளோ சுயமரியாதை இயக்கத்தின் உயரிய கொள்கைகளைக்கல்வியறிவற்ற மக்கள்பால் திரித்துக்கூறி சுயமரியாதைக்கட்சியின் பால் வெறுப்புண்டாகுமாறு தூண்டுகின்றனர். பொது மக்களிடம் உண்மையை மாற்றி ஏமாற்றுங் காலம் மலையேறி விட்டதென்பதை அவர்கள் விரைவில் உணர்வார்களென்றே நினைக்கின்றேன். நமது கட்சியின்மீது பெரியகுற்றமாகக்காட்டி பொதுமக்களை ஏமாற்றுவது யாதெனில் கடவுளில்லையென்று கூறும் நாஸ்திக கட்சியென்பதேயாகும். நமது தலைவர் இவ்வியக்கத்தைத் தோற்றுவித்த இந்நாள்வரை கடவுளில்லையென்பதுதான் சுயமரியாதைக்கட்சியின் கொள்கையென்று கூறினதாகத்தெரியவில்லை, மற்றும்மாகாணமகாநாட்டுத் தீர்மானங்களிலும் கடவுளில்லையென்று இம்மகாநாடு கருதுகிறதென்றதீர்மானம்நிறைவேற்றப்பட்டதாகவும் தெரியவில்லை. ஆனால் கடவுளைப்பற்றிய கவலைவேண்டியதில்லையென்றும், ஏனெனில் முற்றறிவும் முடிவிலாற்றலும் முதலிய அரிய குணங்களைக்கொண்டதாகக்கூறும் ஒன்றைக்கடவுளாக வைத்து அதற்கு உருவங்கற்பித்து, மனைவி மக்கள், உற்றார் உறவினர் முதலியவைகளை யெல்லாமமைத்து அதிலும் ஜாதி வேற்றுமை உயர்வு தாழ்வு தீண்டாமை, தொடாமை, பாராமை முதலிய அறிவற்ற முறைகளையெல்லாம் உண்டாக்கி அல்லும் பகலும் ஓயாது நெற்றிவேர்வை நிலத்தில் விழத்தேடும் பொருளைக்கல்வியிலும், சுண்ணாம்பிலும், செம்பிலும், பித்தளையிலும், திருவிழாவிலும், தாசி, வேசிகள் கூத்தாட்டத்திலும் செலவழிப்பதும், உண்ட மயக்கம் தீராத பார்ப்பனக்கூட்டங்களுக்கு ஓயாது சத்திரம் முதலியனகட்டி சோறுபோடுவதிலும், தங்கள் அரிய பகுத்தறிவையும் காலத்தையும் வீணாக்குமாறு செய்து தன்னை எந்தக் காலத்திலும் பிறனுக்கு அடிமையென்ற உணர்ச்சியையும் உடையவனாகச்செய்யும் பகுத்தறிவிற் கேலாத மதம் அழியவேண்டுமென்று மட்டும் தான் கூறுகிறதேயொழிய கடவுளில்லையென்றோ? கடவுளுண்டு என்றோ? வாதிட்டுக்கூறும் கொள்கையைச்சுயமரியாதை இயக்கம் கொள்ளவில்லை. கடவுள் உண்டு என்று நம்புகிறவன் எவ்வாற்றானும் கடவுளின் பேராலும் மததின்பேராலும் பகுத்தறிவிற் கேலாத வழியில் செலவு செய்வதைச்சுயமரியாதை இயக்கம் வெறுக்கிறது. அதே போல் கடவுளில்லையென்று சொல்லுகிறவனும் பொறுப்பற்ற வழியிலும், பகுத்தறிவிற்கேலாத நெறியிலும், ஆடம்பரவாழ்க்கையிலும் செலவுசெய்வதைச் சுயமரியாதை இயக்கம் தவறென்று அறிவுறுத்துகிறது. கடவுள் உண்டு என்னும் கூட்டத்திலும, கடவுள் இல்லையென்னும் கூட்டத்திலுமுள்ள அறிவைப்பின்பற்றும் பெரியோர்களையே சுயமரியாதை தழுவுகிறது. பொதுவாகத்தென்னாட்டில் பார்த்தால் கடவுள் நம்பிக்கையுடையவர்களே தீயவொழுக்கங்களுக்கும், தீய செயல்களுக்கும் நிலைக்களமாக விளங்குகின்றனர். இதற்கு வேண்டுமானால் பலமேற்கோள்கள் எடுத்தியம்பலாம். தற்காலத்தில் கோயில்கள் என்று கூறுமிடங்களில் நிகழும் தீச்செயல்கள் அளவிடக்கூடியவையல்ல. தென்னிந்தியாவில் தீயவொழுக்கங்களுக்கும், கொலை முதலிய பஞ்சமா பாதகங்களுக்கும் இடமாயிருப்பது கோயில்களேயாம். திரு. காந்தியவர்கள் கோயில்களை வேசிகள் இருப்பிடம் என்று கூறியிருக்கிறார். மேலும் தென்னிந்தியாவில் சாதிவேற்றுமையும் உயர்வு தாழ்வும், தீண்டாமையும், வன்மையுற்று உறத்து நிற்பதற்குக் காரணம் கோயில்களேயாகும். இவையன்றி தென்னிந்தியாவில் நிலங்களும் பொன் வெள்ளி ரத்தினங்கள் முதலிய பொருள்களும் இன்பம் நுகரத்தெரியாத உருவச்சிலைகட்குப் பெரும்பாலும் விடப்பட்டுப்போன காரணமே? ஏழை மக்கள் பெரும்பாலும் நிலன்பொருளின்றி பசிப்பிணியால் வாடித்துன்புறவேதுவாயிருந்து வருகிறது. நம்நாட்டு ஏழை மக்களின் வறுமையைப்போக்க வேண்டுமானல் நமது நாட்டிலுள்ள கோவில்களின் நிலங்கள் முதலிய பொருள்களை ஏழைகட்கு உரிமையாக்கவேண்டும் கொழுத்துத்திரியும் ஒருகூட்டத்தினர் மட்டும் நுகரவிடங்கொடுத்துவருவது நாட்டின் முன்னேற்றத்தைக் கருதியதாகாது, இதற்காக நாட்டினரும் சுயமரியாதைத் தொண்டர்களும் கிளர்ச்சி செய்ய வேண்டுவது இன்றியமையாதனவாகும். இந்தியாவிற்கு உண்மையாக சுயராஜ்யம் வரவேண்டுமென்று நினைத்தால் சுயமரியாதைக் கட்சியின் கொள்கைகளைக் கடைப்பிடித்தொழுகவேண்டும். சுயமரியாதை இயக்கம் கொண்டிருக்கும் கொள்கைகள் செயலில் கொண்டொழுக அரிதாகத் தோன்றினும் மக்கள் விடுதலையை விரும்புவோர் தமது இன்னல்களைப் பெரிதாக நினையாது அரிய தியாகம் செய்து தானாகவேண்டும். காங்கிரஸ் கட்டளையை மேற்கொண்டு, சட்ட மறுப்பு, மறியல் முதலியன செய்து சிறைசெல்லுவதிலும் தனது வாழ்க்கையையே! நாட்டின் முன்னேற்றத்திற்காக, விடுதலைக்காக மாற்றியமைத்துக் கொள்வது பதினாயிரமடங்கு சிறை சென்றதின் தியாகமாகுமென்று கூறவேண்டும். இதனைப்பொய்யென்றோ, தவறென்றோ, யாரும் கூறமுடியாது. சரியாகவோ, தப்பாகவோ, நூற்றுக்கணக்கான வருடங்களாக வந்த; வழக்கபழக்கங்களையோ, சாதி வேற்றுமைகளையோ, மத விலங்குகளையோ? தீண்டாமையையோ ஒழித்து சமதரும நிலையைக்கொள்வது அரிதினுமரியதே? ஆங்கில வரசாங்கத்தாரோடு எதிர்த்து சிறைசெல்லும் திரு. காந்தியாராலும் மேற்கூறியவைகளைக் கைக்கொண்டொழுக முடியவில்லையென்றால் வேறு என்ன உங்கட்குக் கூறுவது! ஆதலால், சுயமரியாதை இயக்கம் நாட்டிற்கு என்ன செய்கிறதென்று கூறும் எதிரிகள் வார்த்தைகளைக் கண்டு நீங்கள் சிறிதும் அஞ்சவேண்டுவதில்லை.

நமது பத்திரிகைகள்.

நமது இயக்கத்தின் கொள்கைகளை எங்கும் பரப்பிவரும் வாரப்பத்திரிகைகளில் தலை சிறந்தது 'குடி அரசு' என்பது யாவர்க்கும் நன்குதெரிந்ததே? இத்துடன் 'புதுவை முரசு' என்ற பத்திரிகையும் தொண்டாற்றி வருகிறது.

அதுபோன்று நமக்குழைக்கும் ஆங்கிலப்பத்திரிகை நமது 'ஜஸ்டிஸ்' ஒன்றேயாகும். ஜஸ்டிஸ் கட்சியின் பத்திரிகையாகிய நமது 'திராவிடன்' எப்போதும் போல சுயமரியாதை கட்சிக்குத் தன்னால் முடிந்தவரையில் முழு ஆதரவு அளித்து வருவானென்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நமதியக்கத்தை மனமார ஆதரிக்கும் தமிழ்த் தினசரி இதுவொன்றே எனக் கூறுதல் மிகையாகாது. தொண்டர்கள் நமதியக்கப் பத்திரிகைகளை வளர்ப்பதில் ஊக்கங்கொள்ளவேண்டுமென்பதும் இதனால்தான் சுயமரியாதை இமக்கம் குன்றாது குன்றின் மீதிட்ட விளக்கெனத் திகழுமென்றும் அறிவிக்க விரும்புகிறேன்.

தொண்டர்களின் எதிர்கால வேலை.

தொண்டர்கள் எதிர்காலக் கடமைகளை யறிந்து ஒற்றுமையாகக் கடனாற்றி வர வேண்டியது இன்றியமையாதனவாகும். மகாநாடுகள் கூட்டுவது மட்டும் போதாது. சுயமரியாதை இயக்கத்தை ஆதரிக்கும் அங்கத்தினர்களை லட்சக்கணக்காகச் சேர்ப்பதுடன் உண்மையான தியா

தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க

சைவக்கோட்டை தகர்க்கப்பட்டது.

[தோழர் அ. இராகவன்]

திருநெல்வேலி ஜில்லா சைவர்களுக்கு ஒரு பெருங் கோட்டையாய் விளங்கிற்று. சைவக் கோட்டையாம் திருநேல்வேலி ஜில்லாவிற்குள் சுயமரியாதை வீரர்களுக்கு நுழையும் ஆற்றலுண்டா? என்று ஆஸ்திகப் பத்திரிகைகள் ஒரு சமயம் அறை கூவி அழைத்தன. திருநெல்வேலி ஜில்லாவிலே சைவர்களின் ஆதிக்கம் அதிகம். ஆங்கு சைவர்களே பெரும் பணக்காரர்களாயும் மிராசுதார்களாயும், இன்னும் பல செல்வாக்குடையவர்களாயும் இருக்கின்றார்கள். தாழ்த்தப் பட்ட மக்களை அதிகமாய் இம்சிப்போர் பார்ப்பனரல்ல, சைவர்களே: முதன் முதலாக சுயமரியாதை இயக்கத்திற்கு பெரிய எதிர்ப்பும் சைவப் பெரியார் மகாநாடும் இவ்விடத்தில் தான் கூடின. இச்சில்லாவில் உள்ள தன்னலமற்ற தாழ்த்தப்பட்ட மக்களின் தைரியத்தாலும் பகுத்தறிவு இயக்கத்தைப் போற்றும் சில சைவப் பிரபுக்களின் ஆதரவுகளினாலும் தோழர் எஸ். ராமநாதா, தங்கவேல், வைகுண்டம் போன்ற அன்பர்களின் இடைவிடா உழைப்பினாலும் திருநெல்வேலி டவுனில் மூன்று ஜில்லா மகாநாடுகளும் தூத்துக்குடியில் ஒரு ஜில்லா மகாநாடும் கல்லிடக்குரிச்சியில் ஒரு சீர்திருத்த மகாநாடும் நடை பெற்றதோடு திருச்செந்தூர், ஏறல், நாகலாபுரம், புதியம்புத்தூர், பணகுடி, களக்காடு, சாத்தன்குளம், நாசரத் முதலிய விடங்களில் தன்மதிப்பியக்கத் தொண்டர்களால் பிரசாரம் செய்யப்பட்டது. என்னென்னவோ செய்து விடுவதாய் பயங்காட்டிய சைவப் பித்தர்கள் எல்லாம் சுயமரியாதை வீரர்கள் தங்கள் சைவக் கோட்டையைத் தகர்த்து, வெற்றி முரசொலிக்க வீரகர்ஜனை புரிந்து வருவதைக்கேட்டு மூலையில் பதுங்கி விட்டனர். இவ்வாண்டு திருநேல்வேலி ஜில்லா 5-வதுசுயமரியாதை மகாநாடு, சைவர்கள் ஆதிக்கம் மிகுந்த சாத்தன் குளத்திலே கூட்ட வேண்டுமென்று பல அன்பர்கள் விரும்புகின்றார்கள். இவ்வூர் ஓர் காலத்திலே சுயமரியாதை இயக்கத்திற்கோர் பேர் அரணாய் இருந்ததென்று கூறத்தக்க சரித்திரச் சான்றுகளுள்ள ஊர். அதாவது சாத்தன் என்னும் ஓர் ஆதி திராவிட அரசரின் ஆளுகையிலிருந்தது. பின் அவருடைய ஏவலாட்களான வேளாளர்கள் சூழ்ச்சி முறையால் ஆதிதிராவிட அரசனைக் கொன்று தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொண்டனர் இவ்விஷயம் திரு. எச். ஆர். பேட் ஐ. சி. எஸ். என்பவரால் எழுதப்பெற்ற திருநெல்வேலி கெஜட்டு என்னும் நூலிலிருக்கிறது. இன்னும் பல சான்றுகளும் இருக்கிறது. சாத்தன் என்னும் ஆதிதிராவிட அரசனிடம் அடிமைத் தொழில் புரிந்த ஒரு வேளாளர் வமிசத்திலுள்ள தோழரே இன்று சாத்தன் குளத்தில் சுயமரியாதை மகாநாடு நடத்தவிடாமற் தடை செய்யப்போவதாயும் மகாநாடு நடத்த முன்வரும் தோழர்களை அவ்வூரை விட்டே விரட்டி விடப்போவதாகவும் பயமுறுத்தி வருகின்றார். இவ்வித பயமுறுத்தல் கண்டு ஒரு சுயமரியாதை வீரனும் அஞ்சப் போவதில்லை. பனங்காட்டுநரி வீண் சிலுசிலுப்பிற் கஞ்சுமோ? அஞ்சாது எனவே இச்சில்லாவில் இதற்கு முன்னர் நடந்த நாலு மகாநாட்டிலும் இவ்வைந்தாவது மகாநாட்டை அஞ்சாது மிக நன்றாய் நடத்த சுயமரியாதைத் தொண்டர்களெல்லாம் மிக தீவிரமாய் பாடுபட முன் வருவார்களென்று நம்புகிறேன்.

கடந்த நாலு ஜில்லா மகாநாடுகள் நடந்ததிலிருந்து ஒவ்வொரு யுவர்களின் உள்ளத்திலும் சுயமரியாதைக் கொள்கைகள் பசுமரத்தாணி போல் பதித்திருக்கின்றது என்றாலும் செய்கையிற் காட்ட இது வரைப் பலர் முன் வரவில்லை. காரணம் ஜாதிப் பித்தம் தலைக்கேறிய சைவர்களின் கொடுமைக்கு பயப்படும் யுவர்களின் தைரியமற்ற மனப்பான்மையே. என்னுள்ளத்தே, இதர ஜில்லாக்களிலிருந்து கலப்புமணம் காதல் மணம், விதவை மணம் புரிந்து மகாநாடுகளுக்கு வரும் தம்பதிகளைப் பார்தது மிகுந்த பொறாமை தோன்றுவதுண்டு. ஐயோ! நமது ஜில்லாவிலிருந்தும் இத்தகைய கலப்பு மணம், காதல் மணம், விதவை மணம் புரிந்து வாழும் தம்பதிகளைப் பார்க்க முடியவில்லையே யென்று பல நாள் வருந்தியதுண்டு. இதைப் பற்றி பல சைவத் தலைவர்கள் என்பவர்களிடம் விவாதித்ததும் உண்டு. சைவத் தலைவர்கள் தம் மனதிற்குள் இத்தகைய மணங்களை அறவே வெறுத்தனராயினும் கேள்விக்குத் தக்க பதிற் கூற வழியற்று இவைகள் சைவத்திற்கு உடன்பாடே, இவைகளை சுயமரியாதைக் காரர்கள் இன்று புதிதாய் கண்டுபிடிக்கவில்லை, எங்கள் சமயப் பெரியார்களாம் சுந்தர மூர்த்திநாயனார் திருவள்ளுவ நாயனார் முதலிய பேரறிஞர்கள் கலப்பு மணம், காதல் மணம், பொட்டறுப்பு மணம், விதவை மணம் முதலியன செய்திருக்கின்றார்கள் என்று கூறிவிட்டனர். உங்கள் நாயன்மார்கள் இத்தகைய மணங்களை உங்களுக்கு முன் மாதிரியாய் செய்து காட்டியிருக்க அவர்களுடைய அடிச்சுவட்டைப் பின் பற்றி நடப்பதாய்க் கூறும் நீங்கள் ஏன் அதை அனுஷ்டிப்பதில்லை. நாயன்மார்கள் அனுஷ்டித்துக் காட்டி எத்தனையோ நூற்றுக்கணக்கான ஆண்டுகள் ஆகியும் உங்களின் ஆதரவோடு அதையொத்த ஒரு சில விவாகங்களைக்கூட நடத்தியதாகக்காணோமேயென்றால் ஒன்றும்பேச வழியற்றுத்திகைத்து நிற்பர். சில வாயாடிகள் நாயன்மார்கள் செய்ததைப்போன்று நாம் நடக்க முடியுமா? அவர்கள் நிலைமையில் நாமிருக்கின்றோமா? அவர்களைப் போன்று எல்லாப்பற்றையுந்துறந்த ஞானிகளே ஜாதிபேதமற்று இத்தகைய மணங்கள் செய்ய முடியும் என்று புகன்று, கேட்டவர்களுக்கு ஏதோபதில் கூறிவிட்டோமென்று மனத்திருப்தியடைந்து விடுகின்றனர்.

ஜீவகாருண்யம்! ஜீவகாருண்யம்! என தொண்டை கிழியக் கத்தி ஆண்பெண் என்னும் இரு உயிர்களுக்கும் இயற்கையாயுள்ள காதலின்பத்தைப் பெண்மக்கள் பெரிதும் நுகரவிடாதபடி தடுத்து அவர்களுக்கு இஷ்டப்பட மனமில்லாத ஆண்களுக்கு பலாத்காரமாய் விவாகஞ்செய்துகொத்து அவர்கள் வாழ் நாள் முழுதும் துன்பம் அனுபவிக்கவும், இளவயதிலே கலியாணமாகி இரண்டு மூன்று நாட்களுக்குள்ளே கணவனை இழந்த விதவைப்பெண்ணானாலும் வேறு புருடனை மணந்துகொள்ளக்கூடாதென்று ஜெயிலுக்குள் அடைத்து வைப்பதைப் போன்று காற்று வெளிச்சம் முதலியவற்றைக்காணாத இருட்டறைக்குள் அடைத்து, அவர்கள் புருஷஇன்பத்தை நினைத்து நினைந்து நைந்துவாடி நெஞ்சம் புண்ணாகி அல்லற்பட்டு, அழுதுயாதொரு வழியுமற்று கள்ளத்தனமாய் பக்கத்துவிட்டுப்பையனோடோ அன்றிவீட்டிலுள்ள வேலைக்காரனோடோ விபசாரஞ் செய்து கருவுற்றுப்போனால்கருச்சிதைக்கபலமருந்துகள்கொடுத்துக்கொலைபுரிதலும் முடியாதுகுழந்தைபிறந்துவிட்டால்உடனே கழுத்தைநெறித்துசாக்கடையிலோ வாய்க்காலிலோ போட்டுவிடுவதோ அல்லது உயிரோடே கொண்டுபோய் அனாதைச்சாலையிலோ அல்லது குளத்துக்கரை, ஆற்றுக்கரை, கள்ளியின் பக்கம் கொண்டுபோய்விடுவதோ நாள் தவறாது நம் ஜில்லாவில் நடைபெற்றுவருவதும், விரும்பிய கணவன் வேறு ஜாதியையோ அல்லது வேறு மதத்தையோ சேர்ந்தவனாய்விட்டால் தாம்விரும்பிய அதேகணவனையடைந்து இன்பந்துய்க்க வழியற்றிருக்கும் தம் மதக்கட்டுப்பாடு, ஜாதிக்கட்டுப்பாடு பழக்கவழக்க முதலிய மூடப்பேய்களுக்குபயந்து தற்கொலை புரிந்துகொள்பவர்களைப் பலர் இத்துன்பங்களையொழித்து அன்னாரிடம் ஜீவகாருண்யம் காட்ட எத்தனை நூற்றுக்கணக்கான ஆண்டுகளாகியும் சைவத்திற்கு ஒன்றுஞ் செய்யமுடியாமற்போய்விட்டால் அச்சமயம் இருந்துதான் என்னபயன்? ஜீவகாருண்யம் பேணுபவர்கள் என்றுகூறிக்கொள்ள சைவர்களுக்கு வெட்கமில்லையா? என்றுகேட்கிறேன். எத்தனை நாளைக்கு ஜீவகாருண்யம்! ஜீவகாருண்யம்! என்றுமக்களை ஏமாற்றுவது, எல்லோரையும் எக்காலமும் ஏமாற்றமுடியுமா? இனி ஒருநிமிடமும் சைவர்களின் ஏமாற்றம் செல்லாது. ஏமாற்றுவதற்கு இதுபோழ்து ஏமாறுபவர்கள் இல்லை. எனவே சைவக்கோட்டையைத் தகர்த்து ஆங்கு ஆயிரக்கணக்கான சுயமரியாதை வீரர்கள் உள் நுழைந்துவிட்டார்கள், ஆங்குள்ள போலிசைவத்தைக்கொன்று சுயமரியாதை வெற்றிமுரசை யொலிக்க ஆரம்பித்துவிட்டார்கள். திருநெல்வேலி இளைஞர் சுயமரியாதைச் சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் விதவா விவாக சபைக்கு

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க

திருச்சி ஜில்லா ஆருவது பார்ப்பனரல்லாதார் மகாநாடு.

வரவேற்புத்தலைவர் மீனும்பள்ளி ஜமீன்தார் திரு. K. C. M. வெங்கிடாசல ரெட்டியார் அவர்கள் வரவேற்புப்பிரசங்கம்.

7 ந்தேதி திருச்சியில் கூடிய 6 வது திருச்சி ஜில்லா பிராமணரல்லாதார் மகாநாட்டின் உபசரணைக் கமிட்டித்தலைவர் மீனும் பள்ளிஜமீன்தார் திரு. கே. ஸி. எம். வெங்கடாசல ரெட்டியார் அவர்கள்பிரதி நிதிகளை வரவேற்றுச் செய்த பிரசங்கத்தின்சாரம் பின் வருமாறு:—

இது ஜில்லா மகாநாடாக விருந்த போதிலும் அதனுல் அதன் முக்கியத்துவம்குறைந்து விடாது. 1929 அக்டோபர் 5 ந்தேதி நெல்லூரில் நடந்த மகாநாட்டிற்குப் பின் பிராமணரல்லாதார் எங்கும் கூடி நம்முன் உள்ள முக்கியமான பிரச்சினைகளை யோசிக்க வில்லை. ஆகவே மாகாண முழுவதும் இம் மகாநாட்டின் நடவடிக்கைகளையும் முடிவுகளையும் ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறது. நமது தேசம் இதற்கு முன்னில்லாத, ஒரு பெரிய நெருக்கடியை அடைந்திருக்கிறது. இந்தியாவின் அரசியல் உருவாகி வருகிறது. இந்தியாவின் சிறந்த புதல்வர்கள் பெண்களில் சிலர் பிரிட்டனின் பெரிய ராஜ தந்திரிகளுடன் மகாநாடு கூடி யோசித்த பின் இந்தியாவின் கதி ஒருவாறு முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அங்கு செய்யப்பட்ட முடிவுகள் தேச முழுவதிலும்வெவ்வேறு விதமான உணர்ச்சியை உண்டு பண்ணி யிருக்கின்றன. காங்கிரஸ் அதில் சிறிதும் திருப்தி யடையவில்லை. கடைசி முடிவை எதிர்பார்த்துக் காத்திருக்காமல் சட்டங்களை யெல்லாம் வேண்டு மென்று எதிர்ப்பதிலும் தேசத்தில் ஸ்தாபிக்கப்பட்ட கவர்ன் மெண்டைப் பலமாக எதிர்ப்பதிலும் இறங்கி விட்டது. உற்சாகம் நிறைந்த நமது யுவர்கள் தவறான வழியில் செலுத்தப்பட்டு இந்தக் கொள்கையை அனுஷ்டித்திருப்பது கடுமையாகத் தேசத்தில் மற்றவர்களுக்குச் சந்தோஷமற்ற நிலைமையை உண்டு பண்ணி யிருக்கிறது. தேசம்ஸ்வராஜ்யம் பெற்றாலும்,பிரிட்டிஷ் ஆக்ஷியிருந்தாலும் அங்கீகரிக்கப்பட்ட சட்டங்களுக்கு உட்பட்டு நடப்பது மிகவும் முக்கியமான விஷயம். இந்த எதிர்ப்பு உணர்ச்சி கிளப்பி விடப்பட்டு விட்டால் அது எங்கு போய் முடியு மென்று தெரியாது. இந்த நெருக்கடி யான சமயத்தில் தேசத்திற்கு மிகவும் உபயோகமாக விருக்கக்கூடிய இந்தியாவின் சிறந்த புதல்வர்களிலும் பெண்களிலும் சிலர் பலனற்ற இந்தச் சட்ட மறுப்புக் கொள்கையால் இப்போது சிறையிலிருக்கின்றனர். நிரபராதி களான ஆங்கி லேயர்களைக் கோழைத்தனமாகத் தாக்கும் அராஜகக் குற்றங்கள் வளருமாறும் இந்தச் சட்ட மறுப்பு இயக்கம் செய்திருக்கிறது. தேசத்தின் வியாபாரம் ஸ்தம்பித்துப்போய் எழை ஜனங்களுக்கு மிகுந்த கஷ்டத்தையுண்டு பண்ணி யிருக்கிறது. இந்தச் செயல்களை அடக்க கவர்ன்மெண்டார் அனுஷ்டிக்கும் முறைகள் ஆளுபவர்களுக்கோ ஆளப்படுபவர்களுக்கோ கௌரவமாக வில்லை. நிரபராதிகளையும் குற்ற வாளிகளையும் சமமாகப் பாதிக்கக் கூடிய பல அவசரச்சட்டங்கள் ஒன்றன் பின் ஒன்றாக இயற்றப்பட்டி ருக்கின்றன. இந்த விசேஷ அதிகாரங்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட மாட்டாதென்று உறுதி மொழிகள் அதிகமாகக் கூறப்பட்ட போதிலும், நிர்வாக அதிகாரிகள் அம்மாதிரித் துஷ்பிரயோகம் செய்திருப்பதாகக் கணக்கற்ற உதாரணங்களேற்றட் டிருப்பது சட்டம், அமைதியை நிலை நிறுத்துவதைவிடப்பழிவாங்கும் உணர்ச்சியே அதிகமாயிருப்பதைக் காட்டுகிறது. சட்ட மறுப்பு இயக்கம் தீங்காயும் பந்தோபஸ்தாயு மிருப்பது போல் கவர்ன்மெண்டின் தாக்ஷண்யமற்ற அடக்குமுறை பிரயோஜனமற்றும் கண்ணியமற்று மிருப்பதாக நாம் உணரவேண்டும். காங்கிரஸாரும் கவர்ன்மெண்டாரும் தவறாக நடக்கின்றனர். என்றே நாம் கூற முடியும். கவர்ன்மெண்டார் பொது நன்மையைப் போல் தங்கள் நன்மையை உத்தேசித்தும் எங்கும் நடக்கும் அதிக்கிரமங்களை நிராகரித்து விட்டுச் சட்ட மறுப்பு இயக்கத்தை அழிக்கக் கிரமமான முறைகளை யனுஷ்டிக்க வேண்டும்.

இந்தியாவில் உள்ள பல கட்சிகளின் லக்ஷியமும் அனுபவத்தில் ஒன்றாக விருந்தபோதிலும் அதையடைய வெவ்வேறு குறைகளை யனுஷ்டிக்கின்றன. ஒரு கட்சியின் அபிப்பிராயம் இன்னொரு கட்சிக்கு எவ்வளவு தவறாகத் தோன்றிய போதிலும் பாஸ்பரம் ஸகிப்புத்தன்மை யிருக்க வேண்டும். உலகத்தின் அறிவும் புத்திசாலித்தனமும் தங்கள் கட்சியினரிடம் ஒருமித்திருப்பதாக நினைக்கக்கூடாது. நமது ஜனங்களில் சிலர் தங்களிடமிருந்து மாறு பட்ட அபிப்பிராயமுடையவர்களைப் பற்றிப் பேசும்போது ஸகிப்புத்தன்மை யின்றிச்சண்டை போடுவதைக் கண்டிருப்பதால் தான் நான் இம்மாதிரிக் கூறுகிறேன். பிரிந்துவரும் சங்கிலியின் பல பாகங்களையும், ஒன்று சேர்த்து முஸ்லிம் ஹிந்து, பிராமணர், பிராமண ரல்லாதார் ஆகிய எல்லா வகுப்பினர் களையும் ஒன்று படுத்தும் உத்தேசத்துட னேயே இங்கு கூடியிருக்கிறோம்.

வகுப்பில் ஒரு பிரிவினர் பிராமணரல்லாதார் கட்சியைத் தேசீய லக்ஷியத்திற்குத் துரோகிகளென்றும் ராஜீய முன்னேற்றத்திற்குப் பிற்போக்கான வர்களென்றும் குறைகூறுகின்றனர். வகுப்புவாதிகளென்றும் அவர்கள் நம்மைக் கூறுகின்றனர். இதை விட உண்மையற்றது வேறொன்று மில்லை. நியாயம் சமத்துவம் என்ற அஸ்திவாரத்தின் மீது ஸர் தியாகராயராலும், டாக்டர் நாயராலும் ஆரம்பிக்கப்பட்டு வளர்ந்து வந்திருக்கும் நமது கட்சி பெரிய ஜனநாயக இயக்கமாகும், ஜாதி உரிமைகளை வேரறுத்து எல்லாருக்கும் சம அவகாசம் அளிக்க வேணடுமென்பதையே பிரசாரம் செய்து அனுபவத்திலும் நடத்திவைக்க வேறெந்தக் கட்சி இருக்கிறது? நமது கட்சியின் நோக்கம் நிறைவேற வேண்டுமானுல் இந்தியாவிலுள்ள கணக்கற்ற அநீதங்கள் ஒழிக்கப்பட வேண்டும். தேசிய ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்கும் பெரிய தடையாக விருப்பது ஜாதி முறையாகும். இது ஹிந்து சமூகத்தைக் கட்டி வைத்து, ஊக்கம் அபிலாஷை, சுயேச்சை முதலியவை யில்லாமற் செய்து விட்டது. இந்த விஷம் போன்ற களையை நாம் எவ்வளவுக் கெவ்வளவு துரிதமாக ஒழிக்கிறோமோ அந்த அளவிற்கு நமது சுய ஆட்சி லக்ஷியத்தை நோக்கி முன் செல்வோம். இந்த ஜாதி முறையிலிருந்து தீண்டாமை யென்பது ஏற்பட்டிருக்கிறது. இதனுல் இந்தியர்களில் 7 கோடிப் பேர்கள் தனியாக ஒதுக்கி வைக்கப்பட்டுப் பல நூற்றாண்டு களாக அறிவுப் பெருக்கமோ வேறு முன்னேற்றமோ இல்லாமற் செய்யப் பட்டிருக்கின்றனர். இந்தியர்கள் உண்மையில் சுயேச்சையும் ஜனநாயகத்தையும் விரும்பினுல் இந்த ஜாதி தீண்டாமை இரண்டையும் அடியோடு ஒழிக்க வேண்டும். இடையில் ஆலயப் பிரவேச விஷயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். நமது கட்சி ஆதிதிராவிடர் கட்சியை நியாயமாக ஆதரிக்கிறது. ஜாதி ஹிந்துக்களைப் போல் தீண்டாத வகுப்பினரெனப்படு வோரும் ஆலயங்களில் சுலபமாகக் சொல்லக்கூடிய காலம் சீக்கிரம் வந்து விடுமென்று நம்புகிறேன். ஹிந்துக்கள் தங்கள் தீண்டாத சோதரர் களுக்கு இந்த உரிமையை அளிக்க முன் வராவிடில் இந்தியர்கள் ஸ்வராஜ்யத்திற்கு லாயக்கில்லை யென்றே நான் கூறுவேன். இவ்விஷயத்தில் காந்திஜி கூறியிருப்பதும் நமக்காதரவா யிருக்கிறது. இந்தக் காலங்கடந்த சீர்திருத்தம் ஸ்வராஜ்யத்திற்குப் பின் வரவேண்டியதாக இல்லாமல் முன்னதாகவே ஏற்பட வேண்டு மென்று அவர் கூறியிருக்கிறார்.

கலப்புத் தொகுதி, தனித்தொகுதி விஷயத்தைப்பற்றி அதிகக் கடுமையான விவாதம் நடந்து வருகிறது. ஆதித்திராவிடத் தலைவர்களுக்குள்ளும் இதில் அபிப்பிராயபேத மேற்பட்டிருக்கிறது. கலப்புத்தொகுதி அவசிய மென்றும் தேசீய ஒற்றுமைக்கு உதவியாக விருக்கு மென்றும் நான் கருதுகிறேன். ஆனுல் வகுப்புகள் உண்மையாக விரும்பினுல் அதை அவர்களுக்கு மறுக்கக்கூடாது அவர்கள் ஹிந்து சகோதரர்களை நம்பிக் கலப்புத் தொகுதிக்குச் சம்மதிக்குமாறு கேட்டுக்கொள்ளுவேன். ஆனுல் அவர்கள் தனித் தொகுதியால் அதிக நன்மையேற்படுமென்று உண்மையில் நம்பினுல் குசாலாகப் பெறட்டும்.

நடத்தி வைக்க முடியாத இரட்டையாக்ஷி முறையைக்கூட நமது கட்சி மிகவும் வெற்றிகரமாக நடத்தி வைத்து விட்டது நமது கட்சியினரின் ராஜீயத் திறமையைக் காட்டுகிறது என்று பெருமை பாராட்டுகிறோம். ஆயினும் நமது தலைவர் பனகால் ராஜாவின் மரணத்திற்குப் பின்னும் ஜஸ்டிஸ் கட்சி மந்திரி சபை கலைந்த பின நமது கட்சி போதுமான கட்டுப்பாடும் பலமும் கொண்டதாயிருக்கவில்லை. இன்னும் கஷ்டமான வேலை நம் முன்னிருக்கிறது. இன்னும் தாராளமான ஒரு அரசியலை நடத்தி வைக்கும் பொறுப்பு சமீபத்தில் வரப்போகிறது. அதற்கு நம் கட்சியில் பலமும் ஒற்றுமையும் அத்தியாவசியமாகும். நம் கட்சியினர் அனைவரும் பரஸ்பரம் மாச்சரியங்களை விட்டு ஒன்று படவேண்டும். இந்த நெருக்கடியில் நம் தலைவர்களுக்கும் மனப்பூர்வமான ஆதரவளித்து அவர்கள் கட்சியை வெற்றிகரமாக நடத்துவார்களென்று நம்பிக்கை வைக்க வேண்டும். நமது கட்சி ஸ்தாபிக்கப்பட்ட போது நிலைமை எப்படி யிருந்த போதிலும் இப்போது அப்படி யில்லை. ஜஸ்டிஸ் கட்சி யென்று கூறிக்கொள்ளும் நாம் மற்ற எல்லாவகுப்பு மதங்களைச் சேர்ந்தவர்களுக்கும் நியாயமாகநடக்க வேண்டும். நமது ராஜீய அபிப்பிராயத்தையும் கொள்கையையும் ஒப்புக்கொள்ளும் எல்லாரையும் நம் கட்சியில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இதர வகுப்புகளை ஜஸ்டிஸ் கட்சியில் சேர்த்து கொள்ளுவது பிராமணரல்லாதார் முன்னேற்றத்திற்குத் தடையாக விருக்கு மென்று நினைத்தால்

தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க

'குடி அரசு'ம் நமது இயக்கமும்.

(திருமதி எஸ். குஞ்சிதம் பி. ஏ.,)

"குடி அரசி"ற்கு 8 வது ஆண்டு ஆரம்பமாகி விட்டது. இந்த சந்தர்ப்பத்தில் குடி அரசைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்லவேண்டுமென்று விரும்புகிறேன்.

நமது சுயமரியாதை இயக்கத்திற்கு "குடிஅரசு" முதற் காரணமான பத்திரிகை என்பதோடு, இன்றைய தினம் தமிழ் நாட்டிலுள்ள தினசரி வாரத் தமிழ்ப்பத்திரிகைகளை விட பல மடங்கு அதிக சந்தாதாரர்களையும் உடையதாக இருக்கிறது. இதற்குக் காரணம் என்ன என்பதைச் சிறிது யோசிப்போம்.

'குடிஅரசு' நல்ல தமிழ் நடையில் எழுதப்படுகிறதற்காக ஒரு வேளை பலர் படிக்கிறார்களா? என்றால் இல்லை இதை விட செந்தமிழ் நடையில் எழுதப்படும் பத்திரிகைகள் அநேகம் இருக்கின்றன.

அல்லது இதன் ஆசிரியர் ஒரு பெரிய தமிழ் வித்வான் என்பதற்காகவா? அல்லவே அல்ல. அவருடைய தலையங்கங்களையும் பேச்சையும் பார்த்தால் அந்தப்பெரிய குற்றத்திற்கு அவர் ஆளானவர் அல்ல என்பது புலப்படும்

பத்திரிகை வெகு அழகாகவும் கண்ணைக்கவரக் கூடிய நிலைமையிலும் இருப்பதனாலா? எது சொன்னாலும் இந்தக் குற்றத்தை மாத்திரம் நமது 'குடிஅரசு' ஏற்றுக்கொள்ளவே கொள்ளாது. இந்த விஷயத்தில் இது தான் கடைசிப் பத்திரிகை என்று கூடச்சொல்லலாம்.

பத்திரிகையைப்பற்றி அதிகமாக விளம்பரம் படுத்தப்படுவதால் அதிகம் பரவியிருக்கிறதென்று சொல்லலாம். என்றாலோ, இதைவிட அதிகமாக விளம்பரப் படுத்தப்படும் பத்திரிகைகள் அநேகம் இருக்கின்றன.

ஆனால் வேறு என்ன காரணம் என்று கேட்கலாம். 'நமதுகொள்கை' என்பது தான் அதற்குப்பதில். நமது கொள்கை எவ்வளவு தூரம் பரவியிருக்கிறதென்பதற்கு 'குடிஅரசு' ஒரு முக்கிய அத்தாட்சியாகும். தமிழ் எழுதப் படிக்கவே தெரியாத என்னைப்போன்றவர்களே இன்றைய தினம் 'குடிஅரசை' உத்தேசித்துத் தமிழைக் கற்றுக்கொண்டு அதன் பழைய எடுகளைப் புரட்டிப்பார்க்க வேண்டுமென்ற தூண்டுதல் ஏற்பட்டுவிட்டதென்றால் அதன் சக்தி எவ்வளவு என்பதை நான் சொல்லவேண்டியதில்லை.

அடுப்பங் கரையில் புரண்டு ஒப்பாரி பழகிக் கொண்டிருந்த பெண்கள் பலருடைய கையில் 'குடிஅரசு' புகுந்து விட்டது. கோவலன் கதையைப்படித்துக் கொண்டிருந்த பல பெண்களின் வாய்கள் இன்று குடி அரசு படிக்கின்றன. கந்த புராணக் கதையைப்படித்த பல பெண்கள் இன்று கைவல்யம் கட்டுரைக்காக கதவடியைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

'குடிஅரசு' ஆண்களை மாத்திரம் அறைந்ததா என்றால், அல்ல. பெண்களையும் தட்டி எழுப்பி உட்காரவைத்திருக்கிறது. வழக்கம் என்னும் சந்தில் கண்ணை மூடிய படியே போய்க் கொண்டிருந்த ஆண்களை முதுகில் அறைந்து, "அடே, திரும்பிப்பார். இந்த சந்தில் பலர் முன்னே போனவர்களைப்பார்த்திருக்கிறேன். அவர்கள் எல்லோரும் ஒரு பெரிய தீக்குழியில் தான் விழுந்து மடிந்தார்கள், நீயும் அதே குழியில் விழுவதற்காக தான்போகிறாய். வேண்டாம். திரும்பி வீடு போய்ச்சேரு" என்று பல மக்களைத்திருப் பியது. அடுப்பங்கரை மூலையில் முந்தானையை விரித்து முடங்கிப் படுத்திருந்த பெண்களைத் தட்டி எழுப்பி, "அம்மா எழுந்திரு, வெளியேவா; ஆகாயத்தைப்பார்; பரந்த வெளியைப்பார்; கடலைப்பார்; மனித சமூகத்தைப்பார்; அதோ பார் உன்னைப்போன்ற ஒருத்தி கம்பியின் மேல் சைக்கிள் விடுகிறாள்," என்றெல்லாம் சொல்லிபெண்கள்கண்களுக்கு ஒரு தூர திருஷ்டிக் கண்ணாடியாக விளங்குகிறது.

'குடிஅரசு' என்றால் பார்ப்பனர் வயிற்றில் இடி விழுந்த மாதிரி இருக்கிறது. புராணக்காரர்கள் தலையில் செம்மட்டியால் அடித்தது போல் அலறுகிறார்கள். மதக்காரர்களெல்லாம் சுற்றி வந்து மாரடித்து அழுகிறார்கள். குடி அரசின் முனையோ எதிரிகளின் ரெத்தக்கரை பட்டுக் காய்ந்து போயிருக்கிறது. அதைத்துடைத்து முனை மழுங்காமல் வைப்பது யாருடைய கடமை? பெண்மக்களாகிய நமது கடமை யல்லவா? சகோதர சகோதரிகளே! குடி அரசின் ஆசிரியரும் அவர் தம் துணைவரும் வந்தவுடன் குடிஅரசின் முனை பழைய ரெத்தத்தில் மறைக்கப்பட்டிருப்பதைக் காட்டாமல், அதைக் கழுவி, புது ரெத்தம் தோய்ந்திருப்பதைக்காட்டு வீர்களா?

அகில இந்திய தாழ்த்தப்பட்டோர் காங்கிரஸ்.

நாகபுரியில் மகாநாடு.

தனித்தொகுதிக்கு ஆதரவு.

இந்திய தாழ்ந்த வகுப்பார் காங்கிரசின் 2-வது மகாநாடு 5—5—32ல் நாகபுரியைச்சேர்ந்த கம்டியில் ஆரம்பமானது. சென்னை சட்டசபை அங்கத்தினர் ராவ்சாகிப் முனுசாமி பிள்ளை தலைமைவகித்தார். பலமாகாணங்களிலிருந்தும் 2000 த்திற்கு மேற்பட்ட பிரதிநிதிகள் விஜயம் செய்திருந்தனர்.

வரவேற்பு கமிட்டித்தலைவர் ஸ்ரீ ஹரிதாஸ், தமது பிரசங்கத்தில் கூறியதாவது:— இந்திய தேசிய காங்கிரஸ் தாழ்ந்த வகுப்பாரை தவறான வழியில் நடத்த முயன்று வருகிறது. அக்காங்கிரசோடு சேர்ந்த இந்துமகா சபையோ நம்மீது யுத்தம் தொடுக்க ஆரம்பித்துவிட்டது. நாம் அவ்விரு ஸ்தாபனங்கள் விஷயத்தில் மிக்க ஜாக்கிரதையாக நடந்துகொள்ளவேண்டும். கூட்டுத்தொகுதியால் தாழ்ந்த வகுப்பாருக்கு அழிவே நேரிடும் எந்த சந்தர்ப்பத்திலும் நாம் கூட்டுத் தொகுதியை ஏற்றுக்கொள்ளக்கூடாது.

பிறகு 12 தீர்மானங்கள் யாதொரு எதிர்ப்பும் இன்றி நிறைவேறின.

லண்டன் மகாநாட்டில் ஏற்பட்ட சிறுபான்மையோர் ஒப்பந்தத்தை ஆதரிப்பதாகவும், அந்த ஒப்பந்தத்தில் தாழ்ந்த வகுப்பாருக்காக கண்டுள்ள கோரிக்கைகளுக்கு குறைவாக ஏற்றுக்கொள்ள முடியாதென்றும், அந்தகோரிக்கைகளையெல்லாம் சர்க்கார் பூர்த்தி செய்யாவிட்டால் அவசியமான நடவடிக்கையை மேற்கொள்ள தாழ்ந்த வகுப்பாருக்கு உரிமை உண்டென்றும் ஜாதி இந்துக்கள் தாழ்ந்தவகுப்பாரின் எண்ணிக்கையைக் குறைக்க முயன்று வருவதால் தாழ்ந்த வகுப்பாரின் தொகையை மதிப்பிடுவதில் ஜாக்கிரதையாக விருக்கும்படி சர்க்காருக்கு எச்சரிக்கை செய்வதாகவும் வற்புறுத்தும் தீர்மானத்தை வங்காள பிரதிநிதியான ஸ்ரீ மாலித் பிரேரேணை செய்தார். ஸ்ரீமதி ஒகேல் அதனை ஆதரித்தார்.

புரட்சி இயக்கத்தையும், முக்கியமாக மிதுனபுரி கலெக்டரைக்கொலை புரிந்ததையும், கண்டிப்பதாகவும் சட்டமறுப்பு இயக்கத்தை கண்டிப்பதாகவும், டாக்டர் அம்பேத்காரும், ராவ்பகதூர் சீனிவாசனும், லண்டன் மகாநாட்டில் தாழ்ந்த வகுப்பாருக்காக செய்த சேவைகளைப் பெரிதும் பாராட்டுவதாகவும், லண்டன் மகாநாட்டில் தாழ்ந்தவகுப்பாருக்கு போதிய பிரதிநிதித்துவம் வழங்காததை எதிர்பார்ப்பதாகவும், ஸ்தல ஸ்தாபன போர்டுகளில் ஜனத்தொகை அடிப்படையில் தாழ்ந்த வகுப்பாருக்கு பிரதிநிதித்துவம் வழங்க வேண்டுமென்றும், தாழ்ந்த வகுப்பாரின் உயர்தர கல்வி அபிவிருத்திக்காக தலைமை சர்க்கார் வரவு செலவு திட்டத்தில் போதிய நிதியை ஒதுக்கவேண்டுமென்றும் பல தீர்மானங்கள் நிறைவேறின.

"புதுவை முரசின்" வாசகர்களுக்கு!

இவ்வாரம் 9-5-32-ல் வெளியாக வேண்டிய "புதுவை முரசு" சில அசந்தர்ப்பங்களால் வெளியாகாமல் போய் விட்டதை நம் வாசகர்களுக்கு வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

வெளியிடுவோர்,
எஸ். சிவப்பிரகாசம்.

திருப்பூர் டி. மு. கோர்ட்டு.

1932 ளு S. C. No. 61

த. சு. திருமூர்த்தி செட்டியார் சன்ஸ் பார்ட்னர் சுப்பிரமணிய செட்டியார்—வாதி.

கோபிசெட்டிபாளையம் தாலூகா பாரியூர் மஜரா நஞ்சகவுண்டன் புதூர் ஆறுமுக முதலியார் மகன் சிவக்கொழுந்து முதலியார்—பிரதிவாதி.

ஷை பிரதிவாதி என்பவருக்கு ஷை வாதி பிரதிவாதி பேரில் கணக்குப்படி அசல் வட்டியுள்பட ரூ. 149—11—7 வரவேணுமாய் தாவா செய்து முடிவானவிசாரணைக்கு 9-7-32ந் தேதி வாய்தா போடப்பட்டிருக்கிறது. ஷை தேதியில் நீர் நேரிலாவது வக்கீல் மூலமாவது ஆஜராகத் தவறினால் ஒரு கக்ஷியாக தீர்மான மாகிவிடும்.

எம். கே. கோவிந்தராஜுலு
செட்டியார்,
அட்வகேட், திருப்பூர்.
11—5—32.

கட்டுரையாளர்களுக்கு அறிவிப்பு.

நமது குடியரசுக்குக் கட்டுரை எழுதுபவர்கள், சமூகச்சீர்திருத்த சம்பந்தமானதும், வேத, புராண, மதம் போன்ற புரட்டுக்களைத் தக்க ஆதாரங்களுடன் கண்டிக்கக் கூடியதும், பகுத்தறிவுக்குப் பொருத்தமானதும் இயற்கை, விஞ்ஞானம், நாகரீகம் சம்பந்தமானதும், ஆகிய விஷயங்களையே எழுதி அனுப்பவேண்டும். கட்டுரைதெளிவாகவும், மையினாலும், பேப்பரின்ஒருபக்கத்திலும் எழுதப்பட்டிருக்க வேண்டும். இவ்வாறு இல்லாத கட்டுரைகள் பிரசுரிக்கப்படமாட்டா. பிரசுரிக்கப்படாத கட்டுரைகள் "ஸ்டாம்பு" அனுப்பாதவரையில் திருப்பி அனுப்பப்பட மாட்டா என்பதை வணக்கத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறோம். (ப. ர்)

குடி அரசு.

ஈரோடு 1932 மேமீ 15-உ

சேலம் சுயமரியாதை மகாநாடு.

—:0:—

சென்ற 7-8-5-32 சனி, ஞாயிறுகளில் சேலத்தில் நடை பெற்ற முதலாவது சேலம் ஜில்லா சுயமரியாதை மகாநாட்டின் தலைவர், வரவேற்புத்தலைவர்; பெண்கள் மகாநாட்டின் தலைவர், வரவேற்புத் தலைவர், திறப்பாளர்; தொண்டர் மகாநாட்டின் தலைவர், வரவேற்புத் தலைவர் திறப்பாளர்; முதலியவர்களின் பிரசங்கங்கள் நமது பத்திரிகையில் சென்ற வாரத்திலும் இவ்வாரத்திலும் வெளியாகி இருக்கின்றன. அந்தப் பிரசங்கங்களையெல்லாம் படித்துப் பார்ப்பவர்களுக்கு, நமது இயக்கத்தின் தற்கால வளர்ச்சியைப் பற்றியும், உண்மையான கொள்கைகளை அநுபோகத்தில் கொண்டு வரும் செய்தியைப் பற்றியும் நாம் ஒன்றும் அதிகமாகக் கூற வேண்டியதில்லை என்றே கருதுகின்றோம்.

முதலாவது இவ்வாண்டில் முதலில் சேலத்தில் நமது மகாநாடு நடைபெற்றதே நமக்கு ஒரு பெரிய வெற்றியாகும். ஏனெனில் சேலம் ஒரு பெரிய தேசியக் கோட்டை யென்றும், தேசியத்திற்கு எதிர்ப்பான எந்தச் செயல்களையும் சேலத்தில் செய்ய முடியாதென்றும் சிலர் மனதில் ஒரு தப்பான எண்ணம் நிலவியிருந்தது. இவ்வெண்ணம் தவறானதென்பதை உணர்த்துவதற்கும், சுயமரியாதை இயக்கமும், அதன் கொள்கைகளும், எந்தத் தேசியத்திற்கும் அஞ்சாமல் எந்த இடத்திலும் எப்பொழுதும் பரவிப் பொதுஜனங்களை விழிப்படையச் செய்யக் கூடிய தன்மையுடைய தென்பதற்கும் ஒரு எடுத்துக் காட்டாகவே சேலத்தில் நமது மகாநாடு கூடிற்று என்று நிச்சயமாகக் கூறலாம்!

சேலத்தில் மகாநாடு கூட்ட முயன்றவர்களுக்கு உண்டான துன்பங்கள் எண்ணற்றவை. சுயமரியாதை இயக்கம் பரவினால் தங்கள் தேசிய வயிற்றுப் பிழைப்பிற்குக் கெடுதி வரும் எனக்கருதிய "காலிகள்" சிலர் மகாநாடு கூடாமல் இருக்க எவ்வளவோ பிரயத்தினம் பண்ணிப் பார்த்தார்கள். ஊரில் உள்ள பெரிய மனிதர்களிடம் சென்று அவர்களுக்குத் தகுந்த மாதிரிஇல்லாத பொல்லாத பொய்புரைகளைப் புகன்று மகாநாட்டிற்கு உதவி செய்யாமலிருக்கும்படியும், மகாநாட்டு நிர்வாகிகளுடன் ஒத்துழைக்காமலிருக்கும்படியும் கலகம் பண்ணினார்கள், எதிரிகள் இம்மாதிரி எவ்வளவோ சூழ்ச்சிகள் செய்தும், மகாநாட்டு வேலைகள் தடைப்படாமல் நடந்து கடைசியாகக் குறிப்பிட்ட தேதியில்மகாநாடும் நடை பெற்றது.

நமது இயக்கத் தோழர்களான எஸ். வி. லிங்கம், அழகர்சாமி, போன்றவர்களை வெட்டி விடுகிறோமென்றும், குத்திவிடுகிறோமென்றும், மிரட்டிக்கொண்டும், மகாநாட்டைக் கலைப்பதற்காக ஆள் சேர்ப்பது போலப்பாவனை பண்ணிக்கொண்டும் கப்பி விட்டார்கள்.

மகாநாடு நடக்கும் சமயத்திலும் "காலிகள்" கலகம் பண்ண மறந்து விடவில்லை. வெளியிலிருந்து கொட்டகை மீது கல் விட்டெறிந்தும், இயக்கத் தோழர்கள் மகாநாட்டில் பேசும்போது இடை இடையே சத்தம் போட்டும் கலகம் பண்ண முயற்சித்தனர்.

ஆனால், நமது இயக்கத் தோழர்கள் இவற்றையெல்லாம் பொருட் படுத்தாமலும் எதிரிகளுக்குக் கொஞ்சமும் கஷ்டத்தை உண்டாக்காமல் அவர்களிடம் பொறுமை காட்டியும் மகாநாட்டை வெற்றியுடன் நடத்தியது குறிப்பிடத் தக்கது.

மகாநாட்டிற்கு வந்திருந்த ஆயிரக்கணக்கான பிரதிநிதிகளும் சுயமரியாதை இயக்கத்தின் உண்மையையும், தேசிய வாதிகள் என்று வேஷம் போட்டுக் கொண்டு கலகம் பண்ண முயற்சித்த எதிரிகளின் காலித்தனங்களையும் உணர்ந்து கொண்டார்கள்.

நமது இயக்கத் தோழர்கள், ஈ. வெ, ராமசாமி அவர்களும், எஸ். ராமநாதன் அவர்களும், மேல் நாட்டுச் சுற்றுப் பிரயாணத்திற்குப் போயிருப்பதைக் கண்டு, "சுயமரியாதை இயக்கம் செத்துப் போய் விட்டது, கொஞ்ச நஞ்சம் உள்ள கிளர்ச்சியும் இனி அடியோடு ஒழிந்து விடும்" என்று திண்ணைப்பிரசாரம் பண்ணிக் கொண்டிருந்த நமதுஎதிரிகளுக்கு சேலம் ஜில்லாமகாநாடுசரியானபுத்தி கற்பித்ததென்றே கூறலாம்; அவர்கள் இரு கன்னங்களிலும் "பளீர் பளீர்" எனஇரண்டு அறைகள் கொடுத்து 'ஏ பேதைகளே நான் சாகவில்லை உயிரோடு தான் இருக்கிறேன். முன்னையைக்காட்டிலும் இப்பொழுது அதிகமாகக் கொழுத்துப்பருத்து உயர்ந்து வருகிறேன் பாருங்கள்' என்று சுயமரியாதை இயக்கம் சொல்லுவதைப்போல இருந்ததென்றே கூறுவோம். சுருங்கக் கூறவேண்டுமானால் சேலத்தில் இதுவே முதல் மகாநாடாயிருந்தாலும் பொது ஜனங்கள் கவனத்தை இதுபோல் வேறு எந்த மகாநாடும் கவரவில்லையென்றே சொல்லலாம்.

இனி இம்மகா நாட்டில் பங்கெடுத்துக் கொண்ட தோழர்களின் பேச்சுக்களின் சிறப்பைப்பற்றியும், அப்பேச்சுக்கள் பொதுஜனங்களின் கண்ணைத்திறந்து சுயமரியாதை இயக்கத்தின் உண்மைக்கொள்கைகளை உணர்ந்துபார்க்கும்படி செய்தது என்பதைப்பற்றியும் நாம் கூறுவது தற்புகழ்ச்சியாகுமென விடுக்கின்றோம்.

ஆனால் சுயமரியாதை மகாநாட்டிற்குத்தலைமை வகித்த தோழர். ம. சிங்காரவேலு அவர்களின் பிரசங்கத்தில் உள்ள ஒரு விஷயம் மட்டிலும் குறிப்பிடத்தக்கதாகும். "நாம் விரும்புகின்ற சாதி ஒழிவு, சமய ஒழிவு, பெண்கள் விடுதலை, சமூகசமத்துவம், பொருளாதார சமத்துவம், மூடப்பழக்க வழக்கங்களை ஒழித்தல், முதலியவைகளைச்செயலில் நிறைவேற்ற வேண்டுமானால் அரசியலைக்கைப் பற்ற வேண்டுமென்றும், அரசியலைக்கைப்பற்றுதவரையில் இந்த நோக்கங்களை நிறைவேற்ற முடியா"தென்றும் குறிப்பிடுகிறார்.

ஆனால் இவ்விஷயத்தை நாம் தறசமயத்தில் ஒத்துக்கொள்ள முடியவில்லை. அரசியலைக்கைப் பற்றினால்தான் நமது இயக்கக் கொள்கைகளைச் சீக்கிரமாகவும், எளிதாகவும் நிறேவேற்றமுடியும் என்ற தத்துவத்தை ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால் இக்கொள்கையை இப்பொழுதே சுயமரியாதை இயக்கம் கைக்கொண்டு விடுமானால் அக்கட்சியின் வளர்ச்சிக்குப் பாதகம் ஏற்படுமென்பதில் ஐயமில்லை.

நமது கட்சியின் கொள்கைகள் தேசமக்கள் எல்லோருடைய மனத்திலும் படிந்துவிடுமானால் அதன்பின் நாம் சட்டமூலமாகவே அரசாங்கத்தைக் கைப்பற்றுவதும், நமது கொள்கைகளைச் சட்டங்கள் செய்வதன்மூலம் நிறைவேற்றுவதும் ஆகிய காரியங்கள் சுலபமாக முடியும் இந்தக் காரணத்தினால் தான் நமது கட்சி இதுவரையிலும் அரசியலில் கலக்காமல் சமூகச்சீர்திருத்தப்பிரசாரம் மட்டும் செய்துகொண்டுவருகிறது என்று தெரிவித்துக்கொள்ளவிரும்புகிறோம்.

அன்றியும் நாம் இப்பொழுதே அரசியலைக்கைப்பற்றுவது என்று தீர்மானித்து விடுவோமானால் மற்றஅரசியல்கட்சிகளில்எவ்வாறு பட்டம் பதவிகளை விரும்புகின்ற சுயநலவாதிகள் நிரம்பிக்கிடக்கின்றார்களோ, அவ்வாறே நமது கட்சியிலும் நிரம்பிவிடக்கூடும் என்று நிச்சயமாக நம்பலாம். பட்டங்களுக்கும் பதவிகளுக்கும் ஆசைப் படுகின்றவர்கள் நிறைந்துள்ள கட்சிகள் எல்லாம் உண்மையான சமூகசீர்திருத்தத்திற்கும், சாதி மதங்கள் ஒழிவதற்கும், ஆண் பெண் சமத்துவத்திற்கும், ஏழை பணக்கார சமத்துவத்திற்கும் உண்மையாக உழைக்கமுடியாத நிலைமை அடைந்துவிடும் என்பதை நமது நாட்டில் தற்காலத்தில் நடைபெற்றுவரும் அரசியல் கட்சிகளின் போக்கைக்கொண்டு உணரலாம்.

ஆகையால் நமது இயக்கம்உண்மையில் ஏழைமக்கள் இயக்கமாகவே இருந்து, ஏழைமக்களின் விடுதலைக்கும், சமத்துவத்திற்கும் உழைக்க வேண்டுமானால், நமது இயக்கக்கொள்கைகள் தேசமெங்

குப்பரவி மக்கள் எல்லோரும் அவைகளை ஒப்புக்கொள்ளும் வரையிலும் அரசியலில் கலவாமல் வெறும் சமூகச்சீர்திருத்த இயக்கமாகவே அதிதீவிரமாகப்பிரசாரம் பண்ணிக்கொண்டு வருவதேசாலச்சிறந்ததென்பதே நமது இயக்கத்தலைவர்களின் கருத்தாகும். இவ்வாறு செய்தால்தான் நாட்டில் சமாதான பங்கம் ஏற்படாமல் நமது இயக்கக்கொள்கைகளை நடைமுறையில் வழங்கும்படி செய்யமுடியும் என்பதில் ஐயமில்லை.

மற்றபடி, தோழர் சிங்காரவேலு அவர்கள் சொல்லியுள்ள அபிப்பிராயங்கள் முழுவதும்நமது கட்சியின் அபிப்பிராயங்களே என்பதையும் அவைகளை நிறைவேற்றுவதன் மூலம்தான் நமது நாட்டில் எல்லாவித சமத்துவமும் உண்டாக முடியும் என்பதிலும் ஐயமில்லை.

சேலம் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் புதுமையானது ஒன்றுமில்லையென்றாலும், இதற்குமுன், செங்கற்பட்டு, ஈரோடு, விருதுநகர் முதலிய மகாநாடுகளில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்களை ஆதரிப்பதான தீர்மானம் ஒன்றே போதுமானதாகும். இந்தமூன்று மகாநாட்டுத் தீர்மானங்களிலும் நமது இயக்கக்கொள்கைகள் முழுவதும் அடங்கியுள்ளனவென்பதை நாம் கூறுவது மிகையாகும். ஆகையால் அத்தீர்மானங்களைப் பொதுஜனங்களிடம் பிரசாரம் பண்ணி அமலுக்குக்கொண்டுவருவதைத்தவிர, வேறு புதிதாகத் தீர்மானிக்கவேண்டிய விஷயம் ஒன்றுமில்லையென்றேசொல்லலாம்.

அடுத்தபடியாக, காங்கிரஸ்வருணாச்சிரம தருமப்பிரசாரமும், புராணப் பிரசாரமும் செய்து வருகிறது என்ற கருத்துடன் செய்யப்பட்ட தீர்மானமும் பாராட்டக்கூடியதேயாகும். இத்தீர்மானங்களைப்பற்றிப் பேசிய நமது இயக்கத் தோழர்கள், அப்பாதுரையார், டி. வி. சுப்பிரமணியம், கே. வி. அழகர்சாமி, பொன்னம்பலனார், குருசாமி, பண்டிதர் திருஞான சம்பந்தம், எஸ். வி. லிங்கம் முதலானவர்கள் சாதி, சமயம், வேதம், புராணம், மதம், கடவுள், மகாத்மா, காங்கிரஸ், ஹிந்தி, கதர், அரசியல் முதலிய புரட்டுகளை தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டிய போது, பொதுஜனங்கள் உணர்ந்த உண்மைக்கும், அடைந்த மகிழ்ச்சிக்கும், கொண்டஊக்கத்திற்கும் அளவில்லையென்றே சொல்லலாம்.

கடைசியாக பல எதிர்ப்புக்கிடையே சேலம் ஜில்லாமகாநாட்டை நடத்த முன்னின்று உழைத்த நமது இயக்கத்தோழர்களின் ஊக்கத்தையும் தைரியத்தையும் போற்றுகிறோம்.

திருச்சி பார்ப்பனரல்லாதார் மகாநாடு.

—:0:—

சென்ற 7-8—5—22-ல் திருச்சிராப்பள்ளி ஜில்லா பார்ப்பனரல்லாதார் ஆறாவது மகாநாடு திருச்சியில் நடை பெற்றது, அம்மகாநாட்டை எந்த விஷயத்திற்குக் கூட்டப்பட்டதோ அந்த விஷயத்தைத் தவிர மற்றவைகளெல்லாம் வெற்றியோடு நடைபெற்றன என்று தான் சொல்ல வேண்டும்.

தற்சமயம், பார்ப்பனரல்லாதார் கட்சியில் பார்ப்பனர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று, அக்கட்சியின் தலைவர்கள் சிலர் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தைப் பற்றி ஆராய்ந்து ஒரு முடிவு செய்யவே இம்மகாநாடு கூட்டப் பட்டதாகும். ஆனால் இவ்விஷயம் விஷயாலோசனைக் கமிட்டியில் விவாதத்திற்கு வந்துங்கூட தலைவர்களின் பிடிவாதத்தினால் நிராகரிக்கப் பட்டதென அறிகிறோம். மற்றபடி அரசியல் சுதந்தரம் சம்பந்தமாகவே பெரும்பாலும் தீர்மானங்கள் நடைபெற்றன. மகாநாட்டின் தலைவர், சர் ஏ. பி. பாத்ரோ அவர்களும், மற்றும் திறப்பாளர் வரவேற்புத் தலைவர் முதலியவர்களும், பெரும்பாலும் அரசியல் உரிமை சம்பந்தமாகவே ஊக்கங் காட்டிப் பேசினார்கள்.

சர். பாத்ரோ, சர். கே. வி. ரெட்டி போன்ற பிரபல தலைவர்கள் அனைவரும் காங்கிரசின் போக்கையும், சட்டமறுப்பின் தீமையையும் பலமாகக் கண்டித்துப் பேசிய விஷயம் தேச மக்களால் கவனிக்கக்கூடியதாகும்.

பார்ப்பனரல்லாதார் கட்சியை அகில இந்திய இயக்கமாக்க வேண்டுமென்னும் விஷயத்தில் எல்லாத் தலைவர்களும் ஒன்றுபட்ட அபிப்பிராயங் கொண்டிருந்தனர் என்றே கூறலாம்.

உண்மையில் பார்த்தால், நமது நாட்டில் உள்ள அரசியல் கட்சிகளில் தற்சமயம் கட்டுப்பாடானதும்' நிதானத்தோடு காரியம் செய்யக் கூடியதுமான அரசியல் கட்சி ஜஸ்டிஸ் கட்சி ஒன்றேயென்பதை யாரும் மறுக்க முடியாது. இவ்விஷயங்களை திருச்சி ஜில்லா மகாநாட்டின் நிகழ்ச்சிகளைக் கவனிப்போர் அறியலாம்.

திருச்சி மகாநாட்டில் நடைபெற்ற ஒரு முக்கிய தீர்மானம் அரசியல் வாதிகளால் கவனிக்கக்கூடியதொன்றாகும். அதாவது:— "மத்தியப் பொறுப்பாட்சியுடன் கூடிய மாகாண சுயாட்சி கொடுக்கவேண்டு"மென்று தீர்மானம் செய்திருப்பதேயாகும். வட்ட மேஜை மகாநாட்டிலும் நமது நாட்டிலும், எல்லா அரசியல் வாதிகளும் ஐக்கிய ஆட்சியே வேண்டுமென்று கேட்டனர். இன்னும் பலரும் ஐக்கிய ஆட்சியைப்பற்றியே கனவு கண்டுகொண்டிருக்கின்றனர். வட்ட மேஜை மகாநாட்டிற்குச் சென்ற ஜஸ்டிஸ் கட்சி கட்சியின் அங்கத்தினர்கள்கூட ஐக்கியஆட்சியையேஆதரித்தனர். இப்படியிருந்தும் திருச்சி மகாநாட்டில், மத்தியப் பொறுப்பாட்சியும், முழு மாகாணசுயாட்சியும் வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்ற முன்வந்தது. மிகுந்த சாமர்த்தியமும் புத்திசாலித்தனமும் சாத்யமான வழியில் தடையின்றி சுதந்திரம் பெற்றுத் தேசத்தை முன்னேற்ற வேண்டுமென்னும் எண்ணமும் ஆகுமென்றே கூறலாம். சுதேச சமஸ்தானங்களும் ஒன்று பட்டு அமைக்கக்கூடிய ஐக்கிய ஆட்சி ஏற்படுத்துவது அசாத்தியமான காரியமென்பதை அறிந்த பின், தைரியமாக இவ்வாறு தீர்மானம் பண்ண முன் வந்ததைப் பாராட்டுகிறோம்.

சமூகச் சீர்திருத்தம் சம்பந்தமாக ஜஸ்டிஸ் கட்சி இது வரையிலும் அதிகஊக்கம் செலுத்தாமல் இருந்தது போலவே இந்த மகாநாட்டிலும் இருந்தது என்றுசொல்லுவதில் தவறு ஒன்றுமில்லை.

இந்தக்காரணத்தினாலேயே இதற்கு முன் நடைபெற்ற பார்ப்பனரல்லாதார் மகாநாடுகளில் காணப்பட்ட ஒரு ஊக்கமும்,கிளர்ச்சியும் இந்த மகாநாட்டில் கொஞ்சங்கூட காணப்படாமலிருந்தது. இம்மகாநாட்டுடன் சர். கே. வி. ரெட்டியார் அவர்களின் தலைமையில் நடைபெற்ற பார்ப்பனரல்லாதார் இளைஞர் மகாநாட்டில் காணப்பட்ட ஒரு ஊக்கம் பார்ப்பனரல்லாதார் மகாநாட்டில் இல்லையென்று கூறலாம். ஆயினும் அரசியல் நெருக்கடி ஏற்பட்டிருக்கும் இச்சமயத்தில் ஒரு மகாநாட்டைக்கூட்டி காங்கிரசின் போக்கைத்தைரியமாகக்கண்டித்து தீர்மானங்களும், பிரசங்கங்களும் செய்த இந்தமகாநாட்டைப் போற்றாமலிருக்கமுடியாது.

ஜஸ்டிஸ் கட்சித்தலைவர்களுக்கு திருச்சி மகாநாடு ஒரு வழிகாட்டியாக இருந்ததென்றே கூறலாம். பார்ப்பனரல்லாதார் கட்சியைத், தேசமெங்கும் பரப்பவும், கட்சியின்கொள்கைகளைத் தவறில்லாமல் நிறைவேற்றவும், கட்சித்தலைவர்கள் பொது ஜனங்களின் அபிப்பிராயப்படி நடக்கவும் மகாநாடு மிகவும் முயற்சியெடுத்துக்கொண்டது என்று சொல்லலாம். இந்த வகையில் இனிவரப்போகும் மாகாணப்பார்ப்பனரல்லாதார் மகாநாட்டிற்குத் திருச்சி மகாநாடு ஒரு வழிகாட்டியாக இருந்தது என்பது உண்மையாகும். ஆகவே இவ்வகையில் மகாநாட்டை வெற்றிபெற நடத்திய தலைவர்களையும், நிர்வாகிகளையும் நாம் பாராட்டுகிறோம்.

திவான்பகதூர் டி. வரதராஜுலு நாயுடு அவர்கள்.

ஜஸ்டிஸ் கட்சியின் முன்னேற்றத்திற்காக இறக்கும் வரையிலும் இடைவிடாமல் உழைத்து வந்தவரும், அக்கட்சியின் பிரபலமான தலைவர்களில் ஒருவரும் ஆகிய திவான்பகதூர் டி. வரதராஜுலு நாயுடு அவர்கள் சென்னை கோமளேஸ்வரன் பேட்டையில் உள்ள தமது மாளிகையில் சென்ற 5-5-32 தேதியில் காலஞ்சென்ற செய்தி கேட்டு வருந்துகின்றோம். அவர் ஜில்லா ஜட்ஜு பதவியிலிருந்து விலகியபின், சற்றேனும் ஓய்ந்திராமல் பல துறைகளிலும் புகுந்து தேசநன்மைக்காக உழைத்து வந்தார். சென்னைக்கார்பொரேஷனில் பல வருஷங்கள் முக்கிய உறுப்பினராயிருந்து செய்த நன்மைகள் பல. சென்னையில் ஆரம்பக்கட்டாயக் கல்வி ஏற்படுவதற்கும், பிச்சைக்காரர் விடுதி ஏற்படுத்துவதற்கும், திரு. நாயுடு அவர்களே காரணமாவார்.

சமூக ஊழியத்தில் இவருக்கிருந்த ஆவலும் ஊக்கமும் அளவற்றதாகும். சென்னைச் சமூக ஊழிய சங்கத்தின் உபதலைவராகவும் அகில இந்திய சமூக ஊழிய சங்கத்திற்குக் காரியதரிசியாகவும் இருந்து உண்மையோடு உழைத்த ஒரு பெரியாராவார்.

ஜஸ்டிஸ் கட்சிக்கு இவர் செய்த ஊழியம் அளவற்றது. இன்று ஜஸ்டிஸ் கட்சியின் பத்திரிகைகள் நல்ல நிலைமையில் இருந்துவருவதற்கு இவரேகாரணமாவார். ஆடம்

டாமில்லாமலும், அமைதியாகவும், உண்மையான ஆர்வத்துடனும், கட்சியின் முன்னேற்றத்தையே கவலையாகக்கொண்டிருந்த தலைவர்களில் காலஞ்சென்ற சர். தியாகராயருக்குப்பின் திரு. நாயுடு ஒருவரே இருந்தார் என்று கூறலாம். நரை முதிர்ந்து கூன் விழுந்து நடப்பதற்கியலாத முதிர்ந்த பருவத்திலும் திரு. நாயுடு அவர்கள் சென்னையிலுள்ள "சர். தியாகராயர் ஞாபகக்கட்டிட"மே தானாகவும், தானே "சர். தியாகராயர் ஞாபகக்கட்டிட"மாகவும் இருந்து வந்ததை நினைக்கும்போது ஜஸ்டிஸ் கட்சியின் அபிமானிகள் யாரும் கண்ணீர் விடாமலிருக்க முடியாது.

திரு. நாயுடு அவர்களின் மரணத்தால், சிறப்பாக ஜஸ்டிஸ்கட்சிக்கும், பொதுவாகச் சென்னை நகரத்திற்கும், சென்னை மாகாணத்திற்கும் ஒரு பெரிய நஷ்டமென்றே கூறலாம். இப்பெரியாரைப் பிரிந்ததினால் வருந்தும் அவரது இரு குமாரர்களான, திரு. டி. சுந்தரராவ் நாயுடு எம். எல். சி. அவர்களுக்கும், திரு. ஜகந்நாதராவ் நாயுடு அவர்களுக்கும் மற்றுமுள்ள குடும்பத்தினர்க்கும், நமது அனுதாபத்தைத்தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

"புதுவை முரசு"

மானநஷ்ட வழக்கு.

பத்திராதிபர் தண்டிக்கப்பட்டார்.

புதுவையிலிருந்து சுயமரியாதைக் கொள்கையைத் தழுவி வெளிவரும் புதுவை முரசின் பத்திராதிபர் மீது பட்டுக்கோட்டை ழோர்ழ் பொன்னுந்தேஜ் என்ற பாதிரியாரும், புதுவையிலுள்ள மூன்று பாதிரிகளும், "பாதிரியாரின்-காமவெறி" "அறிவிருக்கிறதா?" என்ற இரு வியாசங்களுக்கும் தொடரப்பட்ட மானநஷ்ட வழக்கு சென்ற 27-4-32-ல் புதுவை சிவில் கோர்ட்டில் நடைபெற்றது. பிரதிவாதி சார்பாக தோழர் எஸ். பெருமாள் அவர்கள் (லாயர்) ஆஜரானார். வழக்கு நடைபெற்றதும் லாயர் எஸ். பெருமாள் அவர்கள் 15 நாள் தள்ளிக்கொடுக்கும்படி கேட்டார். அதை மறுக்கப்பட்டது. பிறகு, பட்டுக்கோட்டை ழோர்ழ் பொன்னுந்தேஜ் அவர்கள் இங்கு ஆஜராக வேண்டுமென்றார். அதையும் மறுக்கப்பட்டது. பிறகு தோழர் எஸ். சிவப்பிரகாசம் அவர்கள் விசாரணையில் கலந்து கொள்ளவில்லையென மறுத்து வெளியேறினார். அடுத்த எட்டாம் நாள் தீர்ப்புக் கூறுவதாக மாஜிஸ்ரேட் கூறினார். சென்ற 4-5-32 புதன்கிழமை காலை தீர்ப்புக்கூறப்பட்டது.

1. ழோர்ழ் பொன்னுந்தேஜ் அவர்கள் தொடர்ந்த வழக்கிற்குத் தீர்ப்பாக, மானநஷ்டத் தொகை ரூ 300-ம், 2 மாதக்காவல் தண்டனையும், 300 பிராங்க் அபராதமும்;

2. புதுவையிலுள்ள 3 பாதிரிமார்களின் வியாஜ்ஜியத்திற்குத் தீர்ப்பாக நபர் 1 க்கு ரூ 100 வீதம் மான நஷ்டத் தொகையும், 200 பிராங்க் அபராதமும், ஒரு மாத சிட்சையும் தோழர் எஸ். சிவப்பிரகாசத்திற்கு விதிக்கப்பட்டன.

ஆனால், சிட்சைக்கு "லா ஆப் பொரான்ழா" அதாவது 5 வருடம் வரையில் யாதோர் குற்றத்திலும் குற்றவாளியெனத் தீர்மானிக்கப்படாவிடில் இத்தண்டனை மன்னிக்கப்படும் என்ற விதி அளிக்கப்பட்டது.

இவ்வழக்கு பழயபடியும் சிவில் கோர்ட்டிலேயே நடைபெறுமென்னத் தெரிகிறதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

வட ஆற்காடு ஜில்லா 13-வது கூட்டுறவு பெருங் கழகம்.

வட ஆற்காடு ஜில்லாவின் 13-வது கூட்டுறவு மகாநாடு நாளது 1932ம் வருஷம் மே மாதம் 29, 30 தேதி ஞாயிறு திங்கள்கிழமைகளில் பள்ளிக்கொண்டையில் நடைபெறும். தென்னாப்பிரிக்காவில் இந்திய கவர்ன்மெண்டின் எஜெண்டாகயிருந்த திருவாளர். சர். கே. வி. ரெட்டி நாயுடு. பி.ஏ. பி.எல். அக்ராசனம் வகிப்பார்கள். சென்னை அரசாங்க மந்திரி திருவாளர். பி. டி. இராஜன் அவர்கள் பி.ஏ. (ஆக்ஸன்) பார். அட். லா. மகாநாட்டைத்திறந்துவைக்க அன்புடன் இசைந்துள்ளார்கள் விவசாய கைத்தொழில் கண்காட்சிகளும் அது சமயம் நடைபெறுமென ஒரு நிருபர் எழுதுகிறார்.

சண்ட மாருதம்.

திருச்சியிலிருந்து வெளி வந்து கொண்டிருந்த "சண்டமாருதம்" தினசரிப்பத்திரிகையை 10-5-32ந் தேதியோடு நிறுத்தி விட்டதாக 9-5-32ந்தேதி சண்ட மாருதத்தில் ஒரு அறிக்கைக் காணப்படுகிறது.

திருச்சி ஜில்லா 6-வது பார்ப்பனரல்லாதார் மகாநாடு

இந்த மகாநாடு சென்ற 7-8—5—32 சனி ஞாயிறுகளில் திருச்சி முனிசிபல் தியேட்டரில் நடை பெற்றது.

7—5—32 சனிக்கிழமை காலை 7-30மணிக்கு மகாநாட்டுத் தலைவர், சர். ஏ. பி. பாத்ரோ அவர்களையும், வாலிபர்மகாநாட்டுத் தலைவர் சர். கே. வி. ரெட்டி அவர்களையும், திருச்சி நகரமண்டபத்திலிருந்து ஊர்வலமாக முனிசிபல் தியேட்டருக்கு அழைத்து வரப்பட்டது. மகாநாட்டிற்கு வந்திருந்தவர்களில் முக்கியமானவர்கள் திருவாளர்கள்:—

கனம் முதன்மந்திரி திவான்பகதூர் முனிசாமி நாயுடு, கனம் இரண்டாம் மந்திரி பி. டி., ராஜன், செட்டிநாட்டுக்குமாரராஜா, சர். பாத்ரோ, சர். கே. வி. ரெட்டி, டப்ளியூ. பி. ஏ. சௌந்திரபாண்டியன், வி. வி. ராமசாமி, கோவை வெரிவாட செட்டியார், திவான் பகதூர் ரத்னசபாபதி முதலியார், ஏ. ஆர். சிவானந்தம், சாமி சிதம்பரனார், ராவ்பகதூர் ஏ. டி. பன்னீர்செல்வம், ராவ்பகதூர் டி. எம். நாராயணசாமி பிள்ளை, கே. சி. எம். வெங்கடாசல ரெட்டியார், சேலம் சிவப்பெருமாள், பி. ஆர். தேவர், எஸ். முருகப்பா, மிஸஸ், முருகப்பா, மு. அ. அருணாசலஞ் செட்டியார், கே, ஏ. பி. விஸ்வநாதம், திரவியம்பிள்ளை, டி. ஏ. ஜி. ரத்னம், டி பி. வேதாசலம், தி. வி. சோமசுந்தரம், ஜே. எஸ். ராமானுஜம், மிஸஸ் ராமானுஜம், கே எம். பாலசுப்பிரமணியம், துறையூர் ராஜகோபால் பிள்ளை, மதுரை ரங்கசாமி நாயுடு, எம். எம். கிருஷ்ணசாமி பிள்ளை, முருகூர் ராமசாமி பிள்ளை, அரியலூர் வெங்கடாசலம் பிள்ளை, ஸ்ரீரங்கம் துரைசாமி, காமாட்சியாபிள்ளை, மாணிக்கம் பிள்ளை, சின்னசாமி உடையார், ராஜா சிதம்பரம், பூமிநாதபிள்ளை. நகர் ஆரோக்கியசாமி, ரெங்கசாமி முதலியவர்கள்.

மகாநாடு ஆரம்பிப்பதற்குமுன் திருச்சி தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தாரால் சர். ஏ. பி. பாத்ரோ அவர்களுக்கும், சர். கே. வி. ரெட்டி அவர்களுக்கும் தனித்தனியே வரவேற்புப் பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப் பட்டன. இருவரும் அதற்குத் தகுந்த பதில் அளித்தனர். பிறகு மகாநாடு ஆரம்பமாயிற்று.

முதலில் முசிரி தாலூகா போர்டு தலைவர் ஆர். எம். கே. ராமசாமி பிள்ளையவர்கள் மகாநாட்டைத்திறந்து வைத்து ஒரு சிறு பிரசங்கம் செய்தார்! அதன் பின் வரவேற்புக் கழகத்தலைவர் மீனாப்பள்ளி ஜெமீன்தார், வெங்கடாஜல ரெட்டியார் அவர்கள் தமது பிரசங்கத்தைச் செய்தார், பிறகு மகாநாட்டுத் தலைவரைப் பிரரேபித்துப் பலர் பேசினார்கள். பிறகு தலைவர் சர் பாத்ரோ அவர்கள் தமது முகவுரைப் பிரசங்கத்தைச் செய்து முடித்தார். பிறகு விஷயாலோசனைக் கமிட்டிக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பகல் 2 மணிக்குக் கூட்டம் முடிந்தது.

பின்னர் மாலை 3 மணிக்கு வாலிபர் மகாநாடு ஆரம்பித்தது. முதலில் பி. ஸி. எதிராஜலு நாயுடு அவர்கள், மகாநாட்டுக் கொடியைப் பறக்க விட்டார் அதன் பின் செட்டி நாட்டுக் குமாரராஜா அவர்கள் மகாநாட்டைத் திறந்து வைத்து ஒரு உபந்நியாசம் புரிந்தார். பிறகு டி. வி. சோமசுந்தரம் அவர்கள் வரவேற்புப் பிரசங்கத்தைச் செய்து முடித்தார். பின்னர் தலைவரைப் பிரேரேபித்துப் பலர் பேசியபின் தலைவர் சர். கே. வி. ரெட்டி அவர்கள் தமது ஆசனத்தமர்ந்து முன்னுரைப் பிரசங்கம் நிகழ்த்தினார். பிறகு சமூக முன்னேற்றத்திற்கான அனேக தீர்மானங்கள் செய்யப்பட்டு மாலை 7 மணிக்கு மகாநாடு முடிந்தது

அன்று இரவு 9-30 மணிக்கு எஸ். பி. ஜி. ஹாஸ்டலில் விஷயாலோசனைக்கமிட்டிக்கூட்டம் இரவு 1-மணிவரையில் நடைபெற்றது. சில தீர்மானங்களே நிறைவேறின.

மறுநாள் 8—5—32 ஞாயிற்றுக்கிழமை காலை 8-மணிக்கு மகாநாடு மீண்டும் சர். பாத்திரோ அவர்கள் தலைமையில் கூடிற்று. இரவு விஷயாலோசனைக்கமிட்டியில் நிறைவேறிய தீர்மானங்கள் முழுவதும் ஏகமனதாக பிரேரேபணை செய்யப்பட்டும் ஆமோதிக்கப்பட்டும் நிறைவேறின. பிறகு 11-மணிக்கு அவ்விடத்திலேயே விஷயாலோசனைக்கூட்டம் நடைபெற்று பாக்கித்தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டது.

மீண்டும் மாலை 3-மணிக்கு மகாநாடு கூடி மீதமுள்ள தீர்மானங்களையெல்லாம் நிறைவேற்றப்பட்டது. கடைசியாக தலைவர் முடிவுரைக்குப்பின் கட்சித்தலைவர் திரு. முனிசாமி நாயுடு அவர்களால் ஒரு பிரசங்கம் செய்யப்

பட்டு மகாநாட்டுக் காரியங்களால் வந்திருந்தோர் சொல்லப்பட்டு மாலை 7 மணிக்கு மகாநாடு நிறைவேறியது. (நமது நிருபர்)

தபால்களை எரிக்கும் விஷயம்.

சென்னை கவர்ன்மெண்டின் அறிக்கை

சென்னையிலும், மதுரையிலும் தபால் பெட்டிகளை அழிக்கச்செய்த முயற்சி சம்மந்தமாகக் கவர்ன்மெண்டார் தங்களது அறிக்கையில் குறிப்பிடுவதாவது:— சில பொறுப்பற்ற காலிகள் இம்மாதிரி செய்வதாகச் சொல்லுவதை நாங்கள் மறுக்கிறோம். மார்ச்சு மாதக் கடைசியில் சென்னையிலும், இதர விடங்களிலும் கைப்பற்றப்பட்ட 'சர்க்குலர்'களின் பிரதிகளில் 'தேசிய வாரத்தை'க் கொண்டாடவேண்டிய முறையைப்பற்றிய விவரங்களிருந்தன. அதில் ஏப்ரல் 21-ந் தேதியிலிருந்து 'தபால் வாரத்தை' அனுஷ்டிக்கும்படி சொல்லப்பட்டிருந்தது.

சட்டமறுப்புக் கட்சி இந்த சர்க்குலரில் கண்ட திட்டங்கள் ஒவ்வொன்றையும் அனுஷ்டிக்க சகல முயற்சியும் செய்திருக்கின்றது. ஆனால் அம்முயற்சிகள் பலிக்கவில்லை. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியினரால் இந்த சர்க்குலர்கள் வெளியிடப்படுவதாக அதில் கண்டிருக்கின்றது. அதில் காங்கிரஸ் தலைவி என்ற ஹோதாவில் திருமதி சரோஜனி கையொப்பமிட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. இந்த 'சர்க்குலர்களைத்தான் வெளியிடவில்லை என்று காங்கிரஸ் மறுக்கத் தயாராக இருந்தால் அது உடனே இதனை மறுக்கக் கடமைப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் இந்த சர்க்குலர்களுக்கான பொறுப்பை ஏற்றால் தீவைத்தலுக்கும் தனது அஹிம்ஸா தர்ம கோட்பாட்டிற்கு எப்படிப் பொருத்தமுண்டென்பதை அது விளக்கட்டும். காங்கிரஸ் தீவைக்கும் வேலையில் இறங்கும்படி நேராக யோசனை கூறாதிருந்திருக்கலாம். ஆனால் சட்டத்திற்கும், ஒழுங்குக்கும் விரோதமாக அது நடத்தும் இயக்கமானது தபால் பெட்டிகளிலுள்ள கடிதங்களை எரிக்கும் முயற்சி போன்ற சட்ட விரோதமான காரியங்களுக்கு நேரிடையான ஆக்கமேற்படுகின்றதென்பதில் ஐயமில்லை.

(சு—மி.)

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

நமது ராஜீயக்கட்சியை ஜஸ்டிஸ்கட்சியென்று தனியாக வைத்துக்கொண்டு நமது வகுப்பினரின் முன்னேற்றத்திற்காக வேலை செய்ய பிராமணரல்லாதார் கட்சி என்று ஏற்படுத்திக் கொள்ளலாம்.

மற்ற தேசங்களைப்போல் இந்தியாவும் பொருளாதார மந்தத்தால் கஷ்டப் படுகிறது. கவர்ன்மெண்டின் தலைச்செலவு அளவுக்கு மிஞ்சி அதிகமாயிருக்கிறது. சர்வீஸ்களின் சம்பள முறை அடியோடு மாற்றப்பட்டு இன்னும் நியாயமாகவும் அதிக ஏற்றத் தாழ்வின்றியும் செய்யப்பட வேண்டும். இப்போது விலைவாசிகள் மிகவும் இறங்கிவிட்டதால் விவசாயிகள் அதிககஷ்டமடைந்திருக்கின்றனர். ஸகிக்கமுடியாத நிலவரிப்பளுதகுந்தபடி குறைக்கப்படவேண்டும். சிக்கனம் ஆரம்பக் கல்வியைப் பாதிக்குமாறு விடக்கூடாது. இதர தேசோத்தாரண இலாக்காகளும் சிக்கனத்தில் பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இந்தியா கூடிய சீக்கிரத்தில் பூரண பொறுப்பாக்ஷியை அடைய வேண்டுமென்று ஒவ்வொரு இந்தியரும் விரும்புகிறார். பூரண மாகாண சுயஆக்ஷியும் மத்திய கவர்ன்மெண்டில் ஜவாப்தாரித்துவம் உடனே ஏற்படவேண்டுமென்று நான் அபிப்பிராயப்படுகிறேன். சில கிரமமான பாதுகாப்புகள் அவசியமாயிருக்கலாம். ஆனால் மத்திய கவர்ன்மெண்டில் ஜவாப்தாரித்துவமளிகக மறுப்பது பெரிய தவறாகும். இங்கிலாந்தில் அதிகாரத்திலுள்ள கட்சியின் தலைவர்கள் செய்யும் விஷமத்தனமான பிரசங்கங்கள் ராஜீய நிலைமையைப்பற்றி நம்பிக்கை உண்டுபண்ணுவதாக வில்லை. ஆகவே நாம் கட்டுப்பாடாக ஒரு மித்து நின்றொழிய சில சிறிய வசதிகளை யளித்து விட்டுப் பாக்கியை ஒத்திப் போட்டு விடக்கூடும். போலி வசதிகளை நிராகரித்து விட்டுப் பூரண பொறுப்பாக்ஷிக்காகப் போராடுவது ஜஸ்டிஸ் கட்சிக்குப்பெரிய சோதனை யாகும். நமது தேசமும் கட்சியும் இனி எப்படி முன் செல்வது, சிக்கலான பிரச்னைகளை எப்படித்தீர்ப்பது முதலிய விஷயங்கள் இம் மகாநாட்டில் யோசித்து முடிவுசெய்யப் படவேண்டும்.

ஆண்டுவிழா.

நிகழும் 1932-ம் வருடம் மே மாதம் 22-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-30 மணிமுதல் 5-30 மணிவரை கொழும்பு கொள்ளுப்பெட்டி பெண்கள் உபசார மண்டபத்தில் தோழர் சி. கே. குஞ்சிராமன் பி. ஏ., அவர்களின் அவைத்தலைமையில் இந்தியர் சுயமரியாதைச்சங்கத்தின் விழா நடைபெறுமென காரியதரிசி எழுதுகிறார்.

உங்களுக்கு

லைப் இன்ஷ்யூரன்ஸ் இன்றியமையாதது.

இந்தியாவின் மிகவும் பெரியதும் சிறந்ததுமான

ஓரியண்டல்

கம்பெனியில் இன்ஷ்யூர் செய்து

சுதேசியை ஆதரியுங்கள்.

வருஷ வருமானம் ...	...	ரூ. 245 லட்சம்.
வருஷமொன்றிற்கு பாலிஸிதார்களுக்கும் அவர்களுடைய வார்சுகளுக்கும் செலுத்தும் தொகை.	...	ரூ. 100 „
வருஷத்தில் சராசரி லாபம். ...	...	ரூ. 39 „
மொத்த தொகை இருப்பு. ...	...	ரூ, 1131 „

பம்பாயிலிருக்கும் கம்பெனி மானேஜருக்காவது அல்லது திருச்சினாப்பள்ளியிலிருக்கும் பிராஞ்சு காரியதரிசிக்காவது எழுதினால் ரூல்ஸ் புஸ்தகமும் பிரிமிய விவரங்களும் அனுப்பப்படும்.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

நூற்றுக்கணக்கான சைவயுவர்கள் விண்ணப்பமனு (அப்ளிகேஷன்) அனுப்பி நாங்கள் விதவைப் பெண்ணை மணந்து கொள்ளத் தயார். பெண் எச்சாதியைச்சார்ந்திருந்தாலும் எம்மதத்தைச் சார்ந்திருந்தாலும்இருக்கட்டும்என்று மிகத்தைரியமாய் முன்வந்துவிட்டார்கள். ஆனால் யுவர்கள் போன்று யுவதிகளான கைம்பெண்கள் முன்வரவில்லை, எனவே திருநெல்வேலிஜில்லாவில் போதிய விதவா விவாகம் நடத்தமுடியாதிருக்கிறது. இதற்கு ஓர் சுயமரியாதைப்பெண்தொண்டர் நியமித்துப்பிரசாரஞ் செய்ய ஏற்பாடு செய்தால் பெருநலமடையலாம் என்பது என் நம்பிக்கை இதனிடை சென்ற ஆண்டு டிசம்பர் மாதக் கடைசியில் தூத்துக்குடியில் உயர் திரு. மறைமலையடிகள் புதல்வியார் சோதரி திருவரங்க நீலாம்பிகை அம்மையார் அவர்கள் தலைமையில் கூடிய சைவர்களின் கூட்டத்தில் விதவைகளுக்கு ஓர் ஆச்சிரமம் நிறுவவேண்டும் என்று தீர்மானஞ்செய்திருப்பதாய் சுதேசமித்திரன் மூலமாய் அறிந்து களிபேருவகையடைகின்றேன் என்றாலும் அவ்வாச்சிரமத்தின் முழு நோக்கம் தெளிவாய் தெரியவில்லை. ஆச்சிரமம் நிறுவி விரும்பும் கைம்பெண்களை மணஞ் செய்து கொடுக்கவா? அல்லது விதவைகளைச் சேர்த்து சிவத்தொண்டு புரியக் கற்பிக்கவா? அல்லது முற்காலம் போல் விதவைகளுக்கு தேவாரம் பாடவும், திருமெழுகிடவும், திருக்கோலம் போடவும், பூக்கொய்துவரவும் செய்வதோடு, சிவனடியார்களின் காம இச்சையைத் தணிக்கவும் செய்யத்தக்க நல்ல தேவரடியார்களை உற்பத்தி செய்யவா என்பது விளங்கவில்லை. விதவைத்தன்மையடைந்த பெண்களை ஆச்சிரமத்தில் சேர்த்து அங்கு அவர்களுக்குக்கல்வி, கைத்தொழில் கற்பித்து விரும்பிய பெண்களை மணஞ் செய்து கொடுப்பது அவ்விதவா ஆச்சிரமத்தின் நோக்கமென்றால் யாமும் எம்போன்ற சுயமரியாதைத் தொண்டர்களும் அவ்வாச்சிரமத்துக்கு போதிய உதவி புரியக் காத்திருக்கின்றோம் என்பதோடு திருநெல்வேலி விதவா விவாக சங்கத்திற்கு மனுச்செய்து விவாகஞ் செய்து கொள்ள விரும்பும் யுவர்களின் அப்ளிக்கேஷன் எல்லாவற்றையும் தூத்துக்குடி சைவ விதவைப்பெண்கள் விடுதிக் காரியதரிசிக்கு அனுப்பவும் தயாராயிருக்கின்றோம். விதவைகள் மணஞ் செய்து கொடுத்தல் நீதியென்ற கருத்தோடு விடுதி ஆரம்பிப்பது மெய்யானால் தூத்துக்குடி சைவ மங்கையரின் ஜீவகாருண்யச் செயலைப் போற்றுவதோடு தீர்மானஞ் செய்து நிறைவேற்றி அதை அனுஷ்டானத்திற்கு கொண்டுவரப்பாடுபடும் சோதரிகட்கு என் முழு நன்றியையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இதன் முன்னர் தூத்துக்குடியிலும், பாளையங்கோட்டையிலும் இரண்டு, மூன்று விதவா விவாகங்கள் நடைபெற்ற போதிலும் இவ்வாண்டிலே அன்பர் திருகூட சுந்தரம் எம். ஏ., பி. எல்., செய்த கலப்பு மணமும், சுயமரியாதை வீரர்களான ஏ. இராமநாதர் செய்த விதவா விவாகமும், தோழர் இரத்தினசபாபதி செய்த கலப்பு விதவா விவாகமும், குலசேகரன் பட்டினம் தோழர் சி. டி. நாயகம் அவர்களின் அருமுயற்சியால் குலசேகரன் பட்டினத்திலுள்ள ஒரு சைவ விதவைப் பெண்ணிற்கும் வெள்ளூரிலுள்ள ஒரு சைவ ஆண்மகனுக்கும் செய்த திருமணமும் மிக விசேஷமானது. ஆனால் பிற்கூறியமூன்று திருமணங்களும் ஒரு மாதத்திற்குள் நடைபெற்றன. எனவே சுயமரியாதைக்கொள்கைகள் அதிதீவிரமாய் திருநெல்வேலி ஜில்லாவில் பரவி வருகிறதென்பதோடு வருங்காலத்திலே சுயமரியாதை முன்னின்று நடத்த இச்சில்லாவின் சைவ இளைஞர்களே முன்வருவர் என்பதும் எனது நம்பிக்கை. இத்திருமணங்கள் நடைபெற்றதைக் கேட்டு சைவர்கள் வாய் பேசாது மௌன முற்று விட்டார்கள். இன்னும் அவர்கள் தம் வாயைத்திறவாது மோனமுற்றிருந்தால் நலமடைவர். அன்றேல் சுயமரியாதைஎன்னும் வெடி குண்டின் முன் அகப்பட்டு அல்லற்பட்டொழிவர் என்பது திண்ணம். திருநெல்வேலி ஜில்லாவில் சுயமரியாதை இயக்கம் வெற்றிபெற வேண்டுமானால் நிரம்ப காதல் மணம் கலப்புமணம், விதவை மணம் பெருகத் தொண்டர்கள் போதிய முயற்சி செய்வார்களாக. சைவக்கோட்டையைத் தகர்த்து, பொதுவாகச் சமீபத்தில் சுயமரியாதை மணஞ் செய்த அன்பர்களுக்கும் சிறப்பாக தோழர் இரத்தினசபாபதி அவர்களுக்கும் என் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தோழர் சி. நடராஜன் தந்தையார்.

மாயவரம் தோழர். சி. நடராஜன் அவர்களின் தந்தையார் காலஞ்சென்றதை முன்னிட்டு தரங்கம்பாடியில் அவர்கள் தங்கியிருந்த பங்களாவில் சென்ற 10—5—32 ல் இறுதிநாட் கொண்டாட்டம் நடைபெற்றது உள்ளூரிலிருந்தும் வெளியூரிலிருந்தும் உறவினர்களும் நண்பர்களும் ஏராளமாக வந்திருந்தார்கள். ஈரோட்டிலிருந்து திரு. ஈ. வெ. ராமசாமி அவர்களின் தமயனார் திரு. ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்களும், திருமதி ஈ. வெ. ரா. நாகம்மாள் அவர்களும், சென்னையிலிருந்து, திருமதிகள் குஞ்சிதம் குருசாமி, காந்தம், சகுந்தலா, முதலானவர்களும் சாமி. சிதம்பரனாரும் வந்திருந்தனர். மற்றும் திருவாளர்கள் கார்குடி ஆர். சின்னையா, பொறையாறு ராஜதுரை செட்டியார் முத்தையா முதலியார் முதலான பிரபலஸ்தர்களும் வந்திருந்தனர், மத்தியானம் சமபந்தி விருந்து சிறப்பாக நடைபெற்றது. வேறு யாதொருவிதமான சடங்குகளும் நடைபெறவில்லை. தஞ்சை ஜில்லாவில் தொண்டமண்டல முதலியார்கள் வகுப்பில் பிரபலமான குடும்பத்தில் சுயமரியாதை கொள்கைகளைப்பின்பற்றும் குடும்பம் திரு நடராஜன் அவர்களின் குடும்பம் ஒன்றேயாகும் என்பது குறிப்பிடத்தக்கது, என நிருபர் எழுதுகிறார்,

---

கெந்தகமே-இந்தயுகம்.

டாக்டர் T. K. வெங்கிடாசலம் அவர்களால் கெந்தியின் அருவருப்பான வாசனையையும் காரமான காரலின் துர்க்குணத்தையும் நீக்கி தயாரித்து அனுபவித்து கைகண்டது. பனிரண்டு ஆண்டுகளாக அனுபவமுதன்மை பெற்றது.

பால்யர் முதல் விருத்தர்வரை கர்ப்ப—விந்து மெல்லியல்தானங்களில் மூலாக்கினி தொந்தமாகி வெளியாகும் 217 வித வெட்டை வியாதிகள், 21 வித கிரந்திகள், 16 வித குன்மங்கள், 13 வித ஜன்னிகளுக்கும் சிரமமுள்ள பத்தியமில்லாமல் மூன்று வாரம் 21-நாள் உபயோகித்து குணம் தாக்கூடிய கோஷாயி கெந்தக ரசாயணம் கொண்ட டப்பி 1-க்கு ரூ. 6—0—0. உபயோகிக்கும் விதம் மருந்துடன். பாக்கிங் தபால் செலவு வேறு. மலாய் வாசிகள் ஆர்டருடன் ரூ. 7—12—0 அனுப்பிவைக்கவும்.

டாக்டர் B. A. எதிராஜ் (கால்ராபைரி)
கோஷாயி வைத்தியசாலை தென்னூர், திருச்சி

காந்தியின் உண்மைத் தோற்றம்.

திரு. காந்தி பரோடா சமஸ்தானத்திற்கு விஜயம் செய்தபோது, பொதுமக்கள் அளித்த வரவேற்புக்கு பதிலளிக்குமுகத்தான் தனது சுயராஜிய திட்டத்தைப்பற்றியும், கட்குடி, கதர், மறியல் முதலியன பற்றிதான் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தைப்பற்றியும் செய்த உபந்யாசத்தின் ஆராய்ச்சியாகும்.

21—6—31ந் தேதி வெளியான குடி அரசு தலையங்கத்தை புத்தகமாக்கி வெளியிட்டிருக்கிறோம். இதைப்படிக்கும் அன்பர்கள் காங்கிரசின்யோக்கியதையையும், காந்தியார் கோரும் ராமராஜிய வண்டவாளமும், தொண்டர்கள் செய்யும் போலி மறியல் வேஷத்தின் வெளிப்பகட்டும் கண்டு தெளியலாம்.

100 புஸ்தகங்கள் விலை ரூ. 1—0—0
தபால் சிலவு 0—6—0

கிடைக்குமிடம்:—
மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

திரு. காந்தியின் முன்னுக்குப்பின் முரண்.

(தோழர் ஆர். ரேத்தினசபாபதி)

(சென்ற வாரத்தொடர்ச்சி)

வருணாசிரம தருமத்தில் தனக்கு அதிக நம்பிக்கை உண்டு என்று சொல்லும் திரு. காந்தி, குங்கும ஆலத்திகளுடன் உப்பு சத்தியாக்கிரகத்துக்கு புறப்பட்ட வைதீகப் பெரியாரான திரு. காந்தி அவர்கள் வருணாசிரமத்துக்கும் முறையே வைத்திருக்கும் முரணான தீண்டாமை ஒழிய வேண்டு மென்று சொல்வது முரணல்லவா? தாமும் சீர்திருத்த வாதி என்பதற்காக போலும்.

திரு. காந்தி அவர்கள் அஹிம்சா தர்மி, அவர் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தையே தனது அஹிம்சா போரினால் வென்றார் என்று ஜனங்கள் சொல்லுகிறார்கள். ஆனால் இதே திரு. காந்தி அவர்கள லண்டனில் இந்திய மாணவர் சங்கக் கூட்டத்தில் பேசும் போது "இங்கு எனக்கு ஒன்றும் கிடைக்காவிடில் இந்தியா திரும்பியவுடன் பத்து லக்ஷ மக்களை பலி கொடுப்பேன்" என்று கூறியிருக்கிறார். இதிலிருந்து இவரே அஹிம்சையைக் கைவிட்டு விட்டார் என்று தெரிகிறதல்லவா? அல்லது ஹிம்சையை வற்புறுத்தக் காரணமென்ன? இது அவருடைய அஹிம்சைக்கு முரண் அல்லவா?

திரு. காந்தி அவர்கள் இந்திய மாணவர் சங்கத்தில் தான், தான் ஆதிதிராவிடர்களின் உண்மைப் பிரதிநிதி என்றும் வேறு யாரும் இருக்க யோக்கியதை இல்லை என்றும் சொன்னது வெள்ளிடைமலை. இதே திரு. காந்தி அவர்கள் லண்டனில் அக்டோபர் மாதம் 13ந் தேதி இந்திய மாணவர் ஐக்கிய சங்கத்தில் பேசும் போது "தாழ்த்தப் பட்டவர்களுக்கு தனித் தொகுதி கொடுப்பதை என் உயிர் போகும் வரை எதிர்த்தே தீருவேன்" என்று கூறி விட்டார். ஆதிதிராவிடருக்கு தான் தான் பிரதிநிதி என்று சொன்னால் அவர்களுக்கும் முஸ்லீம் சீக்கியர்களுக்கு விட்டுக் கொடுத்த மாதிரி அவககளுக்கும் விட்டுக் கொடுக்க வேண்டும் அப்படிக்கின்றி தானே அவர்களின் பிரதிநிதி ஆனால் அவர்களுக்கு விட்டுக் கொடுக்க மாட்டேன் என்று சொன்னால் அது சரியா? இப்படி முரண்பாடாக செய்யலாமா?

திரு. காந்தி அவர்களை இந்திய மாணவாகள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையில் தீண்டாதாரின் தனித்தொகுதியைப் பற்றி குறிப்பிட்டுச் சொன்னதாவது. "தாழ்த்தப் பட்டவர்களுக்குத் தனித் தொகுதி அளிக்கக் கூடாது, அவ்வாறு அளித்தால் ஜாதி இந்துக்களுக்கும் தாழ்த்தப்பட்டோருக்குமிடையே வெறுப்பும் சச்சரவும் உண்டாகும்" என்பதே. இப்படிச் சொன்னதிலிருந்து முகம்மதியர்களுக்கு மட்டும் தனித் தொகுதி கொடுத்தால் அவர் அடிக்கடி கூறிய ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை எவ்வாறு உண்டாகும். திரு. காந்தி அவர்கள் இம்மாதிரி முஸ்லீம்களுக்கு தனித் தொகுதி ஒப்புக் கொண்டதிலிருந்து அவர் ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையை ஏமாற்றுக்காகவோ அல்லது தீண்டாதாரை ஏமாற்றலாம் என்கிற முரணான அபிப்பிராயம் இருப்பதாகத் தோற்றுகிறது.

திரு. காந்தி அவர்கள் லண்டனிலுள்ள ஈட்டனில் ஓர் விருந்தின் போது பேசுகையில் "ஹிந்துக்கள் மெஜாரிட்டி சமூகமாயிருப்பதினால் மைனாரிட்டி சமூகங்களுக்கு விட்டுக் கொடுக்க வேண்டுமென்று தான் சதா ஹிந்துக்களிடம் கேட்டுக் கொண்டே யிருக்கிறேன். அவ்வாறு ஹிந்துக்கள் விட்டுக் கொடுத்தால் மைனாரிட்டி பிரச்சினை வெகு சுலுவாக முடிவு பெற்று விடும்" என்று சொன்னார். காந்தியின் கருத்து அதுவானால் மைனாரிட்டிகளுக்குத் தனித் தொகுதி வழங்குவதை எதிர்க்கக் காரணமென்ன? என் உயிர் போனாலும் முஸ்லீம்கள் சீக்கியர்களைத் தவிர்த்து ஏனைய சமூகங்களுக்கு வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வழங்க மாட்டேன் என லண்டன் இந்திய மாணவர் சங்கக் கூட்டத்தில் சொல்லக் காரணமென்ன? இவ்வாறு திரு. காந்தி அவர்கள் முன்னுக்குப் பின் முரணாகப் பேசலாமா?

திரு. காந்தி அவர்கள் ஓர் பத்திரிகை நிருபருக்கு பேட்டி கொடுத்த போது அவர் "பாடசாலை வைத்திய சாலை, முதலியவைகள் ஏற்படுத்துவதன் மூலம் மக்களை வேறு மதத்திற்கு இழுத்துக் கொள்வதே ஐரோப்பிய பாதிரிகளின் நோக்கமானால் நான் அவர்களை இந்த நாட்டை விட்டுப் போய் விடும்படியாகக் கேட்டுக்கொள்வேன்" என்று கூறினார் ஆனால் அதே திரு. காந்தி அவர்கள் பிறகு என்ன சொன்னார் தெரியுமா அதாவது "இந்தியா சுயராஜியம் பெற்ற காலத்தில் தவறான தென்று நான் கருதும் முறையிலும் கூட பிற நாட்டு மதத்தினரைத் தம் மதத்திற்கு மாற்ற அயல் நாட்டுப் பாதிரிகளுக்கு சர்வ சுதந்திரமும் உண்டு" என்று நேர் முரணாகச் சொல்லியிருக்கிறார்.

திரு. காந்தியின் முதல் கொள்கை "ஜனநாயக தத்துவம்" காங்கிரஸ் ஒன்றே ஜனநாயக சபை என்று திரு காந்தி சொல்வதுண்டு. எங்கு "ஜனநாயக தத்துவம்" வேண்டுமோ அங்கு "ஏக நாயக தத்துவம்" வெற்றியடைய முடியா தென்பது வெள்ளிடைமலை. ஆனால், திரு. காந்தி அவர்கள் தான் வேண்டும் "ஜனநாயக தத்துவத்தை" யடைய கராச்சி காங்கிரசில் "ஏக நாயக தத்துவத்தை" கைக் கொண்டிருக்கிறார் என்பதையும் இன்றும் அவர் காங்கிரசின் ஏதேச்சாதிகாரியாய், ஏகநாயகராய் விளங்குகிறார் என்பதையும் காணலாம். திரு. முஸோலினி அவர்கள் இட்டாலி தேசத்தின் சர்வாதிகாரியாயிருந்து அத்தேசத்தை முன்னேற்ற மடைய விழைவது போல திரு. காந்தி அவர்கள் ஓர் இயக்கத்திற்கு சர்வாதிகாரியாயிருந்து அவ்வியக்கத்தைச் செல்வாக்குள்ளதாகச் செய்ய முயலுகிறார் அவர் ஏக நாயக தத்துவத்தை விளக்க இன்னும் ஓர் சிறந்த உதாரணத்தைக் கீழே கொடுக்கிறோம். திரு. காந்தி அவர்கள் சென்ற நவம்பர் 13ந் தேதி லண்டன் மைனாரிட்டி கடைசிக் கூட்டத்தில் கூறினதாவது:—"சமஸ்த இந்தியர்களுக்கும் காங்கிரசே முக்கியமான பிரதிநிதி ஸ்தாபனம, இந்தியாவில் வாழும் எல்லா சமூகத்தாரும் காங்கிரசில் பிரதிநிதித்துவம் பெற்றிருக்கின்றார்கள். தீண்டாதாருக்கும் காங்கிரசில் இடமுண்டு. நானே காங்கிரசினுடையவும், இந்தியர்களுடையவும் ஏகப்பிரதிநிதி, இன்று ஓட்டெடுத்தால் தீண்டாதார்கள் என்னையே பிரதிநிதியாகத் தெரிந்தெடுப்பார்கள்" இதிலிருந்து அவரின் ஜனநாயக தத்துவத்தின் முரணான ஏக நாயக தத்துவம் காணப்படுகிறதா? அல்லவா.

திரு. காந்தி அவர்கள் அன்னியச் சாமானை பகிஷ்கரிப்பவர்கள் கையாலேயே கூடத் தொடமாட்டார். போகிற இடமெல்லாம் பிரசாரமும் இதுவே. ஆனால் அப்படிப்பட்ட திரு. காந்தி அவர்கள் லண்டனிலுள்ள கொலம்பியா கம்பெனிக்கு ஆர் ரிகோட் (Record) கொடுத்திருக்கிறார். காங்கிரசுக்கு பாதி பணம் என்றவுடன் சிக்கி விட்டாரோ, இவ்வாறு ஒரு பெரிய முரணான காரியம் செய்யலாமா?

உப்பு சத்தியாக்கிரகத்தின் போது திரு. காந்தியவர்கள் மதுபானக்கடையை மறியல் செய்ய வேண்டும், கள்ளுக்கு மரம் கொடுக்கக் கூடாது என்றெல்லாம் பிரசாரம் செய்தார். அப்போது தம் "யங் இந்தியா"வில் கூட ஸ்திரீகளின் கடமை என்ற தலையங்கத்தின் ஓர் இடத்தில் கள்ளுக்கடை சீமைத்துணிகள் விற்கப்படும் கடைகளின் மறியல் வேலையை நாம் மறுபடியும் ஆரம்பிக்க வேண்டும் என்று எழுதியிருக்கிறார். ஆனால் நான்காவது வரியில் கள்ளு சாராயக்குடி ஒழிவதும், அன்னியத்துணியைத் தடுப்பதும் கடைசியில் சட்ட பூர்வமாமத்தான் நடக்க வேண்டும் என்று எழுதியிருக்கிறார். இது முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறது. சட்ட பூர்வமாக நடக்க வேண்டியது தான், பின் என் இன்னும் மறியல் நடத்தப் பட்டு வருகிறது. இன்னும் இதை விட விளக்கமாக ஒன்று கூறுகிறோம். திரு. காந்தி அவர்கள் பரோடா சமஸ்தானத்திலுள்ள மரோலிக்குச் சென்றிருந்த போது அவருக்கு வரவேற்புப் பத்திரங்கள் அளித்தார்கள் பதில்கூறு முகத்தான் திரு. காந்தி அவர்கள்:—

"கள்ளுக்கடை, சாராயக்கடைகளை மூடி விடுவது நம்முடைய வேலையல்ல. குடிகாரர்கள் குடிப்பழக்கத்தை அவர்களாகவே விட்டு விட்டால் அவர்கள் திருட்டுத் தனமாகவாவது மதுவை உற்பத்தி செய்வார்கள். கள் சாராயக் கடையை மூடி விட்டாலும் திருக்கள் - உற்பத்தியாகும். குடி வழக்கம் நிற்க வேண்டுமானால் குடிகாரர்களுக்குக் கைத்தொழில் கற்றுக் கொடுத்தால் தான் முடியும், இல்லாவிட்டால் அவர்கள் குடியை விட மாட்டார்கள். களைத்துப் போன தொழிலாளர்களுக்கு நானே தென்னாப்பிரிக்காவில் மதுவாங்கிக்கொடுத்திருக்கிறேன். இவ்வளவு தூரம் கூறி விட்டு இதற்கேற்ற விஷயங்க ஒன்று பரிகாரம் தேடாமல் மீண்டும் கள்ளுக்கடை மறியல் செய்யுங்கள் என்று சொன்னால் அதை என்னென்று சொல்வது? முன் சொன்னதற்கும் பின் சொன்னதற்கும் பொருத்தமில்லையே.

திரு. காந்தி அவர்கள் கொஞ்ச காலத்திற்கு முன்பு தீண்டப்படாதவர்களுக்குகுளம், தனிக்கோயில்தனி பள்ளிக்கூடம் முதலியவைகள் ஏற்படுத்திக் கொடுக்கலாம் என்றார். ஆனால் வட்டமேஜையில் சிறுபான்மையோர் கமிட்டியில் பேசுகையில் தீண்டப் படாதவர்களுக்குதனித்தொகுதி கொடுப்பதை என்னுயிர் போகும் வரை எதிர்ப்பேன், ஏனென்றால் இந்துக்களிடமிருந்து அவர்களைப் பிரிப்பதால் அவர்கள் எப்போதும் உயர்த்தப்பட மாட்டார்கள், ஆகையால் அவர்களின் நன்மையை உத்தேசித்தே இந்துக்களிட மிருந்தே பிரிக்கக் கூடாதென்கிறார். இப்படிச் சொல்லும் திரு. காந்தி அவர்கள்பின் எதற்காக தாழ்த்தப்பட்டவர்களுக்கு தனிக் கோவில் குளம் முதலியவைகள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்கிறார். இவ்வாறு அனேக விஷயங்களில் திரு. காந்தி அவர்கள் முன்னுக்குப் பின் நேர் முரணாகவே பேசி வருகிறார்.

பவுண்டன் பேனா.

சேலம் சுயமரியாதை மகாநாட்டில் ஒரு ப்ளாக்பர்ட் பவுண்டன் பேனா தவறுதலாக என்னிடம் வந்துளது. சொந்தக்காரர் என்னிடம்பெற்றுக்கொள்ளலாம்.

ராமசுப்பிரமணியம்,
21, ராகவ செட்டி தெரு,
திருச்சி.

சேலம் ஜில்லா சுயமரியாதைப்பெண்கள் மகாநாட்டின் வரவேற்புத்தலைவர் திருமதி

சிங்காரம் அம்மாள் அவர்களின்

அக்கிராசனப்பிரசங்கம்.

சேலத்தில் 7—5—32ந் தேதி நடைபெற்ற பெண்கள் மகாநாட்டு வரவேற்புக்கழகத்தலைவி திருமதி சிங்காரம் அம்மாள் வரவேற்புப் பிரசங்கம் வருமாறு:—

அன்பு மிக்கப்பெரியோர்களே! சகோதரிகளே!!

இன்று நடை பெறும் சேலம் ஜில்லா சுயமரியாதை மாதர் மகாநாட்டிற்கு விஜயம் செய்திருக்கும் சகோதரிகளுக்கும் முக்கியமாக சகோதரர்களுக்கும், வரவேற்புக் கழகத்தலைவி என்ற முறையில் நன்றி செலுத்துகிறேன். சகோதரர்களுக்கு நான் முக்கியமான நன்றி செலுத்தப்பட்டதன் காரணம் அவர்களும் இம்மகா நாட்டிற்கு வந்திருந்து வாழ்க்கையில் எங்களுக்கு ஏற்பட்டிருக்கிற சௌகரியத்தின் அளவு எவ்வளவு. அசௌகரியத்தின் அளவு எவ்வளவு என்பதைத்தெரிந்துகொள்ளவும் பெண்களை ஏன் இழிவு படுத்தினார்கள் அதனால் என்ன பயன் அடைந்திருக்கிறார்கள் என்பதையும் பெண்களுக்குச் சமசுதந்திரம் கொடுக்காமல் இன்னும் அடிமைப்படுத்திக் கொண்டே இருந்தால் ஆண்களுக்கு ஏற்பட்டிருக்கிற கஷ்டங்கள் நீங்குமா என்பதை தெரிந்து கொள்ளவும். "பெண்புத்தி பின்புத்தி" என்றும், "பேதமை என்பது மாதர் கணிகலாம்" என்றும் கூறும் ஆண்களாகிய உங்களுக்கு இங்கு மாதர் மகாநாட்டிற்குத் தலைமை வகிக்க விருக்கும் தோழர் எஸ் நீலாவதி அம்மையாரவர்கள் "பெண்புத்திபின்புத்தி" ஆண்புத்தி வீண்புத்தியா என்பதையும் "பேதமைஎன்பதுமாதர்கணிகலமா" "அறியாமை என்பது ஆடவர்க்கு கணிகலனும்," தெளிவிக்கும் வற்றை செவிமடுத்து எது சரி என்று முடிவு கட்டவும், சேலை கட்டிய மாதரை நம்பி தெருவில் நின்று தியங்கித் தவிப்பவர் ஆண்களா? ஆடை கட்டிய ஆண்களை நம்பி அறிவு மழுங்கியவர்கள் பெண்களா? இவற்றில் எது உண்மை என்பதை உணர்ந்து கொள்ளவும் ஆகிய வாழ்க்கையில் பல விஷயங்களைத் தெரிந்து கொள்ள ஏதுவாகும் என்பதேயாகும். என் அருமைச் சகோதரிகளே!

பெண்கள் வயிற்றில் மூட்டைப் பூச்சிபோல் ரத்தத்தைப் பருகிய ஆண்கள் நம் தலையிலேயே கைவைப்பது எவ்வளவு கொடுமை என்பதை நீங்கள்ஒவ்வொருவரும் உணர்ந்து சமசுதந்திரங்களை அடைய முயற்சிக்குமாறு வேண்டுகிறேன். தோழர் சிங்காரவேலு அவர்கள் கூறியபடி பெண்களுக்கு என்ன சுதந்திரமிருந்த போதிலும். சொத்து சுதந்திரம் இல்லாவிடில் நம்மால் ஒருபயனும் அடைய முடியாது. என்பதையும் தெரிவித்துக் கொண்டு எனது உரையை முடிக்கின்றேன்.

———

(5-ம் பக்கத்தொடர்ச்சி)

கையானது தங்களைத்தடஸ்தஞ் செய்து கலக்குவோருக்கு அன்பு நாட்டுவதும், தங்களிடம் அனுதாபங் காட்டி உதவி புரிவோர்க்கு அற்பமான உபசாரமளிப்பதுமாக இருந்துவருகிறது. அப்படிப்பட்ட சந்தேகாஸ்பதமான சாமதந்திரங்களின் பலனே இப்போதைய நிலைமைக்குக் காரணம். நமது கட்சியார் அனுவசியமான பிரவர்த்திகளில் பிரவேசிப்பவர்களல்லர். எங்களுடைய ராஜகீய மதமோ விரிமனங்கொண்டது. கூட்டமைப்பை ஒட்டிய நிர்மாணத்தில் நம்மவர் செல்லுகின்றனர்.

இரண்டாவது லண்டன் மகாநாடு கலைவதற்கு முன்பாக இந்தியாவில் கடுமையான கலக்கங்கள்உண்டாயினவென்று செய்திகள் தெரியலாயின. காங்கிரசானது இந்தியாவின் சிற்சில பாகங்களில் ஒரு 'போட்டியும் கலகாஸ்பதமும் கொண்ட சர்க்காரை' நடத்த தயார் செய்துகொண்டிருந்தது. ஐக்கியமாகாணங்களிலும், பர்டோலியிலும் 'வரிகொடா இயக்கம்' தீவிரமாக ஊடாடிக்கொண்டிருந்தது. காந்திஜீ திரும்பி வந்த சமயம் தேசமெங்கும் மிக்க சிக்கலான நிலைமையானது குடிகொண்டிருந்தது. காங்கிரஸ் காரியக்கமிட்டியோ 'நேரான நடவடிக்கை' நடத்தும்படி சிபார்சு செய்யும் நீண்ட தீர்மானங்களை நிறைவேற்றியது. அது காரணமாக வைசிராய் அதிகமான அவசரச் சட்டங்களை பிறப்பிக்கலானார். காந்திஜீக்கு பேட்டி கொடுக்க மறுதளித்தது சரியான ராஜதந்திர நிபுணத்வமா என்பதைப் பற்றி அபிப்பிராய பேதங்கள் கிளம்பி இருக்கின்றன. கவர்ன்மெண்டுக்கு எதிராக யுத்தம் கூறபட்டபிறகும், காங்கிரசினால் சட்டமறுப்பு இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட பிறகும் நேரான சம்பாஷணையிலிருந்து என்ன நலம் விளையப்போகிறதென்னும் சிந்தனை உதிக்கலாயிற்று. காரியக் கமிட்டியின் தீர்மானத்திற்குப் பிறகு அடுத்தடுத்தும் காரியங்கள் தலை நிமிர்ந்து எழும்பின. சட்டமறுப்பு இயக்கமோ சட்டவரம்புகளுக்குட்பட்ட நிர்வாகத்திற்கு முற்றிலும் முரணானதாகும். கூட்டமைப்போடு கூடின குடியரசாட்சிக்கு முற்றிலும் புறம்பானது இந்தியாவிலுள்ள எல்லவகுப்பினர்களுக்கும் சட்டமறுப்பு இயக்கத்தில் சிறிதும் அனுதாபமில்லை என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகின்றது, ஆனால் கீழ்தர உத்தியோகஸ்தர்களினால் குற்றஞ்செய்தவர்கள் சரியானபடி நடத்தப்படவில்லையென்று சிலர் அருவருப்புக்காட்டுகின்றனர். ஆத்திரமும், ஆவேசமும்கொண்ட கூட்டத்தவர்களில் புகுந்து வேலை செய்யும்போது வசவுகளுக்கும், வல்லடிகளுக்கும் இடமில்லாமற்போகா. ஆயினும் காங்கிரசின் வழிகளை ஒப்புக்கொள்ளாதவர்களும், சட்ட மறுப்பு இயக்கத்தை கண்டிப்பவர்களும் கூட அதிகார ஆதிக்கம் வரம்புமீறிப் போவதை வெறுக்கலாயினர். ஏதொன்றிலும் பற்றுதலில்லாமல் மனம் புழுங்கியவாறு இருக்கலாயினர். வரம்புமீறிய செய்கைகளுக்கு எதிராக எமது மனத்தாங்கலை தெரிவிக்குமளவில் விஷயத்தின் மற்றோர் அம்சத்தையும் நாம் கவனிப்பது அவசியமாகும். சட்டமறுப்புக்காரர்கள் வானின்றுதித்த சற்குண சம்பன்னர்களல்லர். அவர் ஏதும் தெரியாதெனச்சொல்லவும் முடியாது. அவர்களிற் சிலருக்கு தேசாபிமானமே இறுதியில் இடந்தரும் ஸ்தானமாக இருக்கின்றது. அமுலிலிருந்துவரும் சட்ட ஒழுங்குகளை மீறி நடக்கும் பக்ஷத்தில் தமக்குஅபாயமாவது, காயமாவது உண்டாகுமென்பதை அறிவார்கள். ஆத்திரங்கொண்ட பாமரர்க்கு மத்தியில் சட்டமறுப்பினால் உண்டாகக்கூடிய அபாயங்களை நாமறிந்து நடக்கக்கூடுமானால் அதை காட்டிலும் ஜனசமூக ஊழியம் வேறொன்றுமில்லை. ஆத்திரம்பூண்ட பாமரர்களுக்குள் குற்றமுள்ளவனையும், குற்றமற்றவனையும் கவனித்துக் கண்பணிப்பது சாத்தியமல்ல. ராஜீயத்துறையில் தம் மனச்சாட்சியையொட்டி தியாகம் செய்து துன்புறும் சிற்சிலரது தேசாபிமானத்தின் தூய்மையைக் குறித்து நாம் ஒன்றும் சொல்வதற்கில்லை இப்படிப்பட்டவர்களுக்காக வேண்டிக் காரியத்தை அதிகண்டிதமாகக் கவனிக்கும் கீழ்தர உத்தியோகஸ்தர்களை நிர்வகிப்பதில் விதிப்பிரகரணங்கள் இருப்பது அவசியமாகும், சட்டமறுப்பு இயக்கத்தைக்குலைத்து அடக்குவதற்கான வழிவகைகளில் சிற்சில மாறுதல்கள் உண்டாக்கப்பட்டிருப்பதை நோக்க திருப்திகரமாய் இருக்கின்றது. ஆகவே இப்பொழுது எங்கும் கூட்டுறவும் அமைதியும் முன்னிற்க வழியுண்டு எனவே சட்டமறுப்பு இயக்கத் தொல்லை ஒழிந்து சமரசம் பிராப்தமாகவேண்டுமிடத்து அதிகார வர்க்கத்தவர்க்கும், மகாஜனங்களுக்கும் இடையிலே பரஸ்பர நம்பிக்கையும் மனமுவந்த கூட்டுறவும் ஊன்றியிருத்தல் வேண்டும்.

சிலதேசங்களில் சமஷ்டி அரசியல் திட்டம் நிலைப்பதற்கு வெகுகாலம் சென்றது என்பதை நாம் கவனிக்க வேண்டும். இந்தியப் பிரச்சினையோ சரித்திரத்தில் ஏற்படாத அருமையாம்சம் கொண்டது அகிலதேச பார்லிமெண்டு சபையில் தகுந்த ஸ்தானத்தை யடையுமாறு இந்தியாவின் மனோரதம் நிறைவேறும். நமது முன்னேற்றத்திற்காக நாம் அயலார் உதவியைஎப்போதும்நாடக்கூடாது. இத்தகைய மனோபாவம் மாறுதலடையவேண்டும். நமது லக்ஷியத்தை அடைய நாமே உழைக்கவேண்டும். இந்தியர்க்குள் ஒற்றுமையும், பரஸ்பர நம்பிக்கையும், இந்திய நிர்மாண ராஜதந்திரமும் ஒருங்கமைந்தால் லக்ஷியத்தை நாம் அடையலாகும்.

(தமிழ் நாடு.)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கம் செய்யும் தொண்டர் படையும் ஆங்காங்கு சேர்க்கவேண்டும். ஒழுங்காக ஜில்லா கமிட்டிகளும், தாலூகா கமிட்டிகளும் கிராமச் சங்கங்களும் நிருவி வரவேண்டும். கொள்கைகளை எதிரிகள் பாமர மக்களிடத்தில் திருத்திக் கூறுவண்ணம் ஒரு படித்தாய் கூறி மக்களின் ஐயங்களைப் போக்க வேண்டும். இயக்கக் கொள்கைகளைப் பரப்பும் உண்மைத் தொண்டர்கட்கு எல்லா வழியினும் ஆதரவளிக்கும்படி பேரியோர்களை வற்புறுத்தவேண்டும். நமது தலைவர்கள் வரும் வரையும் இயக்கத்தை ஒழுங்குபெற நடத்தி வரவேண்டுவது அவசியமென்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். இக்கடமை தொண்டர்களாகிய நம்மைச் சார்ந்ததே என்று வற்புறுத்திக்கூறுகிறேன்.

நம் இரு கண்கள்.

தோழர்களே! எனது உரையை முடிக்கு முன்னர் உங்களுக்கு ஒரு வார்த்தை கூற விரும்பு கிறேன். இந்தியா முழுமையுமுள்ள பார்ப்பனரல்லாதாரின் நன்மைக்காகப் பாடுபட்டு வருவது இரண்டே கட்சிகளாகும் அரசியல் துறையில் நமது ஜஸ்டிஸ் கட்சியும், சமூகத் துறையில் நமது சுயமரியாதை இயக்கமேயாகும். ஆகவே இவ்விரண்டும் ஒன்றோடொன்று கலந்து வேலை செய்தாலன்றி நமது தாய் நாடு விடுதலையடையமுடியாதென்பது திண்ணம் ஆயிரம் காந்திகள் கிளம்பி, பதினாயிரம் காங்கிரஸ்கள் கூட்டி, லட்சம் தீர்மானங்கள் செய்தாலும் நமது இரு கண்கள் போன்ற இவ்விரண்டு இயக்கங்களும் வெற்றி பெறுதவரை நமது பாரத அன்னையின் விலங்குகள் தறிக்கப்பட இயலாதென்பது உறுதி. இதை நான் கூறும்பொழுது நமது தொண்டர்கள் தங்கள் பொறுப்பை உணர வேண்டுமென்பதே எனது நோக்கம். ஆதலால் தோழர்களே! எமது சகோதர ரத்தினங்களே! எழுங்கள்! எழுங்கள்! வரிந்து கட்டி தேச சேவைக்குப் புறப்படுங்கள்; நாட்டிற்கு நலம் விளைக்கத்தொண்டாற்றுங்கள். நமது இருகண்களான இவ்விரு இயக்கங்களையும் தேச முழுதும் பரப்புங்கள். நமதியக்கங்கள் இரண்டும் ஒன்றை விட்டொன்று உயிர் வாழ முடியாதென்னும் உண்மையை உணருங்கள் நமதியக்கப்பத்திரிகைகளை வளருங்கள், பார்ப்பனரல்லாதார் ஒவ்வொருவர் வீட்டிலும் நமது பத்திரிகைகள் திகழும்படி முயற்சியும் கிளர்ச்சியும் செய்யுங்கள் இவ்வளவே எனது வேண்டுகோள் இத்துடன், இம்மகாநாட்டின வரவேற்புக்கழகத்தாரின் வேண்டுகோட்கிணங்கி இம்மகாநாடு திறக்கப்பட்டதென மன மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன்.

சேலம் ஜில்லா முதலாவது

சுயமரியாதை மகா நாடு.

வரவேற்புக்கழகத்தலைவர்

தோழர் K. R. V. அர்த்தநாரி

அவர்களின் பேருரை.

——:0:——

7-5-32ல் நடந்த சேலம் ஜில்லா முதலாவது சுயமரியாதை மகாநாட்டு வரவேற்புத் தலைவர் தோழர் கே. ஆர். வி, அர்த்தநாரி அவர்களின் பேருரை வருமாறு:-

தோழர்களே!

இன்று இந்த சேலம் ஜில்லாவின் முதலாவது சுயமரியாதை மகாநாட்டிற்கு உங்களை வரவேற்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். நமது சுயமரியாதை இயக்கமானது, தோன்றி சுமார் 7 ஆண்டுகளானாலும், இதுவரையிலும், சமூக விஷயங்களில் இவ்வியக்கம் உண்டாக்கியிருக்கும் அவ்வளவு புரட்சியை வேறு எந்த இயக்கமும் உண்டாக்கவில்லை யென்பது உறுதி.

நமது இயக்கத்தின் கொள்கைகளைப்பற்றி, விரிவாக உங்களுக்குச்சொல்லவேண்டிய அவசியமுமில்லை யென்றே நினைக்கின்றேன். நமது இயக்கத்தின் கொள்கைகளை நீங்கள் பல தடவை, இதுபோன்ற மகாநாடுகள் மூலமாகவும், பொதுக்கூட்டங்கள்மூலமாகவும், பத்திரிகைகள் மூலமாகவும் கேட்டும், படித்தும், அறிந்தும் இருப்பீர்கள். ஆகையால் சுருக்கமாக "எவை எவை மனிதனுடைய சுயேச்சக்கும், இன்பத்திற்கும் தடையாக இருக்கின்றனவோ அவைகளையெல்லாம் வேரோடு களைந்து, மனிதர்களை யெல்லாம் மனிதர்களாக வாழச் செய்வது தான நமது இயக்கம்" என்று கூறுவதுபோதும் என்று கருதுகிறேன்.

இவ்வாறு மனிதர் சுதந்தரம் பெறும் வகையில், தடையாக இருப்பன, கடவுளானாலும், வேதமானாலும், புராணமானாலும், இவைகளை ஆதரிக்கும் எந்த மதமானாலும் அவைகளை யெல்லாம் எதிர்த்துப்போராடவேண்டிய நிர்ப்பந்தம் நமக்கு ஏற்பட்டு விட்டது.

இவ்வாறு நாம், `மனிதர்கள் வெகு காலமாக தெய்வீகத்தன்மையுள்ளவை யென்று நம்பி வந்தவைகளை யெல்லாம் குறைகூறவும், அவைகளில் உள்ள ஆபாசங்களையும் எடுத்துக்காட்டிப் பிரசாரம்பண்ணவும் ஆரம்பித்தவுடன் ஒவ்வொரு மூலைகளிலிருந்தும் நமக்குத் தோன்றிய எதிர்ப்புகள் எண்ணாற்றவை. நம்மை எதிர்த்தவர்களோ, பொருள்பலம், ஆள் பலம், பத்திரிகை பலம் முதலியவைகளையுடையவர்களாகவேயிருந்தனர். இருந்தும் அவர்களால், இதுவரையிலும் நமது இயக்கத்திற்கு ஒரு அணுத்துணையும்தீங்கு செய்யமுடியாமல், இறுதியில் அவர்களே மூலையில் அடங்கி ஒடுங்கிவிட்டனர் என்பது உங்களுக்குத் தெரியாத விஷயமல்ல.

இவ்வாறு அறிவும்,திறமையும், செல்வாக்கும் படைத்த பலர் எதிர்த்தும் நமது இயக்கம் சிறிதும் குறைவுபடாமல் நாளுக்கு நாள் அதிகமாகப்பரவி, தேச மக்களின் மனத்தில் வேரூன்றி வருவதற்குக்காரணம், நமது இயக்கத்தில் உள்ள உண்மையான கொள்கைகளே யாகும். இதுவரையிலும் நமது நாட்டில் தோன்றி வேலை செய்து வந்த சமூக சீர்திருத்த இயக்கங்கள் எல்லாம் ஒரு பயனும் அளிக்காமல் இருந்து வந்தன. ஒவ்வொரு காலத்தில் தோன்றிய ஒவ்வொருசமூகசீர்திருத்த வாதிகளின் முயற்சிகளும் வீணாயின. அவர்கள் செய்த சமூக சீர்திருத்தங்கள் யாவும் வெறும் பேச்சளவிலும், பிரசார அளவிலும் நின்றனவே தவிர செய்கையளவில் ஒன்றும் உருப்பட்டுவரவில்லை. ஆனால் நமது இயக்கம் தோன்றிய நாள் முதல் கூடியவரையிலும் அனேக பயனுள்ள காரியங்களைச் செய்து முடிக்கும் நிலைமையை உண்டாக்கியிருக்கின்றது.

இதற்குக் காரணம், சீர்திருத்த வாதிகள் எனத்தோன்றிய மற்றவர்கள் சமூக ஊழல்கள் உண்டாயினமைக்கு அடிப்படையான காரணங்கள் என்ன வென்பதை அறியாமலே சீர்திருத்தம் செய்யத் தொடங்கினர். அதாவது, மதம், வேதம், புராணம், கடவுள், சுவர்க்கம், மோட்சம், நரகம் போன்ற புரட்டுக்களை ஆதாரமாக வைத்துக்கொண்டே அவைகளில் கை வைக்காமலே சீர்திருத்தம் பண்ண முயற்சித்தனர். இக்காரணத்தாலேயே அவர்களுடைய சீர்திருத்தங்கள் அவர்கள் காலத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டது போலக்காணப்பட்டாலும் பின்னாளில் பயனில்லாமல் ஒழிந்தன.

ஆனால் நாமோ மேற்கூறிய புரட்டுக்களையெல்லாம் அடியோடு ஒழித்துச் சீர்திருத்தம் பண்ண விரும்புகிறோம். இதுதான் முற்காலச் சீர்திருத்தக்காரர்களுக்கும், நமக்கும் உள்ள வேற்றுமையாகும்.

நமது நாட்டில் உள்ள தீண்டாமைக்கொடுமையை ஒழிக்கவேண்டுமென இதுவரையிலும் தோன்றிய இயக்கங்கள் வாயளவில் பேசி வந்தன. ஆனால் நமது இயக்கமோ இவ்விஷயத்தில் உண்மையோடும் உழைத்து வருகிறது. இவ்வுண்மையை, மற்ற தேச பக்தர்கள், "தீண்டாமை ஒழியவேண்டும், ஆனால் வருணாச்சிரம தருமம் இருக்கவேண்டும்" என்று சொல்லிக்கொண்டிருக்கும்போது நாம் "வருணாச்சிரம தருமமும் அதற்கு ஆதாரமாயுள்ள எல்லாம் —அவை எத்தன்மையுள்ளனவாயிருந்தாலும் அடியோடு ஒழியவேண்டும்" என்று சொல்வதைக் கொண்டு அறியலாம்.

புரோகிதம் என்ற விஷயத்தைப்பற்றி எடுத்துக்கொள்ளுவோம். இதில் உள்ள சூழ்ச்சிகளையும், மோசங்களையும் விவேகானந்தர், தயானந்த சரஸ்வதி போன்றசீர்திருத்த வாதிகள் இதற்கு முன்னர் எடுத்துக் காட்டியிருந்தார்களானாலும் அவைகளை ஜனசமூகத்தில் யாவரும் அனுஷ்டானத்தில் கைக்கொள்ளவில்லை. ஆனால் நமது இயக்கம் ஏற்பட்டதன் பலனாக நம்மவர்களில் பலர் புரோகிதத்தையே அடியோடு ஒழித்திருக்கிறார்கள்.

மற்றும் பெண்கள் சுதந்திரம் சம்பந்தமாகவும், விதவாவிவாகம், கலப்பு விவாகம், காதல் விவாகம் போன்றவை சம்பந்தமாகவும், இதற்கு முன்னும் பல சீர்திருத்தக்காரர்கள் பேசியிருந்தாலும், நமது இயக்கம் தோன்றிய பின்னர் தான் இவைகள் காரியத்தில் மிகுதியாக நடத்தப்பட்டு வருகின்றனஎன்று சொல்லலாம்.

மற்றொரு விஷயத்தையும் இச்சமயத்தில் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. அதாவது, நமது மக்கள், எவ்வாறு ஆயிரக்கணக்கான வருஷங்களாக, கடவுள், வேதம், புராணம், மோட்சம், நரகம் என்ற வார்த்தைகளை நம்பிப்புரோகிதர்களிடம் ஏமாந்து வந்தார்களோ அது போலவே அரசியலிலும், சுயராஜ்யம், காங்கிரஸ்,கதர், மகாத்மா, ஹிந்தி, முதலிய வார்த்தைகளை நம்பி அரசியல் வாதிகளின் சூழ்ச்சிகளில் சிக்கிக் கிடந்தனர். நமது இயக்கம் அரசியல் இயக்கம்அல்லாததாயிருந்தாலும் அரசியல் வாதிகளின் சூழ்ச்சிகளையும், ஏமாற்றச் செயல்களையும் பொது ஜனங்களுக்கு எடுத்துக் காட்டி அவர்களை எச்சரித்து வந்தது. இதனால் பிரபல அரசியல் வாதிகளில் பலரும் நமது இயக்கத்தை எதிர்த்துப் பார்த்தனர். அப்படியும் நமது இயக்கத்திற்கு யாதொரு தீங்கும் உண்டாகவில்லை.

கடைசியாக, நமது எதிரிகள், சுயமரியாதை இயக்கத்தை அசைக்க முடியாதென, அறிந்த பின் இயக்கத் தலைவர்களைப்பற்றி அவதூறுப் பிரசாரம் பண்ணத்தொடங்கினார்கள். நமது இயக்கத்தலைவர்களின் பேரில், இல்லாத பொல்லாத குற்றங்களை யெல்லாம் நேர்முகமாகச் சுமத்திப் பத்திரிகைகளிலும், பொது மேடைகளிலும் பிரசாரம் பண்ணினார்கள். அப்படியும் நமது இயக்கத்தை அசைக்க முடியவில்லை.

ஆகவே இனி நாம் ஒரு சிறிதும் அச்சமோ, கவலையோ அடையவேண்டிய அவசியமேயில்லை. ஏனென்றால், நமது சுயமரியாதைக் கொள்கைகள் தற்போது, இளைஞர்கள் மனதிலும், முதியோர் மனத்திலும், பெண்கள் மனத்திலும் ஏழைகள் மனத்திலும், பணக்காரர்கள் மனத்திலும் வேரூன்றி உரம் பெற்று வருகின்றது. சுயமரியாதை இயக்கத்திற்கு எதிராகப்பிரசாரம் பண்ணிக்கொண்டிருந்த கட்சியினரும், மனிதர்களும், இப்பொழுதுதங்கள் கட்சியிலும், கொள்கையிலும், சுயமரியாதைக் கொள்கைகள் தான் இருக்கின்றன என்று கூறி மக்களைத் தங்கள் வசப்படுத்த முயற்சிக்கின்றனர். இந்த நிலைமையை நமது இயக்கம் உண்டாக்கியிருப்பதைப் பார்க்கும் போது எதிர்காலத்தில், நமது இயக்கத்தையே எல்லா மக்களும் பின்பற்ற வந்து விடுவார்கள் என்பதில் சிறிதும் ஐயப்படவேண்டியதே யில்லை, உண்மையிலேயே உலக மக்களிடம் சமூக சமத்துவத்தை உண்டாக்கக்கூடி

யது நமதுஇயக்கத்தைத்தவிர வேறு ஒன்றும் இல்லை.

இறுதியாக ஒன்றுசொல்லி முடித்துவிடுகிறேன். இப்பொழுது நமது இயக்கத்தலைவர்களாகிய தோழர் ஈ. வெ. ராமசாமியும், எஸ். ராமநாதன் அவர்களும் மேல்நாடுகளில் சுற்றுப்பிரயாணம் பண்ணிக்கொண்டிருக்கின்றார்கள். கூடிய சீக்கிரம் அவர்களும் திரும்பிவந்துவிடக் கூடும். நமது தலைவர்கள் மேல்நாட்டுச்சுற்றுப் பிரயாணத்திற்குப் புறப்பட்டவுடன் நமதுஎதிரிகளில் அனேகர்இனிச்சுயமரியாதை இயக்கம் அழிந்துவிடும் என்றும் கூறிக்களிகூர்ந்தனர். ஆனால் அவர்கள் கூற்றுக்கு மாறாக நமது இயக்கம் வளர்ச்சியடைந்துவருகின்றதேயன்றிகுறையவில்லை என்பதைக்கண்டு இப்பொழுது அவர்களும் வாயடங்கிவிட்டனர்.

தோழர்களே! இதுகாறும்நாம் அடைந்து வந்திருக்கும் வெற்றியைக்கண்டு சந்தோஷமடைவதுடன் பேசாமலிருக்காமல் மேலும் மேலும் ஊக்கத்தோடு நமது இயக்கத்தைப்பிரசாரம் பண்ணுவதன் மூலந்தான் நமது நோக்கங்கள் நிறைவேறக்கூடும். நமது நோக்கங்களில் இன்னும் இலட்சத்தில் ஒருபங்குகூட நிறைவேறவில்லை. ஆகையால் நாம் இதற்குள் மகிழ்ச்சியும் திருப்தியும் அடைந்துவிடக்கூடாது. போதுமென்ற மனமே பொன் செய்யுமருந்து என்ற சோம்பேரிப்பழமொழியை ஒதுக்கித்தள்ளி அளவு கடந்தஎழுச்சியுடனும், அவாவுடனும் நமது கோரிக்கைகளுக்காக உழைக்க வேண்டியதே நமது கடமையென்று கூறிமுடிக்கின்றேன்.

கடைசியாக உங்கள்பல வேலைகளையும் விட்டுவிட்டு மிகுந்த சிரமத்துடன் இவ்வேரில் காலத்தில் சுயமரியாதைக் கொள்கைகளில் உள்ள நம்பிக்கைகாரணத்தாலும், இக்கொள்கைகளுக்காகத் தியாகம் பண்ணவேண்டுமென்ற ஆசையினாலும் இங்கு வந்துகூடியிருக்கும் உங்களுக்கெல்லாம் எனது வந்தனத்தைத்தெரிவித்துக் கொள்ளுகிறேன். உங்களுக்காக நாங்கள் செய்திருக்கும் ஏற்பாடுகளில் உள்ள குறைகளையெல்லாம் பொறுத்துக் கொள்ளுமாறும் வேண்டிக்கொள்ளுகின்றேன்.

தேசியப்பார்ப்பனரில்

பூணூலை அறுத்தவர்

எத்தனை பேர்?

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மதிப்புக்கொடுக்கமாட்டீர்களென நம்புகின்றேன். மேலும் சுயமரியாதைக்கொள்கைகளுக்கு வியாக்யானம் கூறுவதென்பது எம் தவறு. சுயமரியாதைக்கொள்கைகள் வெளிப்படையானவை. ஜாதியிலோ, மதத்திலோ, பிறப்பிலோ, கல்வியிலோ, பொருளிலோ, ஏற்பட்டிருக்கும் சகல வித்தியாசங்களையும் வேரோடழித்துச் சமதர்மத்தை, சமத்துவத்தை, சகோதரத்துவத்தை, மனிதத்தன்மையை விருத்தி செய்து உலக இன்பத்தைச் சகலரும் சமமாய் அனுபவிக்கச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவது என்பதே சுயமரியாதை இயக்கத்தின் மூலாதாரக் கொள்கைகள் என மீண்டும் வற்புறுத்திக்கூறுகின்றேன். இவைகளுக்குப் புறம்பானவைகளெவைகளாயினும் சரி அவைகளையெல்லாம் சுயமரியாதை இயக்கம் புறக்கணிக்கத்தான் செய்யுமென்பதையுமுறுதியுடன் கூறுகின்றேன். இவ்வழியில் இக்கொள்கைகளை நிலைநாட்டுவதற்காக நூற்றுக்கணக்கான சுயமரியாதைத் தோழர்கள் தங்கள் உயிரையும் கொடுத்துதவத் தயாராயிருக்கின்றனர் என்பது என் திண்ணம்.

தோழர்களே! இம்மாதிரியான சந்தர்ப்பம் எனக்களித்தற்கு மீண்டுமொரு முறை எனது சந்தோஷத்தைத் தெரிவித்துக்கொண்டு இன்னும் ஏதாவது கூற வேண்டுமாயின் எனது முடிவுரையில் அவைகளை கூறுகின்றேனென்ற உறுதியுடன் எனதுபிரசங்கத்தைமுடிக்கின்றேன்.

உங்கள்

கண்ணையும்

காதையும்

கவனித்துக் கொள்ளுங்கள்

பூவிழல்!!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

செவிடு!!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

"Sri" Works

Beadon St Calcutta.

டாக்டர் சிங்காரம் அவர்களால் தயார் செய்யப்படும்

கெந்தக நெய்.

சாஸ்திர முறைப்படி தயார் செய்யப்பட்டது

சிறு பிள்ளை முதல் சாப்பிடலாம்

இம்மருந்துக்கு யாதொரு பத்தியமில்லை

இம்மருந்தால் குணமாகும் நோய்கள்.

செம்மேகம், கருமேகம், மேக ஊரல், தடிப்புடன்கூடிய மேகப் படைகள் கண்டமாலை, விப்புருதி கட்டிகள், வலி குன்மம், கிரந்தி, குஷ்டம், லிங்கப்புற்று, சூலை கணுச்சூலை, பாரிச வாய்வு, முடக்கு வாய்வு, சர்மத்தில் ஸ்பரிச உணர்ச்சியில்லாதிருத்தல், கை, கால், பிடிப்பு மதமதப்பு திமிர்வாய்வு, புண், புறைகள் ஆராதரணங்கள், நரப்பு பிடிப்பு முதலிய பலவித கடின நோய்களை குணம் செய்யும். இரத்தத்திலுள்ள எவ்வித துர் நீரையும் போக்கி சரீரத்திற்கு நல்ல தேஜஸைக்கொடுக்கும்.

60 வேளை மருந்து விலை ரூ. 10—0—0

20 ,, ,, 4—0—0

உபயோகித்தவர்கள் சொல்வதைக்கவனியுங்கள்.

K. ஸ்ரீனிவாசராவ் அவர்கள் நேடிவ் டாக்டர் ஆஞ்சநேயவிலாஸ் மெடிக்கல் ஹால், அக்கரை கோட்டகம், தஞ்சாவூர்.

தாங்கள் அனுப்பிய கெந்தக நெய்யை உள்ளுக்குச் சாப்பிடவும், மகாசந்தனாதித்தைலத்தை ஸ்நானம் செய்யவும் எஸ். முருகேசன் என்பவருக்கு கொடுத்தேன் அவருக்கு ஒரு வருஷ காலமாக தேக முழுவதும் ஒரு பைசா பிரமாணம் வட்டம் வட்டமாய் செம்மேக தடிப்புகள் இருந்ததும், அதில் நீர்வடிகிறதும், துர்நாற்றம் வீசுகிறதும் பார்ப்பவர்களுக்கு அருவருப்பை உண்டுபண்ணுகிறதுமாயிருந்தது. அனேக இங்கிலீஷ், தமிழ், யுனானி முதலிய பலவித மருந்துகள் சாப்பிட்டும் குணமடையாது கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தவர் மேல்கண்ட தங்கள் மருந்துகளை உபயோகித்த பதினைந்து தினத்திற்கு [illegible] கொடுமையான வியாதிகளெல்லாம் பூரண சுகமானது. அதனால் தங்கள் மருந்துகளின் பெருமையும் என் பெயரும் இவ்விடத்தில் விளங்கி வருகின்றது.

மு. சந்தியதாஸ், மெடிகல் எவான்சலிஸ்ட்,

கல்லடிபட்டி, மதுரை.

தங்களின் கெந்தக நெய்யால் மானாமதுரை குஷ்டரோக ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறமுடியாமல் திருப்பி அனுப்பிவிடப்பட்ட நோயாளியின் செம்மேக வியாதியைப் போக்கி நல்ல சுகத்தைக் கொடுத்தது. தங்கள் மருந்து மிகவும் சிறந்ததென்று என் வைத்திய அனுபோகத்தில் அறிந்து தங்களுக்கு என் நன்றியறிதலான வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம், மலாய் நாட்டுவாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவும்.

டி. சி. சிங்காரம் அண்டு கோ.,

சித்த-ஆயுர்வேத வைத்தியசாலை, தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினாப்பள்ளி.

Read the

"SUPERSTITION OF KHADI"

A Discussion
By
S. Ramanathan
Pattabhi Sitharamyya
& N. S. Varadachari
in English.

Published by Kudi Arasu Publishing House, Erode.

Price per copy two annas. Send 0-3-0 annas postage stamps for a single copy.

Apply to:—
Manager "Kudi Arasu" Erode.

"சாமிகளின் அடிமை"

"இந்திய மாதா" என்னும் நூலை இயற்றிய மிஸ். மேயோவால் எழுதப்பட்ட ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. இதில் ஹிந்துக்கள் என்போரின் கடவுள், மதம் என்பவற்றின்பேரால் அநுஷ்டித்துவரும் கொடிய, அநாசாரபழக்கவழக்கங்களைக்கண்டுணரலாம், இனிய தமிழ், எளியநடை, ருசிகர கதைகள்.

அசல் விலை ரூ. 1—8—0.

இப்போதைய விலை ரூ. 0—12—0.

கிடைக்குமிடம்:—

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

திருக்குறள் ஆராய்ச்சியும் ஜைன சமய சித்தாந்த விளக்கமும்

குறளைப்பற்றிப்பல பண்டிதர்களுக்கேற்பட்ட சந்தேக நிவர்த்தி நூல்

திருக்குறளாசிரியர் திருவள்ளுவரல்லர்.

பரிமேலழகர் உரை பல பொருந்தாதனவைகளே

இந்நூலின்கண் குறளாசிரியர்எலாச்சாரியாரென்னும் ஜைன மகாமுனிவர் என்பதையும் கடவுள் வாழ்த்து பத்தும் ஆதி பகவான் என்னும் அருகக்கடவுளின் தன்மையைச் சார்ந்தவைகளேயன்றி ஏனைய மதத்தினர் கூறும் கடவுள் தன்மைக்கு பொருந்தாதன வென்பதையும் நிரூபித்து, ஜைன சமய சித்தாந்தங்களையே நிறைத்துள்ளாரென்பதையும் விளக்கி தொல்காப்பியர், அகத்தியர், இறையனாரகப் பொருளாசிரியர் ஆகியவர்களும் ஜைனர்களேயென்றும் நடுநிலைமையோடு நூற்றுக்கணக்கான வடமொழி தென்மொழி மேற்கோள் நூல்களால் மிக்க விரிவாக எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன.

இப்புத்தகம் 500 பக்கங்களுள்ளது. இதன் விலை ரூ. 2—0—0

கிடைக்குமிடங்கள்:—

தி. அ. அனந்தநாத நயினர் & சன்ஸ்
பட்டு ஜவுளி வியாபாரம்,
ஆடிசன்பேட்டை, காஞ்சிபுரம்.

தி. ஆதிநயினர்,
21, பாரிஷ் வெங்கடாஜலய்யர் தெரு,
ஜி. டி. சென்னை.

தமிழ் நாட்டு பெற்றோர்களே!

முந்துங்கள்! முந்துங்கள்!!

மெட்ரிக்குலேஷன் அறிவை

தங்கள் பிள்ளைகள் நேரில் படித்துப் பெற சந்தர்ப்பமில்லாவிடின் தொழில் செய்து கொண்டே தபால் மூலம் ஸ்பெஷல் மெட்ரிக்கோர்ஸ்களை வாசித்து முடிக்கலாம். இஷ்டப்படின் சர்க்கார் கே. சீனியர் பாலாகி காலேஜில் சேரலாம். லோயர், ஹையர் கிரேட் உபாத்தியாயர்கள் S. S. L. C. தவறியவர்களுக்கு அதிக பிரயோஜனமானது. நமது மாணவர்களின் வெற்றி, K, சீனிவாசகன் (ஹையர் கிரேட்) IV பாரம் படித்தவர்கடந்த கே.சீனியர்பாஸ்செய்து சக்கண்டரியாக மாற்றப் போகிறார். Dr. H. S. சுப்ரமணியம் 4 மாதங்களில் பாலாகி கடைசி 2 வருஷ M. B. B. S. படிக்கப் போகின்றார். மற்ற விபரத்திற்கு உடன் எழுதவும்.

டைரக்டர்,

அன்பைபன்ஸ் கேம்பிரிட்ஜ் இன்ஸ்டிடியூட்,
(தலைமை ஆபீஸ்) ஆறுமுகநேரி S. I. R.

சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1330 ஆம் வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன்கூடியது)

M, S பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L,

அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.

விலை ரூபா 2—0—0. வி பி செலவு ரூ. 0—5—0.

மானேஜர்,

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

அச்சாபீஸ் மிஷின் விற்பனை.

நமது ஆபீசுக்கு பெரிய மிஷின்கள் வரவழைத்து விட்டபடியால் தற்காலம் நல்ல கண்டிஷனில் மிக சுத்தமாக வேலை செய்து கொண்டிருக்கும் அடியில்கண்ட மிஷின்களை விற்று விடப்படும்.

டபுள் கிரவுன் சிலிண்டர் மிஷின் 1,

டிம்மி சிலிண்டர் மிஷின் 1.

உபயோகப் படுத்தப்பட்டு நல்ல நிலைமையிலுள்ள இங்கிலீஷ், தமிழ் போஸ்டர் டைப்கள்; பல ரகங்கள்.

நேரில் வந்து பார்த்து முடித்துக்கொள்ளலாம். மானேஜர்.

குமரன் பிரஸ் காஞ்சீபுரம்.

குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இங்கட்டுரைகளைப் படிப்பதால் அனேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டிதராகலாம். இதன் விலை அணா. 0—8—0

இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்விகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோத்தியா காண்டம் அணா. 0—8—0

ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச்சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரிகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

மநுநீதி மருமம்.

இது மநு தரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தியுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணா. 0—2—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப் பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலியவைகளின் சூள்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம்.
இதன் விலை அணா. 0—2—0

சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, ஏழை பணக்காரக் கொடுமை முதலியவற்றைக் கண்டித்துக் கூறப்பட்டிருக்கிறது. இனிய பாடல் எளிதில் பொருள் விளங்கும்.
இதன் விலை அணா. 0—2—0

சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப்பனர்களும், புரோகிதர்களும் ஜனசமூகத்தை ஏமாற்றுவது தான்சோதிடமென்பதையும் இனிமையான சுலபமான-பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா. 0—2—0

ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும்.
இதன் விலை அணா. 0—2—0.

சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக் கொள்கைகளை விளக்கி, இனிமையான புதிய வர்ணமெட்டுகளில் பாடிய பாடல்கள் அடங்கியுள்ளன.
இதன் விலை அணா 0—2—0.

தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 0—3—0

பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணா 0—4—0

மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்— நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.
இதன் விலை அணா 0—3—0

அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரத்திரப் புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.
இதன் விலை அணா 0—2—0

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0 2—0

கதர்-மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு. எஸ், ராமநாதன் அவர்கள் கதரைப்பற்றிச் செய்த உபந்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீத்தாராமையாவும், என். எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவைகளுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணரலாம்.

இதன் விலை அணா 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.